Digitization by eGangotri-South Center

ஸ்ரீ:

ஆழ்வார்கள் வாழி   அருளிச்செயல் வாழி

ஆழ்வார்களின்
திவ்யப் பிரபந்த திரட்டு



...வெளியிடுவோர்...

மதுரகவி ஆழ்வார் ஸ்ரீ வைணவ பரிபாலன சபை

செஞ்சி வட்டம், விழுப்புரம் மாவட்டம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

திவ்ய பிரபந்த திரட்டு

ஸ்ரீராமாநுஜரின் ஆயிரமாவது ஆண்டு விழா வெளியீடு

நூல் தொகுப்பு :

ஜெ.தீனதயாளராமானுஜதேசிகதாசர்

சென்னை-89.

நூல் வெளியீடு :

ஸ்ரீமதுரகவி ஆழ்வார் வைணவ பரிபாலன சபை

செஞ்சி-604202. விழுப்புரம் மாவட்டம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடியேன் விண்ணப்பம்

பேராளன் பேரோதும் பாகவதோத்தமர்களுக்கு, அடியேன் தாளும் தடக்கையும் கூப்பி தண்டன் சமர்ப்பித்துக்கொள்கிறேன். 01-05-2017 ஜெகதாச்சார்யார் இராமானுஜரின் ஆயிரமாவது திருநட்சத்திர வைபவத்தை உலகமே கொண்டாடி கொண்டிருக்கும் வேளையில் அவருடைய தாசர்களாகிய நாமும் அவர் செய்த வைணவப்பணியை (ஆழ்வார்களின் ப்ரபந்தங்களை அனைவரும் அறியவேண்டும் என்ற அவாவினை) நாமும் தொடர்ந்து செய்ய வேண்டும் என்ற நோக்கமே இந்நூல் வெளிவர காரணமாய் அமைந்தது. அடியேனும் பஜனை சேவிக்கும் பாகவத கோஷ்டிகளுள் ஒருவன் என்பதால், பஜனை சேவிக்கும் போது முதலாயிரம், இரண்டாமாயிரம் ஆகிய இரண்டு புத்தகமோ (அ) நாலாயிர திவ்யப்பிரபந்தமோ, கையில் வைத்துக் கொண்டு சேவிப்பது சிரமமாக இருக்கும். அதை தவிர்ப்பதற்காகவே அடியேன் பஜனையில் சேவிக்கும் பாசுரங்களை மட்டும் தொகுத்து 1000 பிரதிகள் வெளியிடுகிறேன். 120 ஆண்டுகள் வாழ்ந்து வைணவத்தை பொலிவு பெற செய்த **வைணவ விடிவெள்ளி "பகவத் ராமானுஜர்"** புத்தகத்தை தொடர்ந்து இந்நூலை வெளியிடுகிறேன். தமது 75வது வயதிலும் அயராது தொண்டாற்றி வரும் செஞ்சி ஸ்ரீமதுரகவியாழ்வார் சபையின் நிர்வாகியும் பொருளாளருமான ஸ்ரீமாந். வி.ஜெயராமராமானுஜதேசிகதாசர் (அடியேனுடைய திருத் தகப்பனார்) அளித்து வரும் ஊக்கமே இந்நூல் வெளிவர காரணமாக அமைந்தது. இந்நூல் 28ஆம் ஆண்டு மதுரகவி ஆழ்வார் ஸ்ரீவைணவ மாநாட்டில் வெளியிடப்படுகிறது. இந்நூலை அனைத்து பாகவதோத்தமர்களும் படித்து பயன் பெற வேணுமாய் பிராத்திக்கிறேன்.

அடியேன்

பகவத் பாகவத பாததூளி

ஜெ.தீனதயாளராமானுஜதேசிகதாசர்

எண்.29, குப்புசாமி தெரு

பூத்தபேடு, இராமாபுரம்,

சென்னை-600089

செல்: 9840644896

இடம் : செஞ்சி

நாள் : 23-04-2017

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செய்யுள் முதற்குறிப்பு அகராதி

பாசுரம்	பக்கம்
திருப்பல்லாண்டு	7
வண்ணமாடங்கள்	8
சீதக்கடல்	10
மாணிக்கங்கட்டி	12
வெண்ணெயளந்த	14
ஆநிரை	15
வெண்ணெய்விழுங்கி	16
நெறிந்தகருங்குழல்	19
நாவகாரியம்	20
ஆசைவாய்	21
மரவடியை	24
துப்புடையாரை	26
வாக்குத்தூய்மை	29
துக்கச்சுழலையை	31
சென்னியோங்கு	32
திருப்பாவை	34
வாரணமாயிரம்	41
இருளரிய	43
தேட்டருந்திறல்	46
மெய்யில்வாழ்க்கையை	47
ஊனேறு	48
தருதுயரந்தடாயேல்	49
மன்னுபுகழ்	51
அங்கணெடுமதின்	52
திருமாலை	55
திருப்பள்ளியெழுச்சி	61
அமலனாதிபிரான்	63
கண்ணிநுண்சிறுத்தாம்பு	65
வாடினேன்	67
முற்றமூத்து	70
வாணிலாமுறுவல்	71
தாயேதந்தை	73
விற்பெருவிழவும்	75
மஞ்சாடு	77
ஏழையேதலன்	79
மங்களாசாசனபாடல்	82
சாற்றுமுறை	82
நாமாவளி பாடல்	85

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருமண்காப்பு அணிந்ததும் அநுஸந்திக்க வேண்டியவை

இடம்	திருமண்மந்திரம்	ஸ்ரீ சூர்ணமந்திரம்
நெற்றி	கேசவாய நம :	ச்ரியை நம :
நடுவயிறு	நாராயணாய நம:	அம்ருதோத்பவாயை நம:
மார்பு	மாதவாய நம:	கமலாயை நம:
கழுத்துப்புறம்	கோவிந்தாய நம:	சந்த்ரஸோதர்யை நம:
வலவயிறு	விஷ்ணுவே நம:	விஷ்ணுபத்ந்யை நம:
வலக்கை	மதுஸூதனாய நம:	வைஷ்ணவ்யை நம:
வலக்கழுத்து	த்ரிவிக்ரமாய நம:	வராரோஹாயை நம:
இடவயிறு	வாமனாய நம:	ஹரிவல்லபாயை நம:
இடக்கை	ஸ்ரீதராய நம:	சார்ங்கிண்யை நம:
இடக்கழுத்து	ஹ்ருஷீகேசாய நம:	தேவதேவ்யை நம:
அடிமுதுகு	பத்மநாபாய நம ;	மஹாலக்ஷ்ம்யை நம:
பின் கழுத்து	தாமோதராய நம:	லோகஸுந்தர்யை நம:
சிரஸ்	வாஸுதேவாய நம:	ஸர்வாபீஷ்ட பலப்ரதாயை நம:

1. அஸ்மத் குருப்யோ நம:
2. அஸ்மத் பரமகுருப்யோ நம:
3. அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
4. ஸ்ரீமதே வேதாந்தகுரவே நம:
5. ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
6. ஸ்ரீமஹாபூர்ணாய நம:
7. ஸ்ரீமத் யாமுன முனயே நம:
8. ஸ்ரீராம மிச்ராய நம:
9. ஸ்ரீ புண்டரீகாக்ஷாய நம:
10. ஸ்ரீமந் நாதமுனயே நம:
11. ஸ்ரீமதே சடகோபாய நம:
12. ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:
13. ச்ரியை நம :
14. ஸ்ரீதராய நம:

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஸ்மத் தேசிகம் அஸ்மதீய பரமாசார்யாந் அசேஷாந் குருந் ஸ்ரீமத் லக்ஷ்மணயோகி புங்கவ மஹாபூர்ணௌ முநிம் யாமுநம் ராமம் பத்மவிலோசநம் முநிவரம் நாதம் சடத்வேஷிணம் ஸேநேசம் ச்ரியம் இந்திரா ஸஹஸ்ரம் நாராயணம் ஸம்ச்ரயே !!

என்னுயிர் தந்தளித்தவரைச் சரணம் புக்கு
யானடைவேன் அவர்குருக்கள் நிரை வணங்கிப்
பின்னருளால் பெரும்பூதூர் வந்த வள்ளல்
பெரியநம்பி ஆளவந்தார் மணக்கால்நம்பி
நன்னெறியை அவர்க்குரைத்த உய்யக்கொண்டார்
நாதமுனி சடகோபன் சேனைநாதன்
இன்னமுதத் திருமகள் என்றிவரை முன்னிட்டு
எம்பெருமான் திருவடிகள் அடைகின்றேனே.

பொய்கை முநி பூதத்தார் பேயாழ்வார் தண்
பொரு நல்வரும் குருகேசன் விஷ்ணு சித்தன்
துய்யகுலசேகரன் நம்பாண நாதன்
தொண்டரடிப்பொடி மழிசை வந்த சோதி
வையமெலாம் மறைவிலங்க வாள்வேலேந்தும்
மங்கையர் கோன் என்றிவர்கள் மகிழ்ந்து பாடும்
செய்யத் தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதி
தெளியாத மறை நிலங்கள் தெளிகின்றோமே!



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீ

ஸ்ரீமதே ராமாநுஜாய நம

ஆழ்வார் திருவடிகளே சரணம்
தேசிகன் திருவடிகளே சரணம்.

தனியன்கள்

ஸ்ரீவேதாந்த தேசிகன் தனியன்

ராமாநுஜதயாபாத்ரம் ஜ்ஞாந வைராக்யபூஷணம்!
ஸ்ரீமத்வேங்கடநாதார்யம் வந்தே வேதாந்ததேசிகம்!!

மணவாள மாமுநிகள் தனியன்

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்னவம்!
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்!!

குருபரம்பரைத் தனியன்

லக்ஷ்மீநாத ஸமாரம்பாம் நாத யாமுன மத்யமாம்!
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம்!!

எம்பெருமானார் (உடையவர்) தனியன்

யோநித்யமச்யுத பதாம்புஜ யுக்ம ருக்ம!
வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாயமேநே!
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைக ஸிந்தோ:
ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே!!

நம்மாழ்வார் தனியன்

மாதாபிதா யுவதயஸ் தநயா விபூதிஸ்!
ஸர்வம் யதேவ நியமேந மத்ந்வயாநாம்!
ஆத்யஸ்யந: குலபதேர் வகுளாபிராமம்!
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா!!

ஆழ்வார்கள், உடையவர் தனியன்

பூதம் ஸரஸ்ச மஹதாஹ்வய பட்டநாத!
ஸ்ரீ பக்திஸார குலசேகர யோகி வாஹாந்!
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந்!
ஸ்ரீ மத்பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெரியாழ்வார் திருமொழித் தனியன்கள்

குருமுகம் அநதீத்ய ப்ராஹ வேதாந் அசேஷாந்!
நரபதி பரிக்லுப்தம் சுல்கம் ஆதாது காம:!
ச்வசுரம் அமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத்!
த்விஜ குலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி!!

மின்னார் தடமதிள்சூழ் வில்லிபுத்தூரென்று* ஒருக்கால்
சொன்னார் கழற்கமலம் சூடினோம்*– முன்னாள்
கிழியறுத்தான் என்றுரைத்தோம்* கீழ்மையினிற்சேரும்
வழியறுத்தோம் நெஞ்சமே! வந்து.

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று*
ஈண்டியசங்கம் எடுத்தூத* – வேண்டிய
வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான்*
பாதங்கள் யாமுடைய பற்று.

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்

திருப்பல்லாண்டு

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு பலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்தோள் மணிவண்ணா உன்சேவடி செவ்வி திருக்காப்பு 1

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே .2

வாழாட்பட்டு நின்றீருள்ளீரேல் வந்து மண்ணும் மணமுங்கொண்மின்*
கூழாட்டுநின்றீர்களை எங்கள் குழுவினில் புகுதலொட்டோம் *
ஏழாட்காலும் பழிப்பிலோம் நாங்கள் இராக்கதர்வாழ் இலங்கை*
பாழாளாகப் படைபொருதானுக்குப் பல்லாண்டு கூறுதுமே . 3

ஏடுநிலத்தில் இடுவதன் முன்னம் வந்து எங்கள் குழாம் புகுந்து*
கூடும் மனமுடையீர்கள் வரம்பொழி வந்தொல்லைக் கூடுமினோ*
நாடும்நகரமும் நன்கறிய நமோ நாராயணாய என்று*
பாடும்மனமுடைப் பத்தருள்ளீர்! வந்து பல்லாண்டு கூறுமினே . 4

அண்டக் குலத்துக்கு அதிபதியாகி அசுரர் இராக்கதரை*
இண்டைக் குலத்தை எடுத்துக் களைந்த இருடீகேசன்தனக்கு*
தொண்டக் குலத்திலுள்ளீர் வந்தடிதொழுது ஆயிரநாமம் சொல்லி*
பண்டைக் குலத்தைத் தவிர்ந்து பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்மினே .5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எந்தை தந்தை தந்தை தந்தைதம் மூத்தப்பன் ஏழ்படிகால் தொடங்கி*
வந்து வழிவழி ஆட்செய்கின்றோம்* திருவோணத் திருவிழவில்*
அந்தியம் போதில் அரி உருவாகி அரியை அழித்தவனை*
பந்தனை தீரப் பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்று பாடுதுமே .6

தீயிற் பொலிகின்ற செஞ்சுடராழி திகழ் திருச்சக்கரத்தின்*
கோயிற் பொறியாலே ஒற்றுண்டு நின்று குடிகுடி ஆட்செய்கின்றோம்*
மாயப் பொருபடை வாணனை ஆயிரம் தோளும் பொழிகுருதி
பாய* சுழற்றிய ஆழி வல்லானுக்குப் பல்லாண்டு கூறுதுமே . 7

நெய்யிடை நல்லதோர் சோறும் நியதமும் அத்தாணிச் சேவகமும்*
கையடைக்காயும் கழுத்துக்குப் பூணொடு காதுக்குக் குண்டலமும்*
மெய்யிட நல்லதோர் சாந்தமும் தந்து என்னை வெள்ளுயிர் ஆக்கவல்ல*
பையுடை நாகப்பகைக் கொடியானுக்குப் பல்லாண்டு கூறுவனே. 8

உடுத்துக் களைந்த நின் பீதகவாடை உடுத்துக் கலத்ததுண்டு*
தொடுத்த துழாய்மலர் சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம்*
விடுத்த திசைக்கருமம் திருத்தித் திருவோணத் திருவிழவில்*
படுத்த பைந்நாகணைப் பள்ளி கொண்டானுக்குப் பல்லாண்டு கூறுதுமே . 9

எந்நாள்எம் பெருமான் உன்தனக்கு அடியோம் என்று எழுத்துப்பட்ட
அந்நாளே * அடியோங்கள் அடிக்குடில் வீடு பெற்று உய்ந்ததுகாண்
செந்நாள் தோற்றித் திருமதுரையுள் சிலை குனித்து ஐந்தலைய
பைந்நாகத் தலைப் பாய்ந்தவனே உன்னைப் பல்லாண்டு கூறுதுமே . 10

**அல்வழக்கு ஒன்றுமில்லா அணி கோட்டியர்கோன் அபிமானதுங்கன்*
செல்வனைப் போலத் திருமாலே! நானும் உனக்குப் பழவடியேன்*
நல்வகையால் நமோ நாராயணா என்று நாமம் பல பரவி*
பல்வகையாலும் பவித்திரனே உன்னைப் பல்லாண்டு கூறுவனே. 11

**பல்லாண்டென்று பவித்திரனைப் பரமேட்டியை* சார்ங்கம் என்னும்
வில்லாண்டான் தன்னை வில்லிபுத்தூர் விட்டுசித்தன் விரும்பிய சொல்*
நல்லாண்டென்று நவின்று உரைப்பார் நமோ நாராயணாய என்று*
பல்லாண்டும் பரமாத்மனைச் சூழ்ந்து இருந்து ஏத்துவர் பல்லாண்டே 12

1.1.. வண்ணமாடங்கள்

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்*
எண்ணெய் சுண்ணம் எதிரெதிர் தூவிட*
கண்ணன் முற்றம் கலந்தள றாயிற்றே 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஓடுவார், விழுவார், உகந்தாலிப்பார்*
நாடுவார், நம்பிரான் எங்குத்தான் என்பார்*
பாடுவார்களும் பல்பறை கொட்டநின்று*
ஆடுவார்களும் ஆயிற்றாய்ப் பாடியே . 2

பேணிச் சீருடைப் பிள்ளை பிறந்தினில்*
காணத் தாம்புகுவார், புக்குப் போதுவார்*
ஆணொப்பார் இவன் நேரில்லைகாண்* திரு
வோணத்தான் உலகாளும் என்பார்களே 3

உறியை முற்றத் துருட்டிநின்றாடுவார்*
நறுநெய் பால்தயிர் நன்றாகத் தூவுவார்*
செறிமென் கூந்தல் அவிழத் திளைத்து* எங்கும்
அறிவழிந்தனர் ஆய்ப்பாடி யாயரே. 4

கொண்ட தாளுறி கோலக் கொடுமழு*
தண்டினர், பறியோலைச் சயனத்தர்*
விண்ட முல்லை யரும்பன்ன பல்லினர்*
அண்டர் மிண்டிப் புகுந்து நெய்யாடினார். 5

கையும் காலும் நிமிர்த்துக் கடாரநீர்*
பைய ஆட்டிப் பசுஞ்சிறு மஞ்சளால்*
ஐய நாவழித் தாளுக்கங் காந்திட*
வையம் ஏழும்கண்டாள்பிள்ளை வாயுளே . 6

வாயுள் வையகம் கண்ட மடநல்லார்*
ஆயர் புத்திரன் அல்லன் அருந்தெய்வம்*
பாய சீருடைப் பண்புடைப் பாலகன்*
மாயன் என்று மகிழ்ந்தனர் மாதரே. 7

பத்து நாளும் கடந்த இரண்டாம்நாள்*
எத்தி சையும் சயமரம் கோடித்து*
மத்த மாமலை தாங்கிய மைந்தனை*
உத்தானம் செய்துகந்தனர் ஆயரே. 8

கிடக்கில், தொட்டில் கிழிய உதைத்திடும்*
எடுத்துக் கொள்ளில், மருங்கை யிறுத்திடும்*
ஒடுக்கிப் புல்கில், உதரத்தே பாய்ந்திடும்*
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன், நங்காய்,! 9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செந்நெலார்வயல் சூழ்திருக் கோட்டியூர்
மன்னு நாரணன் நம்பி பிறந்தமை*
மின்னு நூல்விட்டு சித்தன் விரித்த*இப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே. 10

1.2..சீதக்கடல்

சீதக் கடல்உள்ளமுதன்ன தேவகி
கோதைக் குழலாள் அசோதைக்குப் போத்தந்த*
பேதைக் குழவி பிடித்துச் சுவைத்துண்ணும்*
பாதக் கமலங்கள் காணீரே, பவளவாயீர்!வந்து காணீரே! 1

முத்தும் மணியும் வயிரமும் நன்பொன்னும்*
தத்திப் பதித்துத் தலைப்பெய்தாற் போல்எங்கும்*
பத்து விரலும் மணிவண்ணன் பாதங்கள்*
ஒத்திட் டிருந்தவா காணீரே, ஒண்ணுதலீர்!வந்து காணீரே! 2

பணைத்தோள் இளஆய்ச்சி பால்பாய்ந்த கொங்கை*
அணைத்தார உண்டு கிடந்தஇப்பிள்ளை*
இணைக்காலில் வெள்ளித் தளைநின் றிலங்கும்*
கணைக்காலிருந்தவா காணீரே, காரிகையீர்!வந்து காணீரே! 3

உழந்தாள் நறுநெய் ஓரோர்தடா வுண்ண*
இழந்தாள் எரிவினால் ஈர்த்து எழில்மத்தின்*
பழந்தாம்பால் ஓச்சப் பயத்தால் தவழ்ந்தான்*
முழந்தாள் இருந்தவா காணீரே, முகிழ்முலையீர்!வந்து காணீரே! 4

பிறங்கிய பேய்ச்சி முலைசுவைத் துண்டிட்டு*
உறங்குவான் போலே கிடந்தஇப்பிள்ளை*
மறங்கொள் இரணியன் மார்பை முன்கீண்டான்*
குறங்குகளை வந்துகாணீரே, குவிமுலையீர் ! வந்துகாணீரே! 5

மத்தக் களிற்று வசுதேவர் தம்முடை*
சித்தம் பிரியாத தேவகி தன்வயிற்றில்*
அத்தத்தின் பத்தாம்நாள் தோன்றிய அச்சுதன்*
முத்தம் இருந்தவா காணீரே, முகிழ்நகையீர்!வந்து காணீரே! 6

இருங்கை மதகளிறு ஈர்க்கின்றவனை*
பருங்கிப் பறித்துக்கொண்டோடு பரமன்தன்*
நெருங்கு பவளமும் நேர்நாணும் முத்தும்*
மருங்கும் இருந்தவா காணீரே,வாணுதலீர்!வந்து காணீரே! 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வந்த மதலைக் குழாத்தை வலிசெய்து*
தந்தக் களிறுபோல் தானே விளையாடும்*
நந்தன் மதலைக்கு நன்றும் அழகிய*
உந்தி யிருந்தவா காணீரே, ஒளியிழையீர்!வந்து காணீரே! 8

அதிரும் கடல்நிற வண்ணனை *ஆய்ச்சி
மதுர முலையூட்டி வஞ்சித்து வைத்து*
பதறப் படாமே பழந்தாம்பால் ஆர்த்த*
உதரம் இருந்தவா காணீரே, ஒளிவளையீர்!வந்து காணீரே! 9

பெருமா உரலிற் பிணிப்புண்டிருந்து*அங்
கிருமா மருதம் இறுத்த இப்பிள்ளை*
குருமா மணிப்பூண் குலாவித் திகழும்*
திருமார் பிருந்தவா காணீரே, சேயிழையீர்!வந்து காணீரே! 10

நாள்களோர் நாலைந்து திங்கள் அளவிலே*
தாளை நிமிர்த்துச் சகடத்தைச் சாடிப்போய்*
வாள்கொள் வளையெயிற்று ஆருயிர் வவ்வினான்*
தோள்கள் இருந்தவா காணீரே, சுரிகுழலீர்!வந்து காணீரே! 11

மைத்தடங் கண்ணி யசோதை வளர்க்கின்ற*
செய்த்தலை நீல நிறத்துச் சிறுப்பிள்ளை*
நெய்த்தலை நேமியும் சங்கும் நிலாவிய*
கைத்தலங் கள்வந்து காணீரே, கனங்குழையீர்!வந்து காணீரே! 12

வண்டமர் பூங்குழல் ஆய்ச்சி மகனாகக்
கொண்டு*வளர்க்கின்ற கோவலக் குட்டற்கு*
அண்டமும் நாடும் அடங்க விழுங்கிய*
கண்டம் இருந்தவா காணீரே! காரிகையீர்!வந்து காணீரே! 13

எந்தொண்டை வாய்ச்சிங்கம் வாவென்றெடுத்துக் கொண்டு*
அந்தொண்டை வாயமு தாதரித்து* ஆய்ச்சியர்
தந்தொண்டை வாயால் தருக்கிப் பருகும் *இச்
செந்தொண்டை வாய்வந்து காணீரே, சேயிழையீர்! வந்து காணீரே! 14

நோக்கி யசோதை நுணுக்கிய மஞ்சளால்*
நாக்கு வழித்துநீராட்டும் இந்நம்பிக்கு*
வாக்கும் நயனமும் வாயும் முறுவலும் *
மூக்கும் இருந்தவா காணீரே, மொய்குழலீர்!வந்து காணீரே! 15

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

விண்கொள் அமரர்கள் வேதனை தீர*முன்
மண்கொள் வசுதேவர் தம்மக னாய்வந்து*
திண்கொள் அசுரரைத் தேய வளர்கின்றான்*
கண்கள் இருந்தவா காணீரே, கனவளையீர்!வந்து காணீரே! 16

பருவம் நிரம்பாமே பாரெல்லாம் உய்ய*
திருவின் வடிவொக்கும் தேவகி பெற்ற*
உருவு கரிய ஒளிமணி வண்ணன்*
புருவம் இருந்தவா காணீரே, பூண்முலையீர்!வந்து காணீரே! 17

மண்ணும் மலையும் கடலும் உலகேழும்*
உண்ணுந் திறத்து மகிழ்ந்துண்ணும் பிள்ளைக்கு*
வண்ணம் எழில் கொள் மகரக்குழையிவை*
திண்ணம் இருந்தவா காணீரே, சேயிழையீர்!வந்து காணீரே! 18

முற்றிலும் தூதையும் முன்கைம்மேல் பூவையும்*
சிற்றில் இழைத்துத் திரிதரு வோர்களை*
பற்றிப் பறித்துக்கொண் டோடும் பரமன்றன்*
நெற்றி யிருந்தவா காணீரே, நேரிழையீர்!வந்து காணீரே! 19

அழகிய பைம்பொன்னின் கோல்அங்கைக் கொண்டு*
கழல்கள் சதங்கை கலந்தெங்கும் ஆர்ப்ப*
மழகன் றினங்கள் மறித்துத் திரிவான்*
குழல்கள் இருந்தவா காணீரே, குவிமுலையீர்!வந்து காணீரே! 20

சுருப்பார் குழலி யசோதைமுன் சொன்ன*
திருப்பாத கேசத்தைத் தென்புதுவைப் பட்டன்*
விருப்பால் உரைத்த இருபதோ டொன்றும்
உரைப்பார்போய்*வைகுந்தத் தொன்றுவர் தாமே 21

1.3.. மாணிக்கங்கட்டி

மாணிக்கங் கட்டி வயிரம் இடைகட்டி
ஆணிப்பொன்னால்செய்த வண்ணச் சிறுத்தொட்டில்*
பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்*
மாணிக் குறளனே!தாலேலோ!வையம் அளந்தானே!தாலேலோ! 1

உடையார் கனமணியோடு ஒண்மா துளம்பூ*
இடைவிரவிக் கோத்த எழில்தெழ்கி னோடு*
விடையேறு காபாலி ஈசன் விடுதந்தான்*
உடையாய்!அழேல்அழேல், தாலேலோ!
உலகம் அளந்தானே!தாலேலோ! 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எந்தம் பிரானனார் எழில்திரு மார்வர்க்கு*
சந்தம் அழகிய தாமரைத் தாளர்க்கு*
இந்திரன் தானும் எழிலுடைக் கிண்கிணி*
தந்துஉவ னாய்நின்றான் தாலோலே!
தாமரைக் கண்ணணே!தாலேலோ! 3

சங்கின் வலம்புரியும் சேவடிக் கிண்கிணியும்*
அங்கைச் சரிவளையும் நாணும் அரைத்தொடரும்*
அங்கன் விசும்பில் அமரர்கள் போத்தந்தார்*
செங்கண் கருமுகிலே!தாலேலோ!
தேவகி சிங்கமே!தாலேலோ! 4

எழிலார் திருமார்வுக்கு ஏற்கும் இவையென்று*
அழகிய ஐம்படையும் ஆரமுங் கொண்டு*
வழுவில் கொடையான் வயிச்சி ரவணன்*
தொழுதுஉவனாய்நின்றான்; தாலேலோ!
தூமணி வண்ணணே!தாலேலோ! 5

ஓதக்கடலின் ஒளிமுத்தினாரமும்*
சாதிப்பவளமும் சந்தச்சரிவளையும்*
மாதக்கவென்று வருணன்விடுதந்தான்*
சோதிச்சுடர்முடியாய்! தாலேலோ
சுந்தரத்தோளனே! தாலேலோ, 6

கானார்நறுந்துழாய் கைசெய்தகண்ணியும்*
வானார் செழுஞ்சோலைக் கற்பகத்தின்வாசிகையும்*
தேனார் மலர்மேல் திருமங்கைபோத்தந்தாள்*
கோனே! அழேலழேல்தாலேலோ குடந்தைக்கிடந்தானே!தாலேலோ. 7

கச்சொடுபொற்சுரிகை காம்பு கனகவளை*
உச்சிமணிச்சுட்டி ஒண்டாநிரைப்பொற்பூ*
அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள்*
நச்சுமுலையுண்டாய்! தாலேலோ!
நாராயணா! அழேல்தாலேலோ. 8

மெய்திமிருஞானப்பொடியோடு மஞ்சளும்*
செய்யதடங்கண்ணுக்கு அஞ்சனமும்சிந்துரமும்*
வெய்யகலைப்பாகி கொண்டுவளாய்நின்றாள்*
ஐயா! அழேலழேல்தாலேலோ!
அரங்கத்தணையானே!தாலேலோ.! 9

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வஞ்சனையால் வந்த பேய்ச்சிமுலையுண்ட*
அஞ்சனவண்ணனை ஆய்ச்சிதாலாட்டிய*
செஞ்சொல்மறையவர்சேர் புதுவைப்பட்டன்சொல்*
எஞ்சாமைவல்லவர்க்கு இல்லையிடர்தானே. 10

உ.4.. வெண்ணெயளைந்த

நீராட்டல்

வெண்ணெய் அளைந்த குணுங்கும் விளையாடு புழுதியும் கொண்டு
திண்ணென இவ்விரா வுன்னைத் தேய்த்துக் கிடக்கநான் ஒட்டேன்*
எண்ணெய் புளிப்பழங் கொண்டிங்கு எத்தனை போதுமிருந்தேன்*
நண்ணலரிய பிரானே! நாரணா! நீராடவாராய். 1

கன்றுகள் ஓடச் செவியில் கட்டெறும்புபிடித் திட்டால்*
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய் திரட்டி விழுங்குமா காண்பன்*
நின்ற மராமரம் சாய்த்தாய்! நீபிறந்த திருவோணம்*
இன்று,நீ நீராட வேண்டும் எம்பிரான்!ஓடாதேவாராய். 2

பேய்ச்சி முலையுண்ணக் கண்டு பின்னையும் நில்லாதென் நெஞ்சம்*
ஆய்ச்சியர் எல்லாருங் கூடிஅழைக்கவும் நான்முலை தந்தேன்*
காய்ச்சின நீரொடு நெல்லி கடாரத்தில் பூரித்து வைத்தேன்*
வாய்த்த புகழ்மணி வண்ணா! மஞ்சனம் ஆடநீவாராய். 3

கஞ்சன் புணர்ப்பினில் வந்த கடிய சகடம் உதைத்து*
வஞ்சகப் பேய்மகள் துஞ்ச வாய்முலை வைத்த பிரானே!*
மஞ்சளும் செங்கழு நீரின் வாசிகையும் நாறுசாந்தும்*
அஞ்சன மும்கொண்டு வைத்தேன்; அழகனே!நீராட வாராய். 4

அப்பம் கலந்த சிற்றுண்டி அக்காரம் பாலிற் கலந்து*
சொப்பட நான்சுட்டு வைத்தேன் தின்னல் உறுதியேல் நம்பீ!*
செப்பிள மென்முலை யார்கள் சிறுபுறம் பேசிச் சிரிப்பர்*
சொப்பட நீராட வேண்டும் சோத்தம்பிரான்!இங்கே வாராய். 5

எண்ணெய்க் குடத்தை யுருட்டி இளம்பிள்ளை கிள்ளி யெழுப்பி*
கண்ணைப் புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும் பிரானே!*
உண்ணக் கனிகள் தருவன்; ஒலிக்கடல் ஓதநீர் போலே*
வண்ணம் அழகிய நம்பீ! மஞ்சனம் ஆடநீ வாராய். 6

கறந்தநற் பாலும் தயிரும் கடைந்துறி மேல்வைத்த வெண்ணெய்*
பிறந்தது வேமுதலாகப் பெற்றறியேன் எம்பிரானே!*
சிறந்தநற் றாய்அலர் தூற்றும் என்பதனால்பிறர் முன்னே*
மறந்தும் உரையாட மாட்டேன்! மஞ்சனம் ஆடநீ வாராய். 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கன்றினை வாலோலை கட்டிக் கனிகள் உதிரஎறிந்து*
பின்தொடர்ந்தோடிஓர் பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினாய் போலும்*
நின்திறத் தேன்அல்லேன்,நம்பீ! நீபிறந்ததிரு நன்னாள்*
நன்றுநீ நீராட வேண்டும்; நாரணா!ஓடாதே வாராய். 8

பூணித் தொழுவினிற் புக்குப் புழுதி யளைந்தபொன் மேனி*
காணப் பெரிதும் உகப்பன், ஆகிலும் கண்டார் பழிப்பார்*
நாணெத்தனையும் இலாதாய்! நப்பின்னை காணிற் சிரிக்கும்*
மாணிக்க மே!என் மணியே! மஞ்சனம் ஆடநீ வாராய். 9

கார்மலி மேனி நிறத்துக் கண்ண பிரானை யுகந்து
வார்மலி கொங்கை யசோதை மஞ்சனம் ஆட்டிய ஆற்றை*
பார்மலி தொல்புது வைக்கோன் பட்டர் பிரான்சொன்ன பாடல்*
சீர்மலி செந்தமிழ் வல்லார் தீவினை யாதும் இலரே 10

2.7..ஆநிரை

ஆனிரை மேய்க்கநீ போதி, அருமருந் தாவ தறியாய்
கானகம் எல்லாம் திரிந்துஉன் கரிய திருமேனி வாட*
பானையிற் பாலைப் பருகிப் பற்றாதார் எல்லாம் சிரிப்ப*
தேனிலினிய பிரானே! செண்பகப் பூச்சூட்ட வாராய். 1

கருவுடைமேகங்கள் கண்டால் உன்னைக்கண்டாலொக்கும்; கண்கள்*
உருவுடை யாய்!உலகேழும் உண்டாக வந்து பிறந்தாய்!*
திருவுடை யாள்மணவாளா! திருவரங் கத்தே கிடந்தாய்!*
மருவி மணம்கமழ் கின்ற மல்லிகைப் பூச்சூட்ட வாராய் 2

மச்சொடு மாளிகை யேறி மாதர்கள் தம்மிடம் புக்கு*
கச்சொடு பட்டைக் கிழித்துக் காம்பு துகிலவை கீறி*
நீச்சலும் தீமைகள் செய்வாய்! நீள்திரு வேங்கடத்தெந்தாய்*
பச்சைத் தமனகத் தோடு பாதிரிப் பூச்சூட்ட வாராய். 3

தெருவின்கண் நின்றிளவாய்ச்சி மார்களைத் தீமைசெய்யாதே*
மருவும் தமனகமும்சீர் மாலை மணம்கமழ் கின்ற*
புருவம் கருங்குழல் நெற்றி பொலிந்த முகிற்கன்று போல*
உருவம் அழகிய நம்பீ! உகந்திவை சூட்டநீ வாராய். 4

புள்ளினை வாய்பிளைந் திட்டாய்! பொருகரியின்கொம் பொசித்தாய்!*
கள்ள அரக்கியை மூக்கொடு காவலனைத்தலை கொண்டாய்*
அள்ளிநீ வெண்ணெய் விழுங்க அஞ்சாதடியேன் அடித்தேன்*
தெள்ளிய நீரில் எழுந்த செங்கழு நீர்சூட்ட வாராய். 5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எருதுக ளோடு பொருதி, ஏதும் உலோபாய்காண், நம்பீ!*
கருதிய தீமைகள் செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய்*
தெருவின்கண்தீமைகள் செய்து சிக்கென மல்லர்களோடு*
பொருது வருகின்ற பொன்னே! புன்னைப் பூச்சூட்ட வாராய். 6

குடங்கள் எடுத்தேற விட்டுக் கூத்தாட வல்லஎம் கோவே!*
மடங்கொள் மதிமுகத் தாரை மால்செய்ய வல்லஎன் மைந்தா*
இடந்திட் டிரணியன் நெஞ்சைஇருபிளவாகமுன் கீண்டாய்*
குடந்தைக் கிடந்த எம்கோவே! குருக்கத்திப் பூச்சூட்ட வாராய்.7

சீமா லிகன்அவனோடு தோழமை கொள்ளவும் வல்லாய்*
சாமா றவனைநீயெண்ணிச் சக்கரத் தால்தலை கொண்டாய்*
ஆமா றறியும் பிரானே! அணியரங் கத்தே கிடந்தாய்!*
ஏமாற்றம் என்னைத் தவிர்த்தாய்! இருவாட்சிப் பூச்சூட்ட வாராய்.8

அண்டத் தமரர்கள் சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய்!*
தொண்டர்கள் நெஞ்சில் உறைவாய்! தூமல ராள்மணவாளா!*
உண்டிட் டுலகினை யேழும் ஓராலிலைத்துயில் கொண்டாய்!*
கண்டுநான் உன்னை யுகக்க கருமுகைப் பூச்சூட்ட வாராய். 9

செண்பகம் மல்லிகையோடு செங்கழு நீர்இருவாட்சி
எண்பகர் பூவும் கொணர்ந்தேன் இன்றிவை சூட்டவா என்று*
மண்பகர் கொண்டானை யாய்ச்சி மகிழ்ந்துரை செய்தஇம்மாலை*
பண்பகர் வில்லிபுத்தூர்க்கோன் பட்டர் பிரான்சொன்ன பத்தே. 10

2.9.. வெண்ணெய்விழுங்கி

*வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை
வெற்பிடை யிட்டதன் ஓசை கேட்கும்*
கண்ண பிரான்கற்ற கல்வி தன்னைக்
காக்ககில்லோம், உன் மகனைக் காவாய்*
புண்ணிற் புளிப்பெய்தா லொக்குந் தீமை
புரைபுரை யால்இவை செய்யவல்ல*
அண்ணற்கண்ணனோர் மகனைப் பெற்ற
அசோதை நங்காய்!உன் மகனைக் கூவாய். 1

வருக வருக வருக இங்கே
வாமன நம்பீ! வருக இங்கே*
கரிய குழல்செய்ய வாய்மு கத்துக்
காகுத்த நம்பீ! வருக இங்கே*
அரியன் இவனெனக் கின்று, நங்காய்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அஞ்சன வண்ணா!அசல கத்தார்*
பரிபவம் பேசத் தரிக்க கில்லேன்:
பாவியே னுக்கிங்கே போதராயே. 2

திருவுடைப் பிள்ளை தான் தீயவாறு
தேக்கமொன்றும்இலன், தேசுடையன்*
உருக வைத்தகுடத்தோடு வெண்ணெய்
உறிஞ்சி உடைத்திட்டுப் போந்து நின்றான்*
அருகிருந்தார் தம்மை அநியாயம்
செய்வது தான்வழக்கோ?அசோதாய்!*
வருகவென்றுன்மகன் தன்னைக் கூவாய்;
வாழ வொட்டான் மதுசூதனனே. 3

கொண்டல்வண்ணா! இங்கே போதராயே,
கோயிற்பிள்ளாய்! இங்கே போதராயே*
தெண்டிரை சூழ்திருப் பேர்க்கிடந்த
திருநாரணா! இங்கே போதராயே*
உண்டுவந்தேனம்மம் என்று சொல்லி
ஓடி அகம்புக ஆய்ச்சி தானும்*
கண்டெதி ரேசென் றெடுத்துக் கொள்ளக்
கண்ணபி ரான்கற்ற கல்வி தானே. 4

பாலைக் கறந்தடுப்பேற வைத்துப்
பல்வளை யாள்என் மகள்இருப்ப*
மேலேயகத்தே நெருப்பு வேண்டிச்
சென்றிறைப் பொழுதங்கே பேசி நின்றேன்*
சாளக்கிராம முடைய நம்பி
சாய்த்துப் பருகிட்டுப் போந்து நின்றான்*
ஆலைக் கரும்பின் மொழி யனைய
அசோதைநங்காய்! உன் மகனைக் கூவாய். 5

போதர்கண்டாய்இங்கே போதர் கண்டாய்;
போதரேன் என்னாதே போதர் கண்டாய்*
ஏதேனும் சொல்லி அசலகத்தார்
ஏதேனும் பேசநான் கேட்க மாட்டேன்*
கோது கலமுடைக் குட்டனேயோ!
குன்றெடுத் தாய்! குடமாடு கூத்தா!*
வேதப்பொருளே! என்வேங்கடவா!
வித்தகனே !இங்கே போதராயே. 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

செந்நெல் அரிசி சிறுபருப்புச்
செய்தஅக்காரம் நறுநெய் பாலால்,*
பன்னிரண்டுதிரு வோணம் அட்டேன்:
பண்டும் இப்பிள்ளைபரி சறிவன்*
இன்னம் உகப்பன்நானென்று சொல்லி
எல்லாம் விழுங்கிட்டுப் போந்து நின்றான்*
உன்மகன் தன்னை, அசோதை நங்காய்!
கூவிக் கொள்ளாய் இவையும் சிலவே. 7

கேசவனே!இங்கே போதராயே ;
கில்லேனென்னாதிங்கே போதராயே*
நேசம் இலாதார் அகத்திருந்து
நீவிளை யாடாதே போதராயே*
தூசனம் சொல்லும் தொழுத்தை மாரும்
தொண்டரும் நின்ற விடத்தில் நின்று*
தாய்சொல்லுக் கொள்வது தர்மம் கண்டாய்,
தாமோதரா! இங்கே போதராயே. 8

கன்னல் இலட்டுவத்தோடு சீடை
காரெள்ளின் உண்டை கலத்தில் இட்டு*
என்னகம் என்றுநான் வைத்துப் போந்தேன்
இவன்புக் கவற்றைப் பெறுத்திப் போந்தான்*
பின்னும் அகம்புக் குறியை நோக்கிப்
பிறங்கொளி வெண்ணெயும் சோதிக் கின்றான்*
உன்மகன் தன்னை, அசோதை நங்காய்!
கூவிக் கொள்ளாய், இவையும் சிலவே! 9

சொல்லில் அரசிப் படுதி, நங்காய்!
சூழல் உடையன்உன் பிள்ளை தானே*
இல்லம் புகுந்தென் மகளைக் கூவிக்
கையில் வளையைக் கழற்றிக் கொண்டு*
கொல்லையில் நின்றும் கொணர்ந்து விற்ற
அங்கொருத் திக்குஅவ் வளைகொ டுத்து*
நல்லன நாவற் பழங்கள் கொண்டு,
நானல்லேன்என்று சிரிக்கின் றானே! 10

*வண்டு களித்திரைக்கும் பொழில்சூழ்
வருபுனற் காவிரித் தென்னரங்கன்*
பண்டவன் செய்த கிரீடை யெல்லாம்
பட்டர் பிரான்விட்டு சித்தன் பாடல் *

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கொண்டிவை பாடிக் குனிக்க வல்லார்
கோவிந்தன் தன்னடி யார்களாகி*
எண்திசைக் கும்விளக்காகி நிற்பார்
இணையடி என்தலை மேலனவே. 11

3.10.. நெறிந்தகருங்குழல்

நெறிந்தகருங் குழல் மடவாய்! நின்னடியேன் விண்ணப்பம்
செறிந்தமணி முடிச்சனகன் சிலையிறுத்து நினைக்கொணர்ந்து
அறிந்து*அரசு களைகட்ட அருந்தவத்தோன் இடைவிலங்க*
செறிந்தசிலை கொடுதவத்தைச் சிதைத்ததும் ஓரடையாளம்.1

அல்லியம்பூ மலர்க்கோதாய்! அடிபணிந்தேன் விண்ணப்பம்*
சொல்லுகேன் கேட்டருளாய்,துணைமலர்க்கண் மடமானே!*
எல்லியம்போ தினிதிருத்தல்இருந்ததோ ரிடவகையில்*
மல்லிகைமா மாலைகொண்டங் கார்த்ததும் ஓரடையாளம்.2

கலக்கியமா மனத்தனளாய்க் கைகேசி வரம் வேண்ட*
மலக்கியமா மனத்தனனாய் மன்னவனும் மறாதொழிய*
குலக்குமரா!காடுறையப் போ என்று விடைகொடுப்ப*
இலக்குமணன் தன்னொடுமங் கேகியது ஓரடையாளம். 3

வாரணிந்த முலைமடவாய்! வைதேவீ!விண்ணப்பம்*
தேரணிந்த அயோத்தியர்கோன் பெருந்தேவீ!கேட்டருளாய்*
கூரணிந்த வேல்வலவன் குகனோடும் கங்கைதன்னில்*
சீரணிந்த தோழமை கொண்டதும் ஓரடையாளம். 4

மானமரும் மென்னோக்கி! வைதேவீ! விண்ணப்பம்*
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்த காலத்து*
தேனமரும் பொழிற்சாரல்* சித்திரகூடத்திருப்ப*
பால்மொழியாய் ! பரதநம்பி பணிந்ததும் ஓரடையாளம். 5

சித்திர கூடத்திருப்பச் சிறுகாக்கை முலைதீண்ட*
அத்திரமே கொண்டெறிய அனைத்துலகும் திரிந்தோடி*
வித்தகனே! இராமாவோ! நின்னபயம்! என்றழைப்ப*
அத்திரமே அதன்கண்ணை அறுத்ததும் ஓரடையாளம் 6

மின்னொத்த நுண்ணிடையாய்! மெய்யடியேன் விண்ணப்பம்*
பொன்னொத்த மானொன்று புகுந்தினிது விளையாட*
நின்னன்பின் வழிநின்று சிலைபிடித்தெம் பிரானேக*
பின்னேஅங் கிலக்குமணன் பிரிந்ததும் ஓரடையாளம். 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மைத்தகுமா மலர்க்குழலாய்! வைதேவீ! விண்ணப்பம்*
ஒத்தபுகழ் வானரக்கோன் உடனிருந்து நினைத்தேட*
அத்தகுசீரயோத்தியர்கோன் அடையாளம் இவைமொழிந்தான்*
இத்தகையால் அடையாளம் ஈதவன்கைம் மோதிரமே. 8

திக்குநிறை புகழாளன் தீவேள்விச் சென்றநாள்
மிக்கபெருஞ் சபைநடுவே வில்லிறுத்தான் மோதிரங்கண்டு*
ஒக்குமா லடையாளம், அனுமான்! என்று உச்சிமேல்
வைத்துக்கொண்டு* உகந்தனளால் மலர்க்குழலாள் சீதையுமே. 9

வாராரும் முலைமடவாள் வைதேவி தனைக்கண்டு
சீராரும் திறல் அனுமன் தெரிந்துரைத்த அடையாளம்*
பாராரும் புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான் பாடல்வல்லார்*
ஏராரும் வைகுந்தத் திமையவரோ டிருப்பாரே. 10

4.4.. நாவகாரியம்

நாவகாரியம் சொல்லிலாதவர் நாடொறும்விருந் தோம்புவார்
தேவகாரியம் செய்துவேதம் பயின்றுவாழ்திருக் கோட்டியூர்*
மூவர்காரிய மும்திருத்தும் முதல்வனைச்சிந்தி யாத*அப்
பாவகாரிக ளைப்படைத்தவன் எங்ஙனம்படைத் தான்கொலோ! 1

குற்றமின்றிக் குணம்பெருக்கிக் குருக்களுக்கனு கூலராய்*
செற்றமொன்றும் இலாதவண்கையினார்கள்வாழ்திருக் கோட்டியூர்*
துற்றியேழுல குண்டதூமணி வண்ணன் தன்னைத் தொழாதவர்*
பெற்றதாயார் வயிற்றினைப்பெரு நோய்செய்வான்பிறந் தார்களே. 2

வண்ணநன்மணி யும்மரகத மும்அழுத்தி நிழலெழும்
திண்ணைசூழ்*திருக் கோட்டியூர்த் திருமாலவன் திரு நாமங்கள்*
எண்ணக்கண்ட விரல்களால்இறைப்பொழுதுமெண்ணகி லாதுபோய்*
உண்ணக்கண்டதம் ஊத்தைவாய்க்குக் கவளம் உந்துகின்றார்களே. 3

உரகமெல்லணை யான்கையிலுறை சங்கம்போல்மட அன்னங்கள்*
நிரைகணம்பரந் தேறும் செங்கமலவயல் திருக்கோட்டியூர்*
நரகநாசனைநாவிற்கொண்டழை யாதமானிட சாதியர்*
பருகுநீரும் உடுக்கும் கூறையும் பாவஞ்செய்தன தாங்கொலோ! 4

ஆமையின்முது கத்திடைக்குதி கொண்டுதூமலர் சாடிப்போய்*
தீமைசெய்திள வாளைகள்விளையாடுநீர்த்திருக் கோட்டியூர் *
நேமிசேர்தடங் கையினானை நினைப்பிலாவலி நெஞ்சுடை*
பூமிபாரங்க ளுண்ணுஞ்சோற்றினை வாங்கிப்புல்லைத் திணிமினே.5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூதமைந்தொடு வேள்வியைந்து புலன்களைந்து பொறிகளால்*
ஏதமொன்றும் இலாதவண்கையி னார்கள்வாழ்திருக் கோட்டியூர்*
நாதனைநர சிங்கனை நவின்றேத்துவார்கள் உழக்கிய*
பாததூளி படுதலால்இவ் வுலகம்பாக்கியம் செய்ததே. 6

குருந்தமொன்றொசித் தானொடும்சென்று கூடியாடி விழாச்செய்து*
திருந்துநான்மறை யோர்இராப்பகல் ஏத்திவாழ்திருக் கோட்டியூர்*
கருந்தடமுகில் வண்ணனைக்கடைக் கொண்டுகைதொழும் பத்தர்கள்*
இருந்தவூரில் இருக்கும் மானிடர் எத்தவங்கள்செய்தார்கொலோ! 7

நளிர்ந்தசீலன் நயாசலன் அபிமானதுங்கனை*நாடொறும்
தெளிந்தசெல்வனைச் சேவகங்கொண்ட செங்கண்மால்திருக் கோட்டியூர்*
குளிர்ந்துறைகின்ற கோவிந்தன்குணம் பாடுவாருள்ள நாட்டினுள்*
விளைந்ததானிய மும்இராக்கதர் மீதுகொள்ளகி லார்களே! 8

கொம்பினார்பொழில் வாய்க்குயிலினம் கோவிந்தன்குணம் பாடுசீர்*
செம்பொனார்மதிள் சூழ்செழுங்கழனியுடைத்திருக் கோட்டியூர்*
நம்பனைநர சிங்கனைநவின்றேத்துவார்களைக் கண்டக்கால்*
எம்பிரான்தன் சின்னங்கள்இவர் இவரென்றாசைகள் தீர்வனே. 9

காசின்வாய்க்கரம் விற்கிலும்கரவாதுமாற்றிலிசோறிட்டு*
தேசவார்த்தைப டைக்கும்வண்கையினார்கள்வாழ்திருக் கோட்டியூர்*
கேசவா!புரு டோத்தமா!கிளர் சோதியாய்! குறளா! என்று*
பேசுவார்அடி யார்கள் எந்தம்மை விற்கவும் பெறுவார்களே. 10

சீதநீர்புடை சூழ்செழுங்கழனியுடைத்திருக் கோட்டியூர்
ஆதியானடி யாரையும்அடிமையின்றித்திரி வாரையும்*
கோதில்பட்டர் பிரான்குளிர்புதுவைமன்விட்டுனு சித்தன்சொல்*
ஏதமின்றிஉரைப்பவர்கள் இருடீகேசனுக் காளரே. 11

4.5.. ஆசைவாய்

*ஆசைவாய்ச்சென்ற சிந்தையராகி
அன்னை யத்தன்என் புத்திரர் பூமி*
வாசவார்குழ லாளென்று மயங்கி
மாளும் எல்லைக்கண், வாய்திறவாதே*
கேசவா!புரு டோத்தமா! என்றும்
கேழலாகிய கேடிலீ யென்றும்*
பேசுவாரவர் எய்தும் பெருமை
பேசுவான்புகில் நம்பரமன்றே. 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சீயினால் செறிந்தேறிய புண்மேல்
செற்ற லேறிக் குழம்பிருந்து*எங்கும்
ஈயினால்அரிப் புண்டு மயங்கி
எல்லை வாய்ச்சென்று சேர்வதன் முன்னம்*
வாயினால்நமோ நாரணாவென்று.
மத்த கத்திடைக் கைகளைக் கூப்பிப்*
போயினால் பின்னை*இத்திசைக் கென்றும்
பிணைகொடுக்கிலும் போதவொட்டாரே. 2

சோர்வினால்பொருள் வைத்ததுண்டாகில்
சொல்லு சொல்லென்று சுற்று மிருந்து*
ஆர்வினாவிலும் வாய்திறவாதே
அந்த கால மடைவதன் முன்னம்*
மார்வ மென்பதோர் கோயில் அமைத்து
மாதவன்என்னும் தெய்வத்தை நாட்டி*
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்
கரவ தண்டத்தில் உய்யலுமாமே. 3

மேலெழுந்ததோர் வாயுக் கிளர்ந்து
மேல்மிடற்றினை யுள்ளெழ வாங்கி*
காலும் கையும் விதிர்விதிர்த் தேறிக்
கண்ணுறக்கம தாவதன் முன்னம்*
மூலமாகிய ஒற்றை யெழுத்தை
மூன்று மாத்திரை யுள்ளெழ வாங்கி*
வேலை வண்ணனை மேவுதி ராகில்
விண்ணகத்தினில் மேவலு மாமே 4

மடிவழிவந்து நீர்புலன் சோர
வாயி லட்டிய கஞ்சியும் மீண்டே*
கடைவழிவாரக் கண்ட மடைப்பக்
கண்ணுறக்கம தாவதன் முன்னம்*
தொடைவழிஉம்மை நாய்கள் கவரா ;
சூலத்தால்உம்மைப் பாய்வதுஞ் செய்யார்*
இடைவழியில்நீர் கூறையு மிழவீர்;
இருடீ கேசனென்றேத்த வல்லீரே. 5

அங்கம் விட்டவை யைந்து மகற்றி
ஆவி மூக்கினில் சோதித்த பின்னை*
சங்கம் விட்டவர் கையை மறித்துப்
பைய வேதலை சாய்ப்பதன் முன்னம்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வங்கம் விட்டுல வும்கடற்பள்ளி
மாய னைமது சூதனை மார்பில்
தங்க விட்டுவைத்து* ஆவதோர் கரும்ம்
சாதிப் பார்க்கென்றுஞ் சாதிக்க லாமே. 6

தென்ன. வன்தமர் செப்ப மிலாதார்
சேவதக்குவார் போலப் புகுந்து*
பின்னும் வன்கயிற்றால்பிணித் தெற்றிப்
பின்முன்னாக இழுப்பதன் முன்னம்*
இன்ன வன்இனை யானென்று சொல்லி
எண்ணி யுள்ளத் திருளற நோக்கி*
மன்ன வன்மது சூதன னென்பார்
வானகத்துமன் றாடிகள் தாமே 7

கூடிக் கூடிஉற்றார்க ளிருந்து
குற்றம் நிற்க நற்றங்கள் பறைந்து*
பாடிப் பாடியோர் பாடையி லிட்டு
நரிப்ப டைக்கொரு பால்குடம் போலே*
கோடிமூடி யெடுப்பதன் முன்னம்
கௌத்துவமுடைக்கோவிந்தனோடு*
கூடி யாடிய வுள்ளத்த ரானால்
குறிப்பி டங்கடந்துய்யலு் மாமே. 8

வாயொரு பக்கம் வாங்கி வலிப்ப
வார்ந்த நீர்க்குழிக் கண்கள் மிழற்ற*
தாயொரு பக்கம் தந்தை யொருபக்கம்
தாரமும் ஒரு பக்க மலற்ற*
தீயொரு பக்கஞ் சேர்வதன் முன்னம்
செங்கண் மாலொடும் சிக்கெனச் சுற்ற
மாய்*ஒருபக்கம் நிற்கவல் லார்க்
கரவ தண்டத்தி லுய்யலு மாமே. 9

*செத்துப் போவதோர் போது நினைந்து
செய்யும் செய்கைகள் தேவபிரான்மேல்*
பத்தராயிறந்தார் பெறும் பேற்றைப்
பாழித் தோள்விட்டு சித்தன் புத்தூர்க்கோன்*
சித்தம் நன்கொருங் கித்திரு மாலைச்
செய்த மாலை யிவைபத்தும் வல்லார்*
சித்தம் நன்கொருங் கித்திரு மால்மேல்
சென்ற சிந்தை பெறுவர் தாமே. 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

4.9.. மரவடியை

*மரவடியைத் தம்பிக்கு வான்பணையம்
வைத்துப்போய் வானோர் வாழ*
செருவுடைய திசைக்கருமம் திருத்திவந்
துலகாண்ட திருமால் கோயில்*
திருவடிதன் திருவுருவும் திருமங்கை
மலர்க்கண்ணும் காட்டி நின்று*
உருவுடைய மலர்நீலம் காற்றாட்ட
ஓ! சலிக்கும் ஒளியரங்கமே. 1

*தன்னடியார் திறத்தகத்துத் தாமரையா
ளாகிலும் சிதகு ரைக்குமேல்*
என்னடியார் அதுசெய்யார் செய்தாரேல்
நன்றுசெய்தா ரென்பர் போலும்*
மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத்
திசைநோக்கி மலர்க்கண் வைத்த*
என்னுடைய திருவரங்கற் கன்றியும்
மற்றொருவர்க் காளா வரே? 2

கருளுடைய பொழில்மருதும் கதக்களிறும்
பிலம்பனையும் கடிய மாவும்*
உருளுடைய சகடரையும் மல்லரையும்
உடையவிட் டோசை கேட்டான்*
இருளகற்றும் எறிகதிரோன் மண்டலத்தூ
டேற்றிவைத் தேணி வாங்கி*
அருள்கொடுத்திட் டடியவரை யாட்கொள்வான்
அமரும் ஊர்அணிய ரங்கமே ; 3

பதினாறா மாயிரவர் தேவிமார்
பணிசெய்ய* துவரை யென்னும்
அதில்நா யகராகி வீற்றிருந்த
மணவாளர் மன்னுகோயில்*
புதுநாண் மலர்க்கமல மெம்பெருமான்
பொன்வயிற்றிற் பூவே போல்வான்*
பொதுநாய கம்பாவித் திருமாந்து
பொன்சாய்க்கும் புனலரங்கமே ; 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆமையாய்க் கங்கையாய் ஆழ்கடலாய்
அவனியாய் அருவ ரைகளாய்*
நான்முகனாய் நான்மறையாய் வேள்வியாய்த்
தக்கணையாய்த் தானுமானான்*
சேமமுடை நாரதனார் சென்றுசென்று
துதித்திறைஞ்சக் கிடந்தான் கோயில்*
பூமருவிப் புள்ளினங்கள் புள்ளரையன்
புகழ்குழறும் புனல ரங்கமே. 5

மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்
தவர்களையே மன்ன ராக்கி*
உத்தரைதன் சிறுவனையு முய்யக்கொண்ட
உயிராள னுறையும் கோயில்*
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்
முனிவர்களும் பரந்த நாடும்*
சித்தர்களும் தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்
நிற்கின்ற திருவரங்கமே 6

குறட்பிரம சாரியாய் மாவலியைக்
குறும்பதக்கி யரசு வாங்கி*
இறைப்பொழுதில் பாதாளம் கலவிருக்கை
கொடுத்துகந்த எம்மான் கோயில்*
எறிப்புடைய மணிவரைமேல் இளஞாயி
றெழுந்தாற்போல் அரவ ணையின்வாய்*
சிறப்புடைய பணங்கள்மிசைச் செழுமணிகள்
விட்டெறிக்கும் திருவரங்கமே. 7

உரம்பற்றி யிரணியனை யுகிர்நுதியால்
ஒள்ளியமார் புறைக்க வூன்றி*
சிரம்பற்றி முடியிடியக் கண்பிதுங்க
வாயலறத் தெழித்தான் கோயில்*
உரம்பெற்ற மலர்க்கமல முலகளந்த
சேவடிபோ லுயர்ந்து காட்ட*
வரம்புற்ற கதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்
தலைவணக்கும் தண்ணரங்கமே. 8

தேவுடைய மீனமாய் ஆமையாய்
ஏனமா யரியாய்க் குறளாய்*
மூவுருவில் இராமனாய்க் கண்ணனாய்க்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கற்கியாய் முடிப்பான் கோயில்*
சேவலொடு பெடையன்னம் செங்கமல
மலரேறி யூச லாடி*
பூவணைமேல் துதைத்தெழுசெம் பொடியாடி
விளையாடும் புனலரங்கமே. 9

செருவாளன் புள்ளாளன் மண்ணாளன்
செருச்செய்யும் நாந்தக மென்னும்
ஒருவாளன்* மறையாள னோடாத
படையாளன் விழுக்கையாளன்*
இரவாளன் பகலாள னெனையாளன்
ஏழுலகப் பெரும்புர வாளன்*
திருவாளன் இனிதாகத் திருக்கண்கள்
வளர்கின்ற திருவரங்கமே. 10

*கைந்நாகத் திடர்கடிந்த கனலாழிப்
படையுடையான் கருதும் கோயில்*
தென்னாடும் வடநாடும் தொழநின்ற
திருவரங்கத் திருப்ப தியின்மேல்*
மெய்ந்நாவன் மெய்யடியான் விட்டுசித்தன்
விரித்ததமி ழுரைக்க வல்லார்*
எஞ்ஞான்றும் எம்பெருமா னிணையடிக்கீழ்
இணைபிரியா திருப்பர் தாமே. 11

4.10.. துப்புடையாரை

*துப்புடையாரை யடைவ தெல்லாம்
சோர்விடத் துத்துணை யாவரென்றே*
ஒப்பிலேன் ஆகிலும் நின்ன டைந்தேன்
ஆனைக்கு நீயருள் செய்தமையால்*
எய்ப்பென்னை வந்து நலியும் போது
அங்கேதும்நான் உன்னை நினைக்க மாட்டேன்*
அப்போதைக் கிப்போதே சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே! 1

சாமிடத் தென்னைக் குறிக்கொள் கண்டாய்
சங்கொடு சக்கர மேந்தி னானே!*
நாமடித் தென்னை யநேக தண்டம்
செய்வதா நிற்பர் நமன்த மர்கள்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

போமிடத் துன்திறத் தெத்த னையும்
புகாவண்ணம் நிற்பதோர் மாயை வல்லை*
ஆமிடத் தேயுன்னைச் சொல்லி வைத்தேன்
அரங்கத் தரவணைப் பள்ளி யானே! 2

எல்லையில் வாசல் குறுகச் சென்றால்
எற்றி நமன்தமர் பற்றும் போது*
நில்லுமினென்னு முபாய மில்லை;
நேமியும் சங்கமு மேந்தினானே!*
சொல்லலாம் போதேயுன் நாமமெல்லாம்
சொல்லினேன்என்னைக் குறிக்கொண்டென்றும்*
அல்லற் படாவண்ணங்காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 3

ஒற்றை விடையனும் நான்முகனும்
உன்னை யறியாப் பெருமையோனே!*
முற்ற உலகெல்லாம் நீயே யாகி
மூன்றெழுத்தாய முதல்வ னேயோ!*
அற்றது வாணாள் இவற்கென் றெண்ணி
அஞ்ச நமன்தமர் பற்றலுற்ற*
அற்றைக்கு நீயென்னைக் காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளி யானே! 4

பையர வினணைப் பாற்கடலுள்
பள்ளி கொள்கின்ற பரம மூர்த்தி!*
உய்ய வுலகு படைக்க வேண்டி
உந்தியில் தோற்றினாய் நான்முகனை*
வைய மனிசரைப் பொய்யென் றெண்ணிக்
காலனையும் உடனே படைத்தாய்*
ஐய! இனியென்னைக் காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 5

தண்ணென வில்லை நமன்தமர்கள்
சாலக் கொடுமைகள் செய்யா நிற்பர்*
மண்ணொடு நீரும் எரியும் காலும்
மற்றும் ஆகாசமுமாகி நின்றாய்*
எண்ணலாம் போதேயுன் நாமமெல்லாம்
எண்ணினேன் என்னைக் குறிகொண்டென்றும்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அண்ணலே!நீயென்னைக் காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 6

செஞ்சொல் மறைப்பொரு ளாகி நின்ற
தேவர்கள் நாயகனே! எம்மானே*
எஞ்சலி லென்னுடை யின்னமுதே!
ஏழுலகும் உடையாய்! என்னப்பா!*
வஞ்ச உருவின் நமன்தமர்கள்
வலிந்து நலிந்தென்னைப் பற்றும் போது*
அஞ்சல மென்றென்னை காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 7

நானேதும் உன்மாய மொன்ற றியேன்
நமன் தமர் பற்றி நலிந்திட்டு* இந்த
ஊனே புகேயென்று மோதும் போதும்
அங்கேதும் நான் உன்னை நினைக்க மாட்டேன்*
வானேய் வானவர் தங்க ளீசா!
மதுரைப் பிறந்த மாமாயனே!*என்
ஆனாய்! நீயென்னைக் காக்க வேண்டும்;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 8

குன்றெடுத் தாநிரை காத்த ஆயா!
கோநிரை மேய்த்தவனே! எம்மானே!*
அன்று முதல்இன்றறுதியா
ஆதியஞ்சோதி மறந்த றியேன்*
நன்றுங் கொடிய நமன்தமர்கள்
நலிந்து வலிந்தென்னைக்காக்க வேண்டும்;
அன்றங்கு நீயென்னைக் காக்க வேண்டும் ;
அரங்கத் தரவணைப் பள்ளியானே! 9

*மாய வனைமது சூதனனை
மாதவனை மறையோர்கள் ஏத்தும்*
ஆயர்கள் ஏற்றினை யச்சுதனை
அரங்கத் தரவணைப் பள்ளியானை*
வேயர் புகழ்வில்லி புத்தூர்மன்
விட்டுசித் தன்சொன்ன மாலைபத்தும்*
தூய மனத்தன ராகிவல்லார்
தூமணி வண்ணனுக் காளர்தாமே. 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

5.1.. வாக்குத்தூய்மை

*வாக்குத் தூய்மை யிலாமையினாலே
மாதவா!உன்னை வாய்க்கொள்ள மாட்டேன்*
நாக்கு நின்னையல்லால் அறியாது
நான தஞ்சுவ னென்வசமன்று*
மூர்க்குப் பேசுகின் றான்இவனென்று
முனிவா யேலும்என் நாவினுக் காற்றேன்*
காக்கை வாயிலும் கட்டுரை கொள்வர்;
காரணா கருளக்கொடியானே! 1

சழக்கு நாக்கொடு புன்கவி சொன்னேன்,
சங்கு சக்கர மேந்துகை யானே!*
பிழைப்பராகிலும் தம்மடியார் சொல்
பொறுப்பதுபெரி யோர்கடன் அன்றே*
விழிக்குங் கண்ணிலேன் நின்கண்மற்றல்லால்,
வேறொருவரோ டென்மனம் பற்றாது*
உழைக்கோர் புள்ளி மிகையன்று கண்டாய்;
ஊழியேழுல குண்டுமிழ்ந்தானே! 2

நன்மை தீமைகள் ஒன்று மறியேன்,
நாரணா! என்னு மித்தனை யல்லால்*
புன்மையால் உன்னைப் புள்ளுவம் பேசிப்
புகழ்வான் அன்றுகண் டாய்திருமாலே!*
உன்னு மாறுன்னை யொன்றுமறியேன்,
ஓவாதே "நமோ நாரணா!" என்பன்*
வன்மை யாவதுன் கோயிலில் வாழும்
வைட்டணவனென்னும் வன்மைகண் டாயே. 3

நெடுமை யால்உல கேழுமளந்தாய்!
நின்மலா! நெடியாய்!*அடியேனைக்
குடிமை கொள்வதற் கையுறவேண்டா,
கூறை சோறிவை வேண்டுவதில்லை*
அடிமை யென்னுமக் கோயின்மையாலே
அங்கங் கேயவைபோதருங் கண்டாய்*
கொடுமைக் கஞ்சனைக் கொன்றுநின் தாதை
கோத்த வன்தளை கோள்விடுத் தானே! 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தோட்டம் இல்லவள் ஆத்தொழு ஓடை
துடவை யும்கிண றும்இவை யெல்லாம்*
வாட்ட மின்றியுன் பொன்னடிக் கீழே
வளைப்ப கம்வகுத் துக்கொண் டிருந்தேன்*
நாட்டு மானிடத் தோடெனக் கரிது
நச்சு வார்பலர்; கேழலொன்றாகி*
கோட்டு மண்கொண்ட கொள்கையினானே!
குஞ்சரம்வீழக் கொம்பொசித்தானே! 5

கண்ணா!நான்முக னைப்படைத்தானே!
காரணா!கரி யாய்!அடி யேன்நான்*
உண்ணா நாள்பசி யாவதொன் றில்லை ;
ஓவாதே நமோ நாரணா! என்று*
எண்ணா நாளும் இருக்கெசுச் சாம
வேத நாண்மலர் கொண்டுன பாதம்
நண்ணா நாள்* அவை தத்துறு மாகில்,
அன்றெ னக்கவை பட்டினி நாளே. 6

வெள்ளை வெள்ளத்தின் மேலொரு பாம்பை
மெத்தை யாக விரித்து* அதன் மேலே
கள்ள நித்திரை கொள்கின்ற மார்க்கம்
காண லாங்கொலென் றாசையி னாலே*
உள்ளஞ் சோர உகந்தெதிர் விம்மி
உரோம கூபங்களாய்* கண்ண நீர்கள்
துள்ளம் சோரத் துயிலணை கொள்ளேன்;
சொல்லாய் யானுன்னைத் தத்துறு மாறே. 7

வண்ண மால்வரை யேகுடையாக
மாரி காத்தவனே! மதுசூதா!*
கண்ணனே! கரிகோள்விடுத்தானே!
காரணா! களிறட்டபிரானே!*
எண்ணு வார்இடரைக்களை வானே!
ஏத்த ரும்பெருங் கீர்த்தியினானே!*
நண்ணி நானுன்னை நாடொறு மேத்தும்
நன்மை யேயருள் செய்எம்பிரானே! 8

நம்பனே! நவின் றேத்தவல்லார்கள்
நாதனே! நரசிங்கம தானாய்!*
உம்பர்கோன்!உலகேழுமளந்தாய்!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஊழியாயினாய்! ஆழிமுன்னேந்தி*
கம்ப மாகரி கோள்விடுத்தானே!
காரணா! கடலைக்கடைந் தானே!*
எம்பிரான்!என்னையாளுடைத்தேனே!
ஏழையேன் இடரைக்களையாயே. 9

*காமர் தாதை கருதலர் சிங்கம்
காண இனிய கருங்குழற் குட்டன்*
வாமனன்என் மரகத வண்ணன்
மாதவன்மது சூதனன் தன்னை*
சேமநன்கமரும்புதுவையர்கோன்
விட்டுசித்தன் வியன்தமிழ்பத்தும்*
நாமமென்று நவின்றுரைப்பார்கள்
நண்ணுவாரொல்லை நாரணனுலகே. 10

5.3.. துக்கச்சுழலையை

துக்கச் சுழலையைச் சூழ்ந்து கிடந்த வலைய்யை யறப்பறித்து
புக்கினிற் புக்குன்னைக் கண்டுகொண்டேன் இனிப்போக விடுவதுண்டே?*
மக்கள் அறுவரைக் கல்லிடைமோத இழந்தவள் தன்வயிற்றில்*
சிக்கென வந்து பிறந்துநின்றாய் திருமாலிருஞ் சோலையெந்தாய்! 1

வளைத்துவைத் தேன், இனிப் போகலொட்டேன்; உன்தன்இந்திர ஞாலங்களால்*
ஒளித்திடில் நின்திரு வாணைகண்டாய் நீ ஒருவர்க்கும் மெய்யனல்லை*
அளித்தெங்கும் நாடும் நகரமும் தம்முடைத் தீவினை தீர்க்கலுற்று*
தெளித்து வலஞ்செய்யும் தீர்த்த முடைத்திரு மாலிருஞ் சோலையெந்தாய்! 2

*உனக்குப் பணிசெய் திருக்கும்தவமுடையேன், இனிப்போயொருவன்
தனக்குப் பணிந்து *கடைத்தலை நிற்கைநின்சாயை யழிவுகண்டாய்*
புனத்தினை கிள்ளிப் புதுவவிகாட்டிஉன்பொன்னடி வாழ்கவென்று*
இனக்குறவர்புதிய துண்ணும் எழில்மாலிருஞ் சோலையெந்தாய்! 3

காதம் பலவும் திரிந்துழன்றேற்கு அங்கோர்நிழலில்லை நீரும்இல்லை*உன்
பாத நிழலல்லால் மற்றோர்உயிர்ப்பிடம் நானெங்கும் காண்கின்றிலேன்*
தூதுசென் றாய்!குரு பாண்டவர்க்காய் அங்கோர்பொய்ச்சுற்றம் பேசிச்சென்று*
பேதஞ்செய் தெங்கும் பிணம்படுத்தாய்! திருமாலிருஞ் சோலையெந்தாய்! 4

காலும்எழா. கண்ண நீரும்நில்லா, உடல்சோர்ந்து, நடுங்கி*குரல்
மேலும்எழா, மயிர்க்கூச்சுமறாஎன தோள்களும் வீழ்வொழியா*
மாலுக ளாநிற்கும் என்மனனே! உன்னைவாழத் தலைப்பெய்திட்டேன்*
சேலுகளாநிற்கும் நீள்சுனைசூழ் திருமாலிருஞ் சோலையெந்தாய்! 5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எருத்துக் கொடியுடை யானும்பிரமனும்இந்திரனும் * மற்றும்
ஒருத்தரும் இப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறி வாருமில்லை*
மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணா!மறுபிறவி தவிரத்
திருத்தி* உன்கோயிற் கடைப்புகப்பெய் திருமாலிருஞ் சோலையெந்தாய்! 6

அக்கரை யென்னும் மனத்தக்கடலுள்அழுந்தியுன் பேரருளால்*
இக்கரை யேறிஇளைத்திருந்தேனை அஞ்சேல்என்று கைகவியாய்*
சக்கர மும்தடக் கைகளும்கண்களும்பீதக வாடையொடும்*
செக்கர் நிறத்துச் சிவப்புடையாய்!திருமாலிருஞ் சோலையெந்தாய்! 7

எத்தனை காலமும் எத்தனையூழியும் இன்றொடு நாளையென்றே*
இத்தனை காலமும் போய்க்கிறிப்பட்டேன், இனியுன்னைப் போகலொட்டேன்*
மைத்துனன் மார்களை வாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைகெடுத்தாய்*
சித்தம்நின் பாலதறிதியன்றே, திருமாலிருஞ் சோலையெந்தாய்! 8

அன்று வயிற்றிற் கிடந்திருந்தே யடிமைசெய்ய லுற்றிருப்பன்*
இன்றுவந் திங்குன்னைக் கண்டுகொண்டேன் இனிப்போக விடுவதுண்டே*
சென்றங்கு வாணனை ஆயிரந்தோளும் திருச்சக்கரமதனால்*
தென்றித் திசைதிசை வீழச்செற்றாய்; திருமாலிருஞ் சோலையெந்தாய். 9

*சென்றுல கம்குடைந் தாடுஞ்சுனைத் திருமாலிருஞ் சோலைதன்னுள்
நின்ற பிரான்* அடி மேல் அடிமைத்திறம் நேர்பட விண்ணப்பஞ்செய்*
பொன்திகழ் மாடம் பொலிந்துதோன்றும் புதுவைக்கோன் விட்டுசித்தன்*
ஒன்றினோ டொன்பதும் பாடவல்லார் உலகம் அளந்தான் தமரே.10

5.4.. சென்னியோங்கு

*சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய்*உலகு
தன்னைவாழ நின்றநம்பீ!தாமோதரா! சதிரா!*
என்னையும் என்னுடைமையையும் உன்சக்கரப்பொறி யொற்றிக்கொண்டு*
நின்னருளே புரிந்திருந்தேன்; இனியென் திருக்குறிப்பே? 1

பறவையேறு பரம்புருடா!நீ யென்னைக் கைக்கொண்டபின்*
பிறவியென்னும் கடலும் வற்றிப்பெரும்பத மாகின்றதால்*
இறவுசெய்யும் பாவக்காடுதீக்கொளீஇ வேகின்றதால்*
அறிவையென்னும் அமுதஆறுதலைப்பற்றி வாய்க்கொண்டதே. 2

எம்மனா!என் குலதெய்வமே! என்னுடைய நாயகனே*
நின்னுளேனாய்ப் பெற்றநன்மை இவ்வுலகினி லார்பெறுவார்*
நம்மன்போலே வீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ள பாவமெல்லாம*
சும்மெனாதே கைவிட்டோடித் தூறுகள் பாய்ந்தனவே. 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கடல்கடைந் தமுதங்கொண்டுகலசத்தை நிறைத்தாற்போல்*
உடலுருகி வாய்திறந்துமடுத்துன்னை நிறைத்துக்கொண்டேன்*
கொடுமைசெய்யும் கூற்றமும்என் கோலாடி குறுகப்பெறா*
தடவரைத்தோள் சக்ரபாணி!சார்ங்கவிற் சேவகனே! 4

பொன்னைக்கொண் டுரைகல்மீதே நிறமெழ உரைத்தாற்போல்*
உன்னைக்கொண்டென் நாவகம்பால்மாற்றின்றி யுரைத்துக்கொண்டேன்*
உன்னைக்கொண் டென்னுள்வைத்தேன்; என்னையும் உன்னிலிட்டேன்*
என்னப்பா! என் இருடீகேசா!என்னுயிர்க் காவலனே! 5

உன்னுடைய விக்கிரமம் ஒன்றொழி யாமல்எல்லாம்*
என்னுடைய நெஞ்சகம்பால் சுவர்வழி யெழுதிக்கொண்டேன்*
மன்னடங்க மழுவலங்கைக்கொண்ட இராமநம்பீ!*
என்னிடைவந் தெம்பெருமான் இனியெங்குப் போகின்றதே! 6

பருப்பதத்துக் கயல்பொறித்தபாண்டியர் குலபதிபோல்*
திருப்பொலிந்த சேவடியென்சென்னியின் மேல்பொறித்தாய்*
மருப்பொசித்தாய்!மல்லடர்த்தாய்!என்றென்றுன் வாசகமே*
உருப்பொலிந்த நாவினேனைஉனக்குரித் தாக்கினையே 7

அனந்தன்பாலும் கருடன்பாலும்ஐதுநொய்தாக வைத்து* என்
மனந்தனுள்ளே வந்துவைகிவாழச்செய்தாய்; எம்பிரான்!*
நினைந்தென்னுள்ளே நின்று நெக்குக் கண்கள் அசும்பொழுக*
நினைந்திருந்தே சிரமம்தீர்ந்தேன்நேமி நெடியவனே! 8

*பனிக்கடலிற் பள்ளிகோளைப்பழகவிட்டு *ஓடிவந்தென்
மனக்கடலில், வாழவல்லமாயமணாள நம்பி!*
தனிக்கடலே! தனிச்சுடரே !தனியுலகே!என்றென்று*
உனக்கிடமா யிருக்கவென்னை உனக்குரித் தாக்கினையே. 9

தடவரைவாய் மிளிர்ந்து மின்னும்தவள நெடுங்கொடிபோல்
சுடரொளியாய் நெஞ்சினுள்ளே தோன்றுமென் சோதிநம்பீ*
வடதடமும் வைகுந்தமும் மதிள்துவராபதியும்*
இடவகைகள் இகழ்ந்திட்டென்பால் இடவகைகொண்டனையே. 10

வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன் மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை*
ஆயரேற்றையமரர்கோவை அந்தணர்த மமுதத்தினை*
சாயைபோலப் பாடவல்லார்தாமும் அணுக்கர்களே 11

பெரியாழ்வார் திருவடிகளே சரணம்.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருப்பாவை

தனியன்

நீளாதுங்க ஸ்தநகிரிதடீ ஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசத: சிரஸ் ஸித்தம் அத்யாபயந்தீ!
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யாபலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூய ஏவாஸ்து பூய: !!

அன்னவயல் புதுவை ஆண்டாள்* அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்* இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள் நற்பாமாலை* பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியே* தொல்பாவை
பாடிஅருளவல்ல பல்வளையாய் * நாடி நீ
வேங்கடவற்கு என்னை விதி என்ற இம்மாற்றம்*
நாம் கடவாவண்ணமே நல்கு.

****

**மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!*
கூர்வேற் கொடுந்தொழிலன் நந்தகோபன் குமரன்*
ஏரார்ந்த கண்ணி யசோதை யிளஞ்சிங்கம்
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம்போல் முகத்தான்*
நாராயணனே நமக்கே பறைதருவான்*
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம் பாவைக்கு*
செய்யும் கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத் துயின்ற பரமனடி பாடி*
நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலே நீராடி*
மையிட்டெழுதோம் மலரிட்டு நாம் முடியோம்*
செய்யாதன செய்யோம் தீக்குறளை சென்றோதோம்*
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
உய்யுமாறு எண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர் பாடி*
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்ப*
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்ககுடம் நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்*
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். 3

ஆழி மழைக் கண்ணா ஒன்று நீ கைகரவேல்
ஆழியுள் புக்கு முகந்து கொடார்த்தேறி
ஊழி முதல்வன் உருவம் போல் மெய் கறுத்து
பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில்
ஆழிபோல் மின்னி வலம்புரி போல் நின்றதிர்ந்து
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழை போல்
வாழ உலகினிற் பெய்திடாய் நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை*
தூயபெருநீர் யமுனைத் துறைவனை*
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை*
தாயைக் குடல் விளக்கம் செய்த தாமோதரனை*
தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது*
வாயினாற் பாடி மனத்தினாற் சிந்திக்க*
போய பிழையும் புகுதருவான் நின்றனவும்*
தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பின காண் புள்ளரையன் கோயில்*
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?*
பிள்ளாய் ! எழுந்திராய் பேய் முலை நஞ்சுண்டு*
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி*
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை*
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்*
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்*
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலா ரெம்பாவாய். 6

கீசுகீசு என்றெங்கும் ஆனைச் சாத்தன்* கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே*
காசும் பிறப்பும் கலகலப்பக் கை பேர்த்து*
வாச நறுங்குழல் ஆய்ச்சியர்* மத்தினால்
ஓசைபடுத்த தயிரரவம் கேட்டிலையோ?*
நாயகப் பெண் பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி*
கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?*
தேசமுடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கீழ்வானம் வெள்ளென்று எருமை சிறுவீடு*
மேய்வான் பரந்தன காண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றாரைப் போகாமற் காத்து உன்னைக்*
கூவுவான் வந்து நின்றோம் கோதுகலமுடைய
பாவாய் ! எழுந்திராய் பாடிப் பறைகொண்டு*
மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய*
தேவாதி தேவனைச் சென்று நாம் சேவித்தால்*
ஆவாவென்று ஆராய்ந்து அருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய*
தூபம் கமழத் துயிலணை மேல் கண்வளரும்*
மாமான் மகளே ! மணிக்கதவம் தாள் திறவாய்*
மாமீர் ! அவளை எழுப்பீரோ?* உன் மகள் தான்*
ஊமையோ அன்றிச்செவிடோ? அனந்தலோ?*
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?*
மாமாயன் மாதவன் வைகுந்தன் என்றென்று*
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!*
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்*
நாற்றத் துழாய்முடி நாராயணன்* நம்மால்
போற்றப் பறை தரும் புண்ணியனால்* பண்டொருநாள்
கூற்றத்தின் வாய் வீழ்ந்த கும்பகருணனும்*
தோற்றும் உனக்கே பெருந்துயில் தான் தந்தானோ?*
ஆற்ற அனந்தல் உடையாய் ! அருங்கலமே!*
தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பல கறந்து*
செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும்*
குற்றம் ஒன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!*
புற்றரவல்குல் புனமயிலே! போதராய்*
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்து* நின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர் பாட*
சிற்றாதே பேசாதே செல்வப் பெண்டாட்டி !* நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். 11

கனைத்து இளங்கற்றெருமை கன்றுக் கிரங்கி*
நினைத்து முலை வழியே நின்று பால் சோர*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நனைத்து இல்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!*
பனித்தலை வீழ நின் வாசற் கடைபற்றி*
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற*
மனத்துக் கினியானைப் பாடவும் நீ வாய் திறவாய்*
இனித்தான் எழுந்திராய் ஈதென்ன பேருறக்கம்?*
அனைத்து இல்லத்தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின் வாய் கீண்டானைப் பொல்லா அரக்கனை*
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப் போய்*
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம் புக்கார்*
வெள்ளியெழுந்து வியாழம் உறங்கிற்று*
புள்ளும் சிலம்பின காண் போதரிக் கண்ணினாய்!*
குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே*
பள்ளிக் கிடத்தியோ? பாவாய் நீநன்னாளால்*
கள்ளம் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் *
செங்கழுநீர் வாய் நெகிழ்ந்து ஆம்பல் வாய் கூம்பினகாண்*
செங்கற் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர் *
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போதந்தார்*
எங்களை முன்னம் எழுப்புவான் வாய் பேசும்*
நங்காய் எழுந்திராய் நாணாதாய் நாவுடையாய்!*
சங்கொடு சக்கரம்ஏந்தும் தடக்கையன்*
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே ! இளங்கிளியே ! இன்னம் உறங்குதியோ?*
சில்லென்று அழையேன்மின் ! நங்கைமீர் போதர்கின்றேன்*
வல்லை உன் கட்டுரைகள் பண்டே உன் வாயறிதும்*
வல்லீர்கள் நீங்களே நானே தானாயிடுக *
ஒல்லை நீ போதாய் உனக்கென்ன வேறுடையை*
எல்லாரும் போந்தாரோ? போந்தார்போந்தெண்ணிக்கொள்*
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க
வல்லானை மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

**நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய
கோயில் காப்பானே!* கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே!* மணிக்கதவம் தாள் திறவாய்*
ஆயிர் சிறுமியரோமுக்கு* அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய் நேர்ந்தான்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்*
வாயால்முன்னம் முன்னம் மாற்றாதே அம்மா!* நீ
நேய நிலைக் கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே தண்ணீரே சோறே அறம் செய்யும்*
எம்பெருமான்! நந்தகோபாலா! எழுந்திராய்*
கொம்பனார்க்கு எல்லாம் கொழுந்தே குலவிளக்கே*
எம்பெருமாட்டி! யசோதாய்! அறிவுறாய்*
அம்பரமூடறுத் தோங்கி உலகளந்த*
உம்பர் கோமானே! உறங்காது எழுந்திராய்*
செம்பொற் கழலடிச் செல்வா !பலதேவா*
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்*
நந்தகோபாலன் மருமகளே! நப்பின்னாய்*
கந்தம் கமழும் குழலீ கடை திறவாய்*
வந்து எங்கும் கோழி அழைத்தன காண்* மாதவிப்
பந்தல் மேல் பல்கால் குயிலினங்கள் கூவின காண்*
பந்தார் விரலி உன் மைத்துனன் பேர் பாட *
செந்தாமரைக் கையால் சீரார் வளையொலிப்ப*
வந்து திறவாய் மகிழ்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக்கோட்டுக்கால் கட்டில் மேல்*
மெத்தென்ற பஞ்ச சனயத்தின் மேலேறி*
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்*
வைத்துக் கிடந்த மலர்மார்பா ! வாய்திறவாய்*
மைத்தடங்கண்ணினாய்! நீ உன் மணாளனை*
எத்தனை போதும் துயிலெழஒட்டாய் காண்*
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால்*
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்குமுன் சென்று*
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்*
செப்பம் உடையாய் திறல் உடையாய்!* செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயில் எழாய்*
செப்பன்ன மென் முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல்*
நப்பின்னை நங்காய்! திருவே! துயில் எழாய்*
உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை*
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப*
மாற்றாதே பால் சொரியும் வள்ளல் பெரும் பசுக்கள்*
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்*
ஊற்றமுடையாய்! பெரியாய்!* உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயில் எழாய்*
மாற்றார் உனக்கு வலிதொலைந்துன் வாசற் கண்*
ஆற்றாது வந்துன் அடிபணியுமா போலே*
போற்றி யாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண் மாஞாலத்தரசர்* அபிமான
பங்கமாய் வந்து நின் பள்ளிக் கட்டில் கீழே*
சங்கம் இருப்பார் போல் வந்து தலைப்பெய்தோம்*
கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே*
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?*
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற் போல்*
அங்கண் இரண்டும் கொண்டெங்கள் மேல் நோக்குதியேல்*
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

**மாரி மலை முழைஞ்சில் மன்னிக்கிடந்துறங்கும்*
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து*
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி*
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு*
போதருமா போலே நீ பூவைப் பூவண்ணா!* உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி* கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து* யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோ ரெம்பாவாய். 23

**அன்று இவ்வுலகம் அளந்தாய் அடிபோற்றி*
சென்று அங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி*
பொன்றச் சகடம் உதைத்தாய் புகழ் போற்றி*
கன்று குணிலா எறிந்தாய் கழல் போற்றி*
குன்று குடையா எடுத்தாய் குணம் போற்றி*
வென்று பகை கெடுக்கும் நின் கையில் வேல் போற்றி*
என்றென்றுன் சேவகமே ஏத்திப் பறை கொள்வான்*
இன்று யாம் வந்தோம் இரங்கேலோ ரெம்பாவாய். 24

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஒருத்தி மகனாய்ப் பிறந்து* ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்*
தரிக்கிலானாகித் தான் தீங்கு நினைந்த*
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்*
நெருப்பென்ன நின்ற நெடுமாலே!* உன்னை
அருத்தித்து வந்தோம் பறை தருதியாகில்*
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் பாடி*
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே! மணிவண்ணா! மார்கழி நீராடுவான்*
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்*
ஞாலத்தைஎல்லாம் நடுங்க முரல்வன*
பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே*
போல்வன சங்கங்கள் போய்ப்பாடுடையனவே*
சாலப் பெரும் பறையே பல்லாண்டிசைப்பாரே*
கோல விளக்கே கொடியே விதானமே*
ஆலினிலையாய் அருளேலோ ரெம்பாவாய். 26

**கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா!* உன்தன்னைப்
பாடிப் பறை கொண்டு யாம் பெறு சம்மானம்*
நாடு புகழும் பரிசினால் நன்றாக*
சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே*
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்*
ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு*
மூட நெய் பெய்து முழங்கை வழிவாரக்*
கூடி இருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

**கறவைகள் பின் சென்று கானம் சேர்ந்து உண்போம்*
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்*
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாம் உடையோம்*
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா!* உன்தன்னோடு
உறவேல் நமக்கிங்கு ஒழிக்க ஒழியாது*
அறியாத பிள்ளைகளோம் அன்பினால்* உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே*
இறைவா! நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

**சிற்றம் சிறுகாலே வந்துன்னைச்சேவித்து* உன்
பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய் *
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்து* நீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமற் போகாது*
இற்றைப் பறைகொள்வான் அன்று காண் கோவிந்தா!*
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும்* உன்தன்னோடு
உற்றோமேயாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்*
மற்றை நங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

**வங்கக் கடல் கடைந்த மாதவனைக் கேசவனை*
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி *
அங்கப்பறை கொண்டவாற்றை* அணி புதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதை சொன்ன*
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே*
இங்கிப் பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத் தோள்*
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்*
எங்கும் திருவருள் பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

ஆண்டாள் திருவடிகளே சரணம்

வாரணமாயிரம்

தனியன்

அல்லிநாள் தாமரைமே லாரணங்கினின் துணைவி
மல்லிநாடாண்ட மடமயில் மெல்லியலாள்
ஆயர் குலவேந்த னாகத்தாள் தென்புதுவை
வேயர் பயந்த விளக்கு

வாரணமாயிரம் சூழவலம் செய்து
நாரணன்நம்பி நடக்கின்றானென்றெதிர்
பூரணபொற்குடம் வைத்துப்புறமெங்கும்
தோரணம் நாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் 1

நாளைவதுவை மணமென்றுநாளிட்டு
பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ்
கோளரிமாதவன் கோவிந்தனென்பான் ஓர்
காளைபுகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான் 2

இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம்
வந்திருந்து என்னை மகள்பேசி மந்திரித்து

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மந்திரக்கோடியுடுத்தி மணமாலை
அந்தரிசூட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் 3

நால்திசைத்தீர்த்தங்கொணர்ந்து நனிநல்கி
பார்ப்பனச்சிட்டர்கள் பல்லாரெடுத்தேத்தி
பூப்புனைகண்ணிப் புனிதனோடு என்தன்னை
காப்புநாண் கட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் 4

கதிரோளிதீபம் கலசமுடனேந்தி
சதிரிளமங்கையர்தாம் வந்து எதிர்கொள்ள
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டு எங்கும்
அதிரப்புகுதக் கனாக்கண்டேன் தோழீ! நான் 5

மத்தளம்கொட்ட வரிசங்கம்நின்றூத
முத்துடைத்தாமம் நிறைதாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன்நம்பி மதுசூதனன் வந்தென்னை
கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன் தோழீ! நான் 6

வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால்
பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து
காய்சினமாகளிறன்னான் என்கைப்பற்றி
தீவலஞ்செய்ய கனாக்கண்டேன் தோழீ! நான் 7

இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும் பற்றாவான்
நம்மையுடையவன் நாராயணன்நம்பி
செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி
அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன் தோழீ! நான் 8

வரிசிலைவாள் முகத்து என்னைமார்தாம் வந்திட்டு
எரிமுகம்பாரித்து என்னை முன்னேநிறுத்தி
அரிமுகன் அச்சுதன் கைமேலென் கைவைத்து
பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் 9

குங்குமமப்பிக் குளிர்சாந்த மட்டித்து
மங்கலவீதி வலம்செய்துமணநீர்
அங்கு அவனோடு உடன்சென்று அங்கு ஆனைமேல்
மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன் தோழீ! நான் 10

ஆயனுக்காகத் தான் கண்டகனாவினை
வேயர்புகழ் வில்லிபுத்தூர்கோன் கோதைசொல்
தூயதமிழ் மாலை ஈரைந்தும் வல்லவர்
வாயும் நன்மக்களைப் பெற்று மகிழ்வரே 11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெருமாள் திருமொழி

தனியன்கள்

இன்னமுதமூட்டுகேன் இங்கேவா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமாள்*-பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள், சேரலர்கோன்* எங்கள்
குலசே கரனென்றே கூறு. – (உடையவர்)

ஆரம் கெடப்பர னன்பர்கொள் ளாரென்று *அவர்களுக்கே
வாரங் கொடுகுடப் பாரம்பிற்கை யிட்டவன் *மாற்றலரை
வீரங்கெடுத்தசெங் கோற்கொல்லி காவலன், வில்லவர்கோன்*
சேரன் குலசேகரன் முடிவேந்தர் சிகாமணியே.
(மணக்கால்நம்பி)

1 : இருளிரிய

*இருளிரியச் சுடர்மணிகள் இமைக்கும் நெற்றி
இனத்துத்தி யணிபணம் ஆயிரங்க ளார்ந்த*
அரவரசப் பெருஞ்சோதி அனந்த னென்னும்
அணிவிளங்கும் உயர்வெள்ளை யணையை மேவி*
திருவரங்கப் பெருநகருள் தெண்ணீர்ப் பொன்னி
திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொள்ளும்*
கருமணியைக் கோமளத்தைக் கண்டு கொண்டுஎன்
கண்ணிணைகள் என்றுகொலோ களிக்கும் நாளே? 1

வாயோர் ஈரைஞ்ஞூறு துதங்க ளார்ந்த
வளையுடம்பி னழல்நாகம் உமிழ்ந்த செந்தீ*
வீயாத மலர்ச்சென்னி விதான மேபோல்
மேன்மேலும் மிகவெங்கும் பரந்த தன்கீழ்*
காயாம்பூ மலர்ப்பிறங்க லன்ன மாலைக்
கடியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்*
மாயோனை மணத்தூணே பற்றி நின்றென்
வாயார என்றுகொலோ வாழ்த்தும் நாளே? 2

எம்மாண்பினயன்நான்கு நாவி னாலும்
எடுத்தேத்தி ஈரிரண்டு முகமுங் கொண்டு*
எம்மாடும் எழிற்கண்க ளெட்டி னோடும்
தொழுதேத்தி இனிதிறைஞ்ச நின்ற* செம்பொன்
அம்மான்தன் மலர்க்கமலக் கொப்பூழ் தோன்ற
அணியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்
அம்மான் தன் அடியிணைக்கீ ழலர்க ளிட்டங்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடியவரோ டென்றுகொலோ அணுகும் நாளே? 3

மாவினைவாய் பிளந்துகந்த மாலை, வேலை
வண்ணனை, என் கண்ணனை*வன் குன்ற மேந்தி
ஆவினையன் றுய்யக்கொண்ட ஆய ரேற்றை,
அமரர்கள்தந் தலைவனை, அந் தமிழி னின்பப்
பாவினை* அவ் வடமொழியைப் பற்றற்றார்கள்*
பயிலரங்கத்தரவணையில்பள்ளிகொள்ளும்*
கோவினை நா வுறவழுத்தி என்றன் கைகள்
கொய்ம்மலர் தூய் என்றுகொலோ கூப்பும் நாளே? 4

இணையில்லா இன்னிசையாழ் கெழுமி யின்பத்
தும்புருவும் நாரதனும் இறைஞ்சி யேத்த *
துணையில்லாத் தொன்மறைநூல் தோத்தி ரத்தால்
தொன்மலர்க்கண் அயன்வணங்கி யோவா தேத்த*
மணிமாட மாளிகைகள் மல்கு செல்வ
மதிளரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்*
மணிவண்ண னம்மானைக் கண்டு கொண்டென்
மலர்ச்சென்னி என்றுகொலோ வணங்கும் நாளே? 5

அளிமலர்மே லயனரனிந் திரனோடு ஏனை
அமரர்கள்தம் குழுவுமரம் பையரும் மற்றும் *
தெளிமதிசேர் முனிவர்கள்தம் குழுவு முந்தித்
திசைதிசையில் மலர்தூவிச் சென்று சேரும்*
களிமலர்சேர் பொழிலரங்கத் துரக மேறிக்
கண்வளரும் கடல்வண்ணர் கமலக் கண்ணும்*
ஒளிமதிசேர் திருமுகமும் கண்டு கொண்டென்
உள்ளம் மிக என்றுகொலோ உருகும் நாளே? 6

மறந்திகழும் மனமொழித்து வஞ்ச மாற்றி
ஐம்புலன்க ளடக்கியிடர்ப் பாரத் துன்பம்
துறந்து* இருமுப் பொழுதேத்தி யெல்லை யில்லாத்
தொல்நெறிக்கண் நிலைநின்ற தொண்ட ரான*
அறம்திகழும் மனத்தவர்தம் கதியைப் பொன்னி
அணியரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்*
நிறம்திகழும் மாயோனைக் கண்டென் கண்கள்
நீர்மல்க என்றுகொலோ நிற்கும் நாளே? 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கோலார்ந்த நெடுஞ்சார்ங்கம் கூனற் சங்கம்
கொலையாழி கொடுந்தண்டு கொற்ற ஒள்வாள்*
காலார்ந்த கதிக்கருட னென்னும் வென்றிக்
கடும்பறவை இவையனைத்தும் புறஞ்சூழ் காப்ப*
சேலார்ந்த நெடுங்கழனி சோலை சூழ்ந்த
திருவரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்*
மாலோனைக் கண்டின்பக் கலவி யெய்தி
வல்வினையேன் என்றுகொலோ வாழும் நாளே? 8

துராத மனக்காதல் தொண்டர் தங்கள்
குழாம்குழுமித் திருப்புகழ்கள் பலவும் பாடி*
ஆராத மனக்களிப்போ டழுத கண்ணீர்
மழைசோர நினைந்துருகி யேத்தி*நாளும்
சீரார்ந்த முழவோசை பரவை காட்டும்
திருவரங்கத் தரவணையிற் பள்ளி கொள்ளும்*
போராழி யம்மானைக் கண்டு துள்ளிப்
பூதலத்தில் என்றுகொலோ புரளும் நாளே? 9

*வன்பெருவா னகமுய்ய அமர ருய்ய
மண்ணுய்ய மண்ணுலகில் மனிச ருய்ய*
துன்பமிகு துயரகல அயர்வொன் றில்லாச்
சுகம்வளர அகமகிழுந் தொண்டர் வாழ*
அன்பொடுதென் திசைநோக்கிப் பள்ளி கொள்ளும்
அணியரங்கன் திருமுற்றத்து* அடியார்தங்கள்
இன்பமிகு பெருங்குழுவு கண்டு யானும்
இசைந்துடனே என்றுகொலோ விருக்கும் நாளே? 10

*திடர்விளங்கு கரைப்பொன்னி நடுவு பாட்டுத்
திருவரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்*
கடல்விளங்கு கருமேனி யம்மான் தன்னைக்
கண்ணாரக் கண்டுகக்கும் காதல் தன்னால்*
குடைவிளங்கு விறல்தானைக் கொற்ற வொள்வாள்
கூடலர்கோன் கொடைக்குலசே கரன்சொற் செய்த*
நடைவிளங்கு தமிழ்மாலை பத்தும் வல்லார்
நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே. 11

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2 : தேட்டருந்திறல்

*தேட்டருந்திறல் தேனினைத் தென்னரங்கனைத்*திரு மாதுவாழ்
வாட்டமில்வன மாலைமார்வனைவாழ்த்திமால்கொள்சிந் தையராய்*
ஆட்டமேவி யலந்தழைத்த யர்வெய்தும் மெய்யடி யார்கள்தம்*
ஈட்டம்கண்டிடக் கூடுமேலது காணும்கண்பயனாவதே 1

தோடுலாமலர் மங்கைதோளிணைதோய்ந்ததும்*சுடர் வாளியால்
நீடுமாமரம் செற்றதும்நிரைமேய்த்ததும் இவை யேநினைந்து*
ஆடிப்பாடி அரங்கவோ!என்றழைக்கும்தொண்ட ரடிப்பொடி
ஆடநாம்பெறில்*கங்கை நீர்குடைந்தாடும்வேட்கை யென் னாவதே 2

ஏறடர்த்ததும் ஏனமாய்நிலம்கீண்டதும்முன் இராமனாய்*
மாறடர்த்ததும் மண்ணளந்ததும்சொல்லிப்பாடி* வண் பொன்னிப்பே
ராறுபோல்வரும் கண்ணநீர்கொண்டரங்கன்கோயில் திருமுற்றம்*
சேறுசெய்தொண்டர் சேவடிச்செழுஞ்சேறென்சென்னிக் கணிவனே. 3

தோய்த்ததண்தயிர் வெண்ணெய்பாலுடன்உண்டலும்உடன் ருய்ச்சிகண்டு*
ஆர்த்ததோளுடை யெம்பிரானென்அரங்கனுக்கடி யார்களாய்*
நாத்தழும்பெழ நாரணாவென்றழைத்து மெய்தழும் பத்தொழுது
ஏத்தி*இன்புறும் தொண்டர்சேவடிஏத்திவாழ்த்துமென் நெஞ்சமே. 4

பொய்சிலைக்குரல் ஏற்றெருத்தம்இறுத்துப் போரர
வீர்த்தகோன்* செய்சிலைச்சுடர் சூழொளித்
திண்ணமாமதிள்தென் னரங்கனாம்* செய்சிலைக்கரு
மேகமொன்று தம்நெஞ்சுள்நின்று திகழப்போய்*
மெய்சிலிர்ப்பவர் தம்மையேநினைந்தென்மனம்மெய்சி லிர்க்குமே. 5

ஆதியந்த மனந்தமற்புதம்ஆனவானவர் தம்பிரான்*
பாதமாமலர் சூடும்பத்தியிலாத பாவிகள் உய்ந்திட*
தீதில்நன்னெறி காட்டி யெங்கும்திரிந்தரங்கனெம்மானுக்கே*
காதல்செய்தொண்டர்க் கெப்பிறப்பிலும்காதல்செய்யுமென்னெஞ்சமே. 6

காரினம்புரை மேனிநற்கதிர்முத்தவெண்ணகைச் செய்யவாய்*
ஆரமார்வ னரங்கனென்னும்அரும்பெருஞ்சுட ரொன்றினை*
சேரும்நெஞ்சின ராகிச் சேர்ந்துகசிந்திழிந்தகண் ணீர்களால்*
வாரநிற்பவர் தாளிணைக்கொருவாரமாகுமென் நெஞ்சமே. 7

மாலையுற்ற கடல்கிடந்தவன்வண்டுகிண்டு நறுந்துழாய்*
மாலையுற்ற வரைப்பெருந்திருமார்வனை மலர்க் கண்ணனை*
மாலையுற் றெழுந்தாடிப்பாடித்திரிந்தரங்க னெம்மானுக்கே
மாலையுற்றிடும் தொண்டர்வாழ்வுக்குமாலையுற்றதென் நெஞ்சமே.8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மொய்த்துக்கண்பணி சோரமெய்கள்சிலிர்ப்ப ஏங்கி யிளைத்துநின்று*
எய்த்துக்கும்பிடு நட்டமிட்டெழுந்தாடிப்பாடி யிறைஞ்சி *என்
அத்தனச்ச னரங்கனுக்கடியார்களாகி* அவனுக்கே
பித்தராமவர் பித்தரல்லர்கள்மற்றையார் முற்றும் பித்தரே. 9

அல்லிமாமலர் மங்கைநா தன்அரங்கன்மெய்யடி யார்கள்தம்
எல்லையில்அடி மைத்திறத்தினில்என்றுமேவு மனத்தனாம்*
கொல்லிகாவலன் கூடல்நாயகன்கோழிக்கோன்குல சேகரன்*
சொல்லினின்தமிழ் மாலைவல்லவர் தொண்டர்தொண்டர்களாவரே. 10

3 : மெய்யில்வாழ்க்கையை

*மெய்யில் வாழ்க்கையை மெய்யெனக் கொள்ளும்*இவ்
வையந் தன்னொடும் கூடுவ தில்லையான்*
ஐய னே!அரங் கா! என் றழைக்கின்றேன்*
மையல் கொண்டொழிந் தேன்என்றன் மாலுக்கே. 1

நூலி னேரிடை யார்திறத் தேநிற்கும்*
ஞாலந் தன்னொடும் கூடுவ தில்லையான்*
ஆலியா அழையா, அரங்கா!என்று*
மாலெ ழுந்தொழிந் தேன்என்தன் மாலுக்கே. 2

மார னார்வரி வெஞ்சிலைக் காட்செய்யும்*
பாரி னாரொடும் கூடுவ தில்லையான்*
ஆர மார்வ னரங்க னனந்தன் *நல்
நார ணன்நர காந்தகன் பித்தனே. 3

உண்டி யேயுடை யேயுகந் தோடும்*இம்
மண்டலத்தொடும் கூடுவ தில்லையான்*
அண்டவாண னரங்கன்* வன் பேய்முலை
உண்டவாயன்தன் உன்மத்தன் காண்மினே. 4

தீதில் நன்னெறி நிற்கஅல் லாதுசெய்*
நீதி யாரொடும் கூடுவ தில்லையான்*
ஆதி ஆய னரங்கன்* அந் தாமரைப்
பேதை மாமண வாளன்தன் பித்தனே. 5

எம்ப ரத்தர்அல் லாரொடும் கூடலன்*
உம்பர் வாழ்வையொன் றாகக் கருதிலன்*
தம்பி ரான்அம ரர்க்கு* அரங்க நகர்
எம்பி ரானுக் கெழுமையும் பித்தனே. 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எத்தி றத்திலும் யாரொடும் கூடும்*அச்
சித்தந் தன்னைத் தவிர்த்தனன் செங்கண்மால்*
அத்த னே!அரங் கா!என் றழைக்கின்றேன்*
பித்த னாயொழிந் தேன்எம் பிரானுக்கே. 7

பேய ரேயெனக் கியாவரும்* யானுமோர்
பேய னேயெவர்க் கும்இது பேசியென்!*
ஆய னே!அரங் கா! என்ற ழைக்கின்றேன்*
பேய னாயொழிந் தேன்எம்பி ரானுக்கே. 8

அங்கை யாழி யரங்கன் அடியிணை
தங்கு சிந்தைத் தனிப்பெரும் பித்தனாய்*
கொங்கர் கோன்குல சேகரன் சொன்னசொல்*
இங்கு வல்லவர்க் கேதமொன் றில்லையே. 9

4 : ஊனேறு

ஊனேறு செல்வத் துடற்பிறவி யான்வேண்டேன்
ஆனேறேழ் வென்றான் அடிமைத் திறமல்லால்*
கூனேறு சங்கம் இடத்தான்தன் வேங்கடத்து*
கோனேரி வாழும் குருகாய்ப் பிறப்பேனே. 1

ஆனாத செல்வத் தரம்பையர்கள் தற்சூழ*
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்*
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்*
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே. 2

பின்னிட்ட சடையானும் பிரமனு மிந்திரனும்*
துன்னிட்டுப் புகலரிய வைகுந்த நீள்வாசல்*
மின்வட்டச் சுடராழி வேங்கடக்கோன் தானுமிழும்*
பொன்வட்டில் பிடித்துடனே புகப்பெறுவே னாவேனே.. 3

ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்*
கண் துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்கு*
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்*
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே. 4

கம்பமத யானைக் கழுத்தகத்தின் மேலிருந்து*
இன்பமரும் செல்வமும் இவ்வரசும் யான்வேண்டேன்*
எம்பெருமா னீசன் எழில்வேங் கடமலைமேல்*
தம்பகமாய் நிற்கும் தவமுடையே னாவேனே. 5

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மின்னனைய நுண்ணிடையார் உருப்பசியும் மேனகையும்*
அன்னவர்தம் பாடலொடும் ஆடலவை ஆதரியேன்*
தென்னவென வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துள்*
அன்னனைய பொற்குவடா மருந்தவத்தே னாவேனே. 6

வானாளும் மாமதிபோல் வெண்குடைக்கீழ்*மன்னவர்தம்
கோனாகி வீற்றிருந்து கொண்டாடும் செல்வறியேன்*
தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடமலைமேல்*
கானாறாய்ப் பாயும் கருத்துடையே யாவேனே. 7

பிறையேறு சடையானும் பிரமனும் இந்திரனும்*
முறையாய பெருவேள்விக் குறைமுடிப்பான் மறையானான்*
வெறியார்தண் சோலைத் திருவேங் கடமலைமேல்*
நெறியாய்க் கிடக்கும் நிலையுடையே னாவேனே. 8

செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே
நெடியானே!வேங்கடவா!நின்கோயி லின்வாசல்*
அடியாரும் வானவரு மரம்பையரும் கிடந்தியங்கும்*
படியாய்க் கிடந்துன் பவளவாய் காண்பேனே. 9

உம்பர் உலகாண் டொருகுடைக்கீழ்* உருப்பசிதன்
அம்பொற் கலையல்குல் பெற்றாலும் ஆதரியேன்*
செம்பவள வாயான் திருவேங்கடமென்னும்
எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமாவேனே. 10

மன்னியதன்சாரல் வடவேங்கடத்தான்தன்*
பொன்னியலும்சேவடிகள்காண்பான் புரிந்திறைஞ்சி*
கொன்னவிலும்கூர்வேல் குலசேகரன்சொன்ன*
பன்னியநூல்தமிழ்வல்லார் பாங்காயபத்தர்களே. 11

5 : தருதுயரந்தடாயேல்

தருதுயரம் தடாயேல்உன் சரணல்லால் சரணில்லை
விரைகுழுவு மலர்ப்பொழில்சூழ் விற்றுவக்கோட்டம்மானே!*
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்*மற்றவள்தன்
அருள் நினைந்தே யழும்குழவி; அதுவேபோன்றிருந்தேனே 1

கண்டார் இகழ்வனவே காதலன்றான் செய்திடினும்*
கொண்டானை யல்லால் அறியாக் குலமகள்போல்
விண்தோய் மதிள்புடைசூழ் விற்றுவக்கோட் டம்மா!*நீ
கொண்டாளா யாகிலும்உன் குரைகழலே கூறுவனே. 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மீன் நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட் டம்மா!*என்
பால்நோக்காய் ஆகிலுமுன் பற்றல்லால் பற்றிலேன்*
தான்நோக்கா தெத்துயரம் செய்திடினும் * தார்வேந்தன்
கோல்நோக்கி வாழுங் குடிபோன் றிருந்தேனே. 3

வாளால் அறுத்துச் சுடினும் மருத்துவன்பால்*
மாளாத காதல்நோ யாளன்போல்*மாயத்தால்
மீளாத் துயர்தரினும் விற்றுவக்கோட் டம்மா!*நீ
ஆளா வுனதருளே பார்ப்பன் அடியேனே. 4

வெங்கண்திண் களிறடர்த்தாய்! விற்றுவக்கோட்டம்மானே!*
எங்குப்போய் உய்கேன்? உன் னிணையடியே யடையலல்லால்*
எங்கும்போய்க் கரைகாணா தெறிகடல்வாய் மீண்டேயும்*
வங்கத்தின் கூம்பேறும் மாப்பறவை போன்றேனே. 5

செந்தழலே வந்தழலை செய்திடினும்*செங்கமலம்
அந்தரஞ்சேர் வெங்கதிரோற் கல்லால் அலராவால்*
வெந்துயர்வீட் டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா!*உன்
அந்தமில்சீர்க் கல்லால் அகம்குழைய மாட்டேனே. 6

எத்தனையும் வான்மறந்த காலத்தும் பைங்கூழ்கள்*
மைத்தெழுந்து மாமுகிலே பார்த்திருக்கும் மற்றவைபோல்*
மெய்த்துயர்வீட்டாவிடினும் விற்றுவக்கோட் டம்மா!*என்
சித்தம்மிக உன்பாலே வைப்பன் அடியேனே. 7

தொக்கிலங்கி யாறெல்லாம் பரந்தோடி* தொடுகடலே
புக்கன்றிப் புறம்நிற்க மாட்டாதே ; மற்றவைபோல்*
மிக்கிலங்கு முகில்நிறத்தாய்!விற்றுவக்கோட்டம்மா!*உன்
புக்கிலங்கு சீரல்லால் புக்கிலன்காண், புண்ணியனே! 8

நின்னையே தான்வேண்டி, நீள்செல்வம் வேண்டாதான்
தன்னையே*தான்வேண்டும் செல்வம்போல், மாயத்தால்
மின்னையே சேர்திகிரி விற்றுவக்கோட் டம்மா!
நின்னையே தான்வேண்டி நிற்பன் அடியேனே. 9

விற்றுவக்கோட் டம்மாநீ வேண்டாயே யாயிடினும்
மற்றாரும் பற்றிலே னென்று அவனைத் தாள்நயந்த*
கொற்றவேல் தானைக் குலசேக ரன்சொன்ன*
நற்றமிழ் பத்தும்வல்லார் நண்ணார் நரகமே. 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8 : மன்னுபுகழ்

மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள்சிந்துவித்தாய்!*செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென்கருமணியே!*
என்னுடைய இன்னமுதே! இராகவனே!தாலேலோ. 1

புண்டரிக மலரதன்மேல் புவனியெல்லாம்படைத்தவனே!*
திண்திறலாள் தாடகைதன் உரமுருவச்சிலைவளைத்தாய்*
கண்டவர்தம் மனம்வழங்கும் கணபுரத்தென்கருமணியே!*
எண்திசையும் ஆளுடையாய்! இராகவனே! தாலேலோ. 2

கொங்குமலி கருங்குழலாள் கோசலைதன் குலமதலாய்!*
தங்குபெரும் புகழ்ச்சனகன் திருமருகா! தாசரதீ!*
கங்கையிலும் தீர்த்தமலி கணபுரத்தென் கருமணியே!*
எங்கள்குலத் தின்னமுதே! இராகவனே! தாலேலோ. 3

தாமரைமேல் அயனவனைப் படைத்தவனே!*தயரதன்தன்
மாமதலாய்!மைதிலிதன் மணவாளா!* வண்டினங்கள்
காமரங்க ளிசைபாடும் கணபுரத்தென் கருமணியே!*
ஏமருவும் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. 4

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி*
ஆராவன் பிளையவனோ டருங்கான மடைந்தவனே!*
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!*
தாராளும் நீண்முடியென் தாசரதீ! தாலோலோ. 5

சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கான மடைந்தவனே!*
அற்றவர்கட் கருமருந்தே!*அயோத்திநகர்க் கதிபதியே !*
கற்றவர்கள் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!*
சிற்றவைதன் சொல்கொண்ட சீராமா! தாலேலோ. 6

ஆலினிலைப் பாலகனாய் அன்றுலக முண்டவனே!*
வாலியைக்கொன் றரசிளைய வானரத்துக் களித்தவனே!*
காலின்மணி கரையலைக்கும் கணபுரத்தென் கருமணியே!*
ஆலிநகர்க் கதிபதியே!அயோத்திமனே! தாலேலோ. 7

மலையதனால் அணைகட்டி மதிளிலங்கை யழித்தவனே!
அலைகடலைக் கடைந்தமரர்க் கமுதருளிச் செய்தவனே!*
கலைவலவர் தாம்வாழும் கணபுரத்தென் கருமணியே!*
சிலைவலவா! சேவகனே! சீராமா! தாலேலோ. 8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தளையவிழும் நறுங்குஞ்சித் தயரதன்தன் குலமதலாய்!*
வளையவொரு சிலையதனால் மதிளிலங்கை யழித்தவனே!*
களைகழுநீர் மருங்கலரும் கணபுரத்தென் கருமணியே!*
இளையவர்கட் கருளுடையாய் இராகவனே தாலேலோ. 9

தேவரையும் அசுரரையும் திசைகளையும் படைத்தவனே!
யாவரும்வந் தடிவணங்க அரங்கநகர்த் துயின்றவனே!*
காவிரிநல் நதிபாயும் கணபுரத்தென் கருமணியே!*
ஏவரிவெஞ் சிலைவலவா! இராகவனே! தாலேலோ. 10

*கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் காகுத்தன்
தன்னடிமேல் * தாலேலோ என்றுரைத்த தமிழ்மாலை*
கொல்நவிலும் வேல்வலவன் குடைக்குலசேகரன்சொன்ன*
பன்னியநூல் பத்தும்வல்லார் பாங்காய பக்தர்களே. 11

10 : அங்கணெடுமதிள்

*அங்கணெடு மதிள்புடைசூழயோத்தி யென்னும்
அணிநகரத் துலகனைத்தும் விளக்கும் சோதி*
வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி
விண்முழுது முய்யக்கொண்ட வீரன் தன்னை*
செங்கணெடுங் கருமுகிலை யிராமன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
எங்கள்தனி முதல்வனையெம் பெருமான் தன்னை
என்றுகொலோ!கண்குளிரக் காணும் நாளே! 1

வந்தெதிர்த்த தாடகைதன் உரத்தைக் கீறி
வருகுருதி பொழிதரவன் கணையொன் றேவி*
மந்திரங்கொள் மறைமுனிவன் வேள்வி காத்து
வல்லரக்க ருயிருண்ட மைந்தன்,காண்மின்*
செந்தளிர்வாய் மலர்நகைசேர் செழுந்தண் சோலைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
அந்தணர்க ளொருமூவா யிரவர் ஏத்த
அணிமணியா சனத்திருந்த அம்மான் தானே. 2

செவ்வரிநற் கருநெடுங்கண் சீதைக் காகிச்
சினவிடையோன் சிலையிறுத்து, மழுவா ளேந்தி*
வெவ்வரிநற் சிலைவாங்கி; வென்றி கொண்டு,
வேல்வேந்தர் பகைதடிந்த வீரன் தன்னை*
தெவ்வரிஞ்சு நெடும்புரிசை யுயர்ந்த பாங்கர்த்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எவ்வரிவெஞ் சிலைத்தடக்கை யிராமன் தன்னை
இறைஞ்சுவார் இணையடியே யிறைஞ்சி னேனே. 3

தொத்தலர்பூஞ் சுரிகுழல்கை கேசி சொல்லால்
தொன்னகரம் துறந்து துறைக் கங்கைதன்னை*
பத்தியுடைக் குகன்கடத்த வனம்போய்ப் புக்குப்
பரதனுக்குப் பாதுகமும் அரசு மீந்து*
சித்திரகூ டத்திருந்தான் தன்னை யின்று
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
எத்தனையும் கண்குளிரக் காணப் பெற்ற
இருநிலத்தார்க் கிமையவர்நே ரொவ்வார் தாமே. 4

வலிவணக்கு வரைநெடுந்தோள் விராதைக் கொன்று
வண்தமிழ்மா முனிகொடுத்த வரிவில் வாங்கி*
கலைவணக்கு நோக்கரக்கி மூக்கை நீக்கிக்
கரனோடு தூடணன் தன் உயிரை வாங்கி*
சிலைவணக்கி மான்மறிய வெய்தான் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
தலைவணக்கிக் கைகூப்பி யேத்த வல்லார்
திரிதலால் தவமுடைத்துத் தரணி தானே. 5

தனமருவு வைதேகி பிரிய லுற்றுத்
தளர்வெய்திச் சடாயுவைவை குந்தத் தேற்றி*
வனமருவு கவியரசன் காதல் கொண்டு
வாலியைக்கொன் றிலங்கைநக ரரக்கர் கோமான்*
சினமடங்க மாருதியாற் சுடுவித் தானைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
இனிதமர்ந்த அம்மானை இராமன் றன்னை
ஏத்துவார் இணையடியே யேத்தி னேனே. 6

குரைகடலை அடலம்பால் மறுக வெய்து
குலைகட்டி, மறுகரையை யதனா லேறி*
எரிநெடுவே லரக்கரொடு மிலங்கை வேந்தன்
இன்னுயிர்கொண் டவன் தம்பிக் கரசு மீந்து*
திருமகளோ டினிதமர்ந்த செல்வன் தன்னைத்
தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
அரசமர்ந்தா னடிசூடு மரசை யல்லால்
அரசாக வெண்ணேன்மற் றரசு தானே. 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அம்பொனெடு மணிமாட அயோத்தி யெய்தி
    அரசெய்தி. அகத்தியன்வாய்த் தான்முன் கொன்றான்
தன்*பெருந்தொல் கதைகேட்டு மிதிலைச் செல்வி
    உலகுய்யத் திருவயிறு வாய்த்த மக்கள்*
செம்பவளத் திரள்வாய்த்தன் சரிதை கேட்டான்
    தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
எம்பெருமான் றன்சரிதை செவியால், கண்ணால்
    பருகுவோம்; இன்னமுதம் மதியோ மன்றே. 8

செறிதவச்சம் புகன்தன்னைச் சென்று கொன்று
    செழுமறையோ னுயிர்மீட்டுத் தவத்தோ னீந்த*
நிறைமணிப்பூ ணணியுங்கொண் டிலவணன் தன்னைத்
    தம்பியால் வானேற்றி, முனிவன் வேண்ட*
திறல்விளக்கு மிலக்குமனைப் பிரிந்தான் தன்னைத்
    உறைவானை * மறவாத வுள்ளந் தன்னை
உடையோம்; மற் றுறுதுயர மடையோ மன்றே. 9

*அன்றுசரா சரங்களைவை குந்தத் தேற்றி
    அடலரவப் பகையேறி யசுரர் தம்மை
வென்று* இலக்கு மணிநெடுந்தோள் நான்கும் தோன்ற
    விண்முழுது மெதிர்வரத்தன் தாமம் மேவி*
சென்றினிது வீற்றிருந்த அம்மான் தன்னைத்
    தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்*
என்றும்நின்றான் அவனிவனென் றேத்தி நாளும்
    இறைஞ்சுமினோ எப்பொழுதும், தொண்டீர்! நீரே. 10

*தில்லைநகர்த் திருச்சித்ர கூடந் தன்னுள்
    திறல்விளங்கு மாருதியோ டமர்ந்தான் தன்னை*
எல்லையில்சீர்த் தயரதன் தன் மகனாய்த் தோன்றிற்–
    றதுமுதலாத் தன்னுலகம் புக்க தீறா*
கொல்லியலும் படைத்தானைக் கொற்ற வொள்வாள்
    கோழியர்கோன். குடைக்குலசேகரன்சொற்செய்த
நல்லியலின் தமிழ்மாலை பத்தும் வல்லார்
    நலந்திகழ்நா ரணனடிக்கீழ் நண்ணு வாரே. 11

குலசேகரப்பெருமாள் திருவடிகளே சரணம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தொண்டரடிப்பொடியாழ்வார் அருளிச்செய்த.

திருமாலை

திருமாலைத்தனியன்

மற்றொன்றும் வேண்டாமனமே!★ மதிளரங்கர்
கற்றினம் மேய்த்த கழலிணைக்கீழ்★ -உற்ற
திருமாலை பாடும் சீர்த்தொண்டரடிப்பொடி யெம்
பெருமானை ★ எப்பொழுதும் பேசு.

(திருவரங்கத்து எம்பெருமான் விஷயம்)

காவலிற்புலனைவைத்துக் கலிதன்னைக் கடக்கப்பாய்ந்து★
நாவலிட்டுழிதரு கின்றோம் நமன்தமர் தலைகள் மீதே★
மூவுல குண்டு மிழ்ந்த முதல்வ நின் நாமம் கற்ற★
ஆவலிப் புடைமை கண்டாய் அரங்கமா நகருளானே! 1

பச்சைமா மலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்★
அச்சுதா! அமர ரேறே! ஆயர்தம் கொழுந்தே! என்னும்★
இச்சுவை தவிர யான்போய் இந்திர லோகம் ஆளும்★
அச்சுவைபெறினும்வேண்டேன் அரங்கமா நகருளானே! 2

வேதநூல் பிராயம் நூறு மனிசர்தாம் புகுவ ரேலும்★
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில்பதினை யாண்டு★
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத் துன்பம்★
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே! 3

மொய்த்தவல் வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால்★
கத்திர பந்து மன்றே பராங்கதி கண்டு கொண்டான்★
இத்தனை யடியரானார்க்கு இரங்கும்நம் அரங்கனாய★
பித்தனைப் பெற்றும் அந்தோ! பிறவியுட்பிணங்குமாறே. 4

பெண்டிரால் சுகங்களுய்ப்பான் பெரியதோ ரிடும்பை பூண்டு★
உண்டிராக் கிடக்கும் போது உடலுக்கே கரைந்து நைந்து★
தண்துழாய் மாலை மார்பன் தமர்களாய்ப் பாடி யாடி★
தொண்டுபூண் டமுதமுண்ணாத் தொழும்பர் சோறுக்கு மாறே! 5

மறம்சுவர் மதிளெடுத்து மறுமைக்கே வெறுமை பூண்டு★
புறம்சுவ ரோட்டை மாடம் புரளும்போதறியமாட்டீர்★
அறம்சுவ ராகிநின்ற அரங்கனார்க்ஆட்செய்யாதே★
புறஞ்சுவர் கோலஞ் செய்து புட்கௌவக் கிடக்கின்றீரே 6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புலையற மாகி நின்ற புத்தொடு சமண மெல்லாம்★
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோ தாம்?★
தலையறுப் புண்டும் சாகேன் சத்தியம் காண்மின் ஐயா!★
சிலையினல் இலங்கை செற்ற தேவனே தேவ னாவான் 7

வெறுப்பொடு சமணர் முண்டர் விதியில் சாக்கியர்கள்★
நின்பால்பொறுப்பரி யனகள் பேசில் போவதே நோய தாகி★
குறிப்பெ னக் கடையு மாகில் கூடுமேல் தலையை ஆங்கே★
அறுப்பதே கருமம் கண்டாய் அரங்கமா நகருளானே! 8

மற்றுமோர் தெய்வ முண்டே? மதியிலா மானி டங்காள்★
உற்றபோ தன்றி நீங்கள் ஒருவனென் றுணர மாட்டீர்★
அற்றமே லொன்ற றியீர் அவனல்லால் தெய்வமில்லை★
கற்றினம் மேய்த்த எந்தை கழலிணை பணிமின் நீரே 9

நாட்டினான் தெய்வம் எங்கும் நல்லதோ ரருள்தன்னாலே★
காட்டினான் திருவ ரங்கம் உய்பவர்க்கு உய்யும் வண்ணம்★
கேட்டிரே நம்பி மீர்காள்? கெருடவா கனனும்நிற்க★
சேட்டைதன் மடியகத்துச் செல்வம் பார்த்திருக்கின்றீரே. 10

ஒருவில்லால் ஓங்கு முந்நீ ரடைத்து லகங்க ளுய்ய★
செருவிலே அரக்கர் கோனைச் செற்ற நம் சேவகனார்★
மருவிய பெரிய கோயில் மதிள்திருவரங்க மென்னா★
கருவிலே திருவிலாதீர்! காலத்தைக் கழிக்கின்றீரே. 11

நமனும்முற் கலனும் பேச நரகில் நின்றார்கள் கேட்க★
நரகமே சுவர்க்க மாகும் நாமங்களுடைய நம்பி★
அவனதூர் அரங்க மென்னாது அயர்த்துவீழ்ந்தளியமாந்தர்★
கவலையுள் படுகின் றாரென்று அதனுக்கே கவல்கின்றேனே 12

எறியும்நீர் வெறி கொள் வேலை மாநிலத்து உயிர்களெல்லாம்★
வெறிகொள்பூந் துளவ மாலை விண்ணவர் கோனையேத்த★
அறிவிலா மனிச ரெல்லாம் அரங்கமென் றழைப்பராகில்★
பொறியில்வாழ் நரக மெல்லாம் புல்லெழுந்தொழியுமன்றே 13

வண்டினம் முரலும் சோலை மயிலினம் ஆலும் சோலை★
கொண்டல் மீதணவும் சோலை குயிலினம் கூவும் சோலை★
அண்டர்கோன் அமரும் சோலை அணிதிருவரங்க மென்னா★
மிண்டர்பாய்ந்து ண்ணும் சோற்றை விலக்கி நாய்க்கிடுமினீரே 14

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மெய்யர்க்கே மெய்ய னாகும் விதியிலா என்னைப்போல★
பொய்யர்க்கே பொய்ய னாகும் புட்கொடி யுடைய கோமான்★
உய்யப்போ முணர்வி னார்கட்கு ஒருவனென் றுணர்ந்த பின்னை★
ஐயப்பா டறுத்துத் தோன்றும் அழகனூரரங்கமன்றே. 15

சூதனாய்க் கள்வ னாகித் தூர்த்தரோடு இசைந்த காலம்★
மாதரார் கயற்க ணென்னும் வலையுட்பட் டழுந்துவேனை★
போதரே யென்று சொல்லிப் புந்தியுள் புகுந்து தன்பால்★
ஆதரம் பெருக வைத்த அழகனூர் அரங்க மன்றே. 16

விரும்பிநின் றேத்த மாட்டேன் விதியிலேன் மதியொன் றில்லை★
இரும்புபோல் வலிய நெஞ்சம் இறையிறை உருகும் வண்ணம்★
சுரும்பமர் சோலை சூழ்ந்த அரங்கமா கோயில் கொண்ட★
கரும்பினைக் கண்டு கொண்டென் கண்ணிணை களிக்குமாறே. 17

இனிதிரைத் திவலை மோத எறியும் தண் பரவை மீதே★
தனிகிடந்து அரசுசெய்யும் தாமரைக்கண்ணனெம்மான்★
கனியிருந் தனைய செவ்வாய்க் கண்ணனைக் கண்ட கண்கள்★
பனியரும்புதிரு மாலோ! என்செய்கேன் பாவியேனே? 18

குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி★
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி★
கடல்நிறக் கடவு ளெந்தை அரவணைத் துயிலு மாகண்டு★
உடலெனக்குருகுமாலோ? என்செய்கேன்?உலகத் தீரே! 19

பாயுநீர் அரங்கந் தன்னுள் பாம்பணைப் பள்ளி கொண்ட★
மாயனார் திருநன் மார்வும் மரகத வுருவும் தோளும்★
தூய தாமரைக்கண் களும் துவரிதழ்ப் பவள வாயும்★
ஆயசீர் முடியும் தேசும் அடியரோர்க்கு அகலலாமே? 20

பணிவினால் மனம தொன்றிப் பவளவா யரங்கனார்க்கு★
துணிவினால் வாழ மாட்டாத் தொல்லை நெஞ்சே! நீ சால்வாய்★
அணியினார் செம்பொ னாய அருவரை யனைய கோயில்★
மணியனார் கிடந்த வாற்றை மனதினால் நினைக்கலாமே? 21

பேசிற்றே பேச லல்லால் பெருமையொன்று உணர லாகாது★
ஆசற்றார் தங்கட் கல்லால் அறியலா வானு மல்லன்★
மாசற்றார் மனத்து ளானை வணங்கிநா மிருப்ப தல்லால்★
பேசத்தானாவ துண்டோ? பேதைநெஞ்சே! நீசொல்லாய். 22

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கங்கையிற் புனிதமாய காவிரி நடுவு பாட்டு★
பொங்குநீர் பரந்து பாயும் பூம்பொழி லரங்கந் தன்னுள்★
எங்கள்மா இறைவனீசன் கிடந்ததோர் கிடக்கை கண்டும்★
எங்ஙனம் மறந்து வாழ்கேன்? ஏழையேனேழையேனே. 23

வெள்ளநீர் பரந்து பாயும் விரிபொழி லரங்கந் தன்னுள்★
கள்வனார் கிடந்த வாறும் கமலநன் முகமும் கண்டும்★
உள்ளமே! வலியை போலும் ஒருவனென்று உணர மாட்டாய்★
கள்ளமே காதல் செய்துன் கள்ளத்தே கழிக்கின்றாயே. 24

குளித்துமூன் றனலை யோம்பும் குறிகொளந்தணமை தன்னை★
ஒளித்திட்டேன் என்கணில்லை நின்கணும் பத்தனல்லேன்★
களிப்பதென் கொண்டு?நம்பி! கடல்வண்ணா! கதறுகின்றேன்★
அளித்தெனக் கருள்செய் கண்டாய் அரங்கமா நகருளானே! 25

போதெல்லாம் போது கொண்டுன் பொன்னடி புனைய மாட்டேன்★
தீதிலாமொழிகள் கொண்டு உன்திருக்குணம் செப்பமாட்டேன்★
காதலால்நெஞ்சமன்பு கலந்திலேன் அதுதன்னாலே★
ஏதிலேனரங்கர்க்குஎல்லே! என்செய்வான் தோன்றினேனே? 26

குரங்குகள்மலையைநூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடி★
தரங்கநீரடைக்கலுற்ற சலமிலாவணிலும்போலேன்★
மரங்கள்போல்வலியநெஞ்ச வஞ்சனேன் நெஞ்சுதன்னால்★
அரங்கனார்க்காட்செய்யாதே அளியத்தேனயர்க்கின்றேனே . 27

உம்பராலறியலாகா ஒளியுளார் ஆனைக்காகி★
செம்புலாலுண்டுவாழும் முதலைமேல்சீறிவந்தார்★
நம்பரமாயதுண்டே? நாய்களோம் சிறுமையோரா★
எம்பிராற்காட்செய்யாதே என்செய்வான் தோன்றினேனே? 28

ஊரிலேன்காணியில்லை உறவுமற்றொருவரில்லை★
பாரில்நின் பாதமூலம் பற்றிலேன் பரமமூர்த்தி!★
காரொளிவண்ணனே! கண்ணனே! கதறுகின்றேன்★
ஆருளர்?களைகணம்மா! அரங்கமாநகருளானே! 29

மனத்திலோர்தூய்மையில்லை வாயிலோரின்சொலில்லை★
சினத்தினால் செற்றம் நோக்கித் தீவிளிவிளிவன்வாளா★
புனத்துழாய்மாலையானே! பொன்னிசூழ்திருவரங்கா!★
எனக்கினிக்கதியென் சொல்லாய்? என்னையாளுடைய கோவே! 30

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தவத்துளார்தம்மிலல்லேன் தனம்படைத்தாரிலல்லேன்★
உவர்த்த நீர்போல என்றனுற்றவர்க்கொன்றுமல்லேன்★
துவர்த்தசெவ்வாயினார்க்கே துவக்கறத்துரிசனானேன்★
அவர்த்தமே பிறவிதந்தாய் அரங்கமாநகருளானே! 31

ஆர்த்துவண்டலம்புஞ்சோலை அணிதிருவரங்கந்தன்னுள்★
கார்த்திரளனையமேனிக் கண்ணனே! உன்னைக்காணும்★
மார்க்கமொன்றறியமாட்டா மனிசரில்துரிசனாய★
மூர்க்கனேன்வந்துநின்றேன் மூர்க்கனேன்மூர்க்கனேனே. 32

மெய்யெல்லாம் போகவிட்டு விரிகுழலாரிற்பட்டு★
பொய்யெல்லாம் பொதிந்து கொண்ட போழ்க்கனேன் வந்துநின்றேன்★
ஐயனே!அரங்கனே!உன்னருளென்னுமாசைதன்னால்★
பொய்யனேன் வந்துநின்றேன் பொய்யனேன் பொய்யனேனே 33

உள்ளத்தேயுறையும் மாலை உள்ளுவானுணர்வொன்றில்லா★
கள்ளத்தேன் நானும் தொண்டாய்த்தொண்டுக்கேகோலம் பூண்டு★
உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உடனிருந்தறிதியென்று★
வெள்கிப்போயென்னுள்ளே நான் விலவறச் சிரித்திட்டேனே. 34

தாவியன்றுலகமெல்லாம் தலைவிளாக்கொண்டவெந்தாய்!★
சேவியேனுன்னையல்லால் சிக்கெனச்செங்கண்மாலே!★
ஆவியே!அமுதே! என்தனாருயிரனையவெந்தாய்!★
பாவியேனுன்னையல்லால் பாவியேன் பாவியேனே 35

மழைக்கன்று வரைமுனேந்தும் மைந்தனே!மதுரவாறே!★
உழைக்கன்றே போல நோக்கமுடையவர்வலையுட்பட்டு★
உழைக்கின்றேற்கு என்னை நோக்கா தொழிவதே! உன்னை யன்றே★
அழைக்கின்றேன் ஆதிமூர்த்தி! அரங்கமாநகருளானே! 36

தெளிவிலாக்கலங்கல் நீர்சூழ் திருவரங்கத்துளோங்கும்★
ஒளியுளார்தாமேயன்றே தந்தையும் தாயுமாவார்★
எளியதோரருளுமன்றே என்திறத்தெம்பிரானார்★
அளியன்நம்பையல் என்னார் அம்மவோ!கொடியவாறே! 37

மேம்பொருள் போகவிட்டு மெய்ம்மையை மிகவுணர்ந்து★
ஆம்பரிசறிந்து கொண்டு ஐம்புலனகத்தடக்கி★
காம்பறத்தலைசிரைத்து உன்கடைத்தலையிருந்து வாழும்★
சோம்பரை உகத்திபோலும் சூழ்புனலரங்கத்தானே! 38

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

அடிமையிற்குடிமையில்லா அயல்சதுப்பேதிமாரில்★
குடிமையில்கடைமைபட்ட குக்கரிற்பிறப்பரேலும்★
முடியினில்துளபம்வைத்தாய்! மொய்கழற்கன்புசெய்யும்★
அடியரையுகத்திபோலும் அரங்கமாநகருளானே! 39

திருமறுமார்வ! நின்னைச்சிந்தையுள் திகழவைத்து★
மருவியமனத்தராகில் மாநிலத்துயிர்களெல்லாம்★
வெருவரக்கொன்று சுட்டிட்டு ஈட்டியவினையரேலும்★
அருவினைப்பயனதுய்யார் அரங்கமாநகருளானே 40

வானுளாரறியலாகா வானவா என்பராகில்★
தேனுலாந்துளபமாலைச் சென்னியாய் என்பராகில்★
ஊனமாயினகள் செய்யும் ஊனகாரகர்களேலும்★
போனகம்செய்த சேடம் தருவரேல் புனிதமன்றே 41

பழுதிலாவொழுகலாற்றுப் பலசதுப்பேதிமார்கள்!★
இழிகுலத்தவர்களேலும் எம்மடியார்களாகில்★
தொழுமினீர் கொடுமின்கொண்மின் என்று நின்னோடு மொக்க★
வழிபடவருளினாய்போல் மதிள் திருவரங்கத்தானே! 42

அமரவோரங்கமாறும் வேதமோர்நான்குமோதி★
தமர்களில் தலைவராய சாதியந்தணர்களேலும்★
நுமர்களைப்பழிப்பராகில் நொடிப்பதோரளவில் ஆங்கே★
அவர்கள்தாம் புலையர்போலும் அரங்கமாநகருளானே! 43

★பெண்ணுலாம் சடையினானும் பிரமனுமுன்னைக் காண்பான்★
எண்ணிலாவூழியூழி தவஞ்செய்தார்வெள்கிநிற்ப★
விண்ணுளார்வியப்பவந்து ஆனைக்கன்றருளையீந்த★
கண்ணறா உன்னையென்னோ? களைகணாக்கருதுமாறே. 44

★வளவெழும் தவளமாட மதுரை மாநகரந்தன்னுள்★
கவளமால்யானை கொன்ற கண்ணனை அரங்கமாலை★
துளவத்தொண்டாயதொல்சீர்த் தொண்டரடிப் பொடிசொல்★
இளையபுன்கவிதையேலும் எம்பிராற்கினியவாறே. 45



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

திருப்பள்ளியெழுச்சி

தனியன்

தமேவ மத்வா பரவாஸு தேவம்
ரங்கேசயம் ராஜவதர் ஹணீயம்!
ப்ராபோதிகீம் யோ க்ருத ஸூக்திமாலாம்
பக்தாங்க்ரிரேணும் பகவந்தம் ஈடே!!

மண்டங்குடி என்பர் மாமறையோர் மன்னியசீர்*
தொண்டரடிபொடி தொன்னகரம்*– வண்டு
திணர்த்த வயல் தென் அரங்கத்தம்மானை*பள்ளி
உணர்த்தும் பிரான் உதித்த ஊர்.

*****

*கதிரவன் குணதிசைச் சிகரம் வந்தணைந்தான்
கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்*
மது விரிந்து ஒழுகின மாமலரெல்லாம்
வானவர் அரசர்கள் வந்து வந்தீண்டி*
எதிர்திசை நிறைந்தனர் இவரொடும் புகுந்த
இருங்களிற்று ஈட்டமும் பிடியொடு முரசும்*
அதிர்தலில் அலைகடல் போன்றுளது எங்கும்
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 1

கொழுங்கொடி முல்லையின் கொழுமலர் அணவிக்
கூர்ந்தது குணதிசை மாருதம் இதுவோ*
எழுந்தன மலரணைப் பள்ளிகொள் அன்னம்
ஈன்பனி நனைந்த தம் இருஞ்சிறகுதறி*
விழுங்கிய முதலையின் பிலம்புரை பேழ்வாய்
வெள்ளெயிறுற அதன் விடத்தினுக்கனுங்கி*
அழுங்கிய ஆனையின் அருந்துயர் கெடுத்த
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 2

சுடரொளி பரந்தன சூழ்திசை எல்லாம்
துன்னிய தாரகை மின்னொளி சுருங்கி*
படரொளி பசுத்தனன் பனிமதி இவனோ
பாயிருள் அகன்றது பைம்பொழில் கமுகின்*
மடலிடைக் கீறி வண்பாளைகள் நாற
வைகறை கூர்ந்தது மாருதம் இதுவோ*
அடலொளி திகழ்தரு திகிரியந் தடக்கை
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே, 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மேட்டிள மேதிகள் தளைவிடும் ஆயர்கள்
வேய்ங்குழல் ஓசையும் விடைமணிக் குரலும்*
ஈட்டிய இசை திசை பரந்தன வயலுள்
இரிந்தன சுரும்பினம் இலங்கையர் குலத்தை*
வாட்டிய வரிசிலை வானவர் ஏறே!
மாமுனி வேள்வியைக் காத்து* அவபிரதம்
ஆட்டிய அடுதிறல் அயோத்தி எம்மரசே!
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 4

புலம்பின புட்களும் பூம்பொழில்களின் வாய்
போயிற்றுக் கங்குல் புகுந்தது புலரி*
கலந்தது குணதிசைக் கனை கடல் அரவம்
களிவண்டு மிழற்றிய கலம்பகம் புனைந்த*
அலங்கலந்தொடையல் கொண்டடியிணை பணிவான்
அமரர்கள் புகுந்தனர் ஆதலில் அம்மா !*
இலங்கையர்கோன் வழிபாடு செய் கோயில்
எம்பெருமான்! பள்ளியெழுந்து அருளாயே 5

இரவியர் மணிநெடும் தேரோடும் இவரோ!
இறையவர் பதினொரு விடையரும் இவரோ*
மருவிய மயிலினன் அறுமுகன் இவனோ
மருதரும் வசுக்களும் வந்து வந்தீண்டி*
புரவியோடாடலும் பாடலும் தேரும்
குமரதண்டம் புகுந்தீண்டிய வெள்ளம்
அருவரை அனைய நின்கோயில் முன் இவரோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 6

அந்தரத்து அமரர்கள் கூட்டங்கள் இவையோ
அருந்தவ முனிவரும் மருதரும் இவரோ*
இந்திரன் ஆனையும் தானும் வந்திவனோ
எம்பெருமான் உன் கோயிலின் வாசல்*
சுந்தரர் நெருக்க விச்சாதரர் நூக்க
இயக்கரும் மயங்கினர் திருவடித் தொழுவான்*
அந்தரம் பாரிடமில்லை மற்றிதுவோ
அரங்கத்தம்மா! பள்ளியெழுந்து அருளாயே. 7

வம்பவிழ் வானவர் வாயுறை வழங்க
மாநிதி கபிலை ஒண் கண்ணாடி முதலா*
எம்பெருமான் படிமைக்கலம் காண்டற்கு

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏற்பனவாயின கொண்டு நன்முனிவர்
தும்புரு நாரதர் புகுந்தனர் இவரோ
தோன்றினன் இரவியம் துலங்கொளி பரப்பி*
அம்பரதலத்தில் நின்று அகல்கின்றதிருள்போய்
அரங்கத்தம்மா பள்ளியெழுந்து அருளாயே. 8

ஏதமில் தண்ணுமை எக்கம் மத்தளி
யாழ் குழல் முழவமோடிசைதிசை கெழுமி*
கீதங்கள் பாடினர் கின்னரர் கெருடர்கள்
கந்தருவரவர் கங்குலுளெல்லாம் *
மாதவர் வானவர் சாரணர் இயக்கர்
சித்தரும் மயங்கினர் திருவடித் தொழுவான்*
ஆதலில் அவர்க்கு நாளோலக்கமருள
அரங்கத்தம்மா பள்ளியெழுந்து அருளாயே. 9

கடிமலர்க் கமலங்கள் மலர்ந்தன இவையோ
கதிரவன் கனைகடல் முளைத்தனன் இவனோ*
துடியிடையார் சுரிகுழல் பிழிந்து உதறித்
துகிலுடுத்தேறினர் சூழ்புனல் அரங்கா*
தொடையொத்த துளவமும் கூடையும் பொலிந்து
தோன்றிய தோள் தொண்டரடிப்பொடி என்னும்
அடியனை* அளியன் என்று அருளி உன்னடியார்க்கு
ஆட்படுத்தாய் பள்ளியெழுந்து அருளாயே. 10

தொண்டரடிப்பொடி ஆழ்வார் திருவடிகளே சரணம்

திருப்பாணாழ்வார் அருளிச் செய்த

அமலனாதிபிரான்

தனியன்கள்

ஆபாதசூடமநுபூய ஹரிம் சயாநம்
மத்யே கவேரதுஹிதுர் முதிதாந்தராத்மா
அத்ரஷ்ட்ருதாம் நயநயோர் விஷயாந்தராணாம்
யோ நிச்சிகாய மநவை முநிவாஹநம் தம்

காட்டவேகண்டபாதம் கமல நல்லாடையுந்தி*
தேட்டருமுதரபந்தம் திருமார்வு கண்டம் செவ்வாய்*
வாட்டமில்கண்கள் மேனி முனியேறித்தனிபுகுந்து*
பாட்டினால்கண்டுவாழும் பாணர் தாள்பரவினோமே.*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

*அமலனாதிபிரான் அடியார்க்கென்னையாட்படுத்த
விமலன்,*விண்ணவர்கோன் விரையார்பொழில்வேங்கடவன்*
நிமலன்நின்மலன் நீதிவானவன் நீள்மதிளரங்கத்தம்மான்,* திருக்
கமலபாதம்வந்து என்கண்ணிலுள்ளன வொக்கின்றதே. 1

உவந்தவுள்ளத்தனாய் உலகமளந்தண்டமுற*
நிவந்தநீள் முடியன் அன்றுநேர்ந்தநிசாசரரைக்*
கவர்ந்த வெங்கணைக்காகுத்தன் கடியார்
பொழிலரங்கத்தம்மான் *அரைச்
சிவந்தவாடையின்மேல் சென்றதாமென சிந்தனையே. 2

மந்திபாய் வடவேங்கடமாமலை, வானவர்கள்
சந்திசெய்யநின்றான் அரங்கத்தரவினணையான்*
அந்திபோல்நிறத்தாடையும்
அதன்மேலயனைப்படைத்ததோரெழில்*
உந்திமேலதன்றோ அடியேனுள்ளத்தின்னுயிரே 3

சதுரமாமதிள் சூழ் இலங்கைக்கிறைவன் தலைபத்து
உதிரவோட்டி* ஓர்வெங்கணையுய்த்தவன் ஓதவண்ணன்*
மதுரமாவண்டுபாட மாமயிலாடரங்கத்தம்மான்* திருவயிற்
றுதரபந்தம் என்னுள்ளத்துள் நின்றுலாகின்றதே 4

பாரமாய பழவினைபற்றறுத்து* என்னைத்தன்
வாரமாக்கிவைத்தான் வைத்ததன்றியென்னுள்புகுந்தான்*
கோரமாதவம்செய்தனன்கொலறியேன் அரங்கத்தம்மான்*
திருவாரமார்பதன்றோ அடியேனையாட் கொண்டதே. 5

துண்டவெண்பிறையன் துயர்தீர்த்தவன்* அஞ்சிறைய
வண்டுவாழ்பொழில்சூழ் அரங்கநகர்மேயவப்பன்*
அண்டரண்டபகிரண்டத்துஒருமாநிலமெழுமால்வரை*முற்றும்
முண்டகண்டம்கண்டீர் அடியேனையுய்யக்கொண்டதே. 6

கையினார்சுரிசங்கனலாழியர்* நீள்வரைபோல்
மெய்யனார் துளபவிரையார் கமழ்நீள்முடியெம்
ஐயனார்*அணியரங்கனார் அரவினணைமிசைமேயமாயனார்*
செய்யவாய்ஐயோ என்னைச்சிந்தைகவர்ந்ததுவே. 7

பரியனாகிவந்த அவுணனுடல்கீண்ட,* அமரர்க்
கரியவாதிப்பிரான் அரங்கத்தமலன்முகத்துக்*
கரியவாகிப்புடைபரந்து மிளிர்ந்துசெவ்வரியோடி,*நீண்டவப்
பெரியவாயகண்கள் என்னைப்பேதைமைசெய்தனவே. 8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆலமாமரத்தினிலைமேல் ஒருபாலகனாய்
ஞாலமேழுமுண்டான் அரங்கத்தரவினணையான்*
கோலமாமணியாரமும்முத்துத்தாமமும்முடிவில்லதோரெழில்*
நீலமேனிஐயோ நிறைகொண்டதென்நெஞ்சினையே. 9

*கொண்டல்வண்ணனைக் கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயன்,* என்னுள்ளம்கவர்ந்தானை*
அண்டர்கோனணியரங்கன் என்னமுதினைக்
கண்டகண்கள்* மற்றென்றினைக்காணாவே. 10

மதுரகவியாழ்வார் அருளிச் செய்த

கண்ணிநுண் சிறுத்தாம்பு

தனியன்கள்

அவிதிதவிஷயாந்தர : சடாரே: உபநிஷதாமுபகாநமா த்ரபோக:
அபி சகுணவசாத் ததேகசேஷீ மதுரகவிர் ஹ்ருதயேமமாவிரஸ்து

வேறென்றும்நானறியேன் வேதம்தமிழ்செய்த
மாறன் சடகோபன் வண்குருகூர் –ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்தும் மதுரகவியார் எம்மை
ஆள்வாரவரே யரண்.

*கண்ணிநுண்சிறுத்தாம்பினால் கட்டுண்ணப்
பண்ணியபெருமாயன்*, என்னப்பனில்*
நண்ணித்தென்குருகூர் நம்பியென்றக்கால்*
அண்ணிக்குமமுதூறும் என்நாவுக்கே. 1

நாவினால் நவிற்றி இன்பமெய்தினேன்*
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே*
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி*
பாவினின்னிசை பாடித்திரிவனே. 2

திரிதந்தாகிலும் தேவபிரானுடைக்*
கரியகோலத் திருவுருக்காண்பன்நான்*
பெரியவண்குருகூர் நகர்நம்பிக்கா
ளுரியனாய்* அடியேன் பெற்ற நன்மையே. 3

நன்மையால்மிக்க நான் மறையாளர்கள்*
புன்மையாகக் கருதுவராதலின்*
அன்னையாயத்தனாய் என்னையாண்டிடும்
தன்மையான்* சடகோபனென்நம்பியே. 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நம்பினேன் பிறர்நன்பொருள் தன்னையும்*
நம்பினேன் மடவாரையுமுன்னெலாம்*
செம்பொன்மாடத் திருக்குருகூர் நம்பிக்கு*
அன்பனாய்* அடியேன் சதிர்த்தேனின்றே. 5

இன்று தொட்டும் எழுமையுமெம்பிரான்*
நின்றுதன்புகழ் ஏத்தவருளினான்*
குன்றமாடத் திருக்குருகூர் நம்பி*
என்றுமென்னை இகழ்விலன்காண்மினே. 6

கண்டுகொண்டென்னைக் காரிமாறப்பிரான்*
பண்டைவல்வினை பாற்றியருளினான் *
எண்டிசையும் அறியவியம்புகேன்*
ஒண்டமிழ்ச் சடகோபனருளையே. 7

அருள்கொண்டாடும் அடியவரின்புற*
அருளினான் அவ்வருமறையின்பொருள்*
அருள்கொண்டு ஆயிரமின் தமிழ்பாடினான்*
அருள்கண்டீர் இவ்வுலகினில்மிக்கதே. 8

மிக்கவேதியர் வேதத்தினுட்பொருள்*
நிற்கப்பாடி என்நெஞ்சுள்நிறுத்தினான்*
தக்கசீர்ச் சடகோபனென்நம்பிக்கு*ஆட்
புக்ககாதல் அடிமைப்பயனன்றே. 9

பயனன்றாகிலும் பாங்கல்லராகிலும்*
செயல்நன்றாகத்திருத்திப் பணிகொள்வான்*
குயில்நின்றார் பொழில்சூழ் குருகூர்நம்பி*
முயல்கின்றேன் உன்தன்மொய்கழற்கன்பையே. 10

அன்பன்தன்னை அடைந்தவர் கட்கெல்லா*
மன்பன், தென்குருகூர் நகர்நம்பிக்கு*
அன்பனாய் மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதி* வைகுந்தங்காண்மினே. 11



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பெரிய திருமொழி

தனியன்கள்

கலயாமிகலித்வம்ஸம் கவிம்லோகதிவாகரம்
யஸ்யகோபி; ப்ரகாஸாபி; ஆவித்யம் நிஹதம்தம :!!
(திருக்கோட்டியூர்நம்பி)

வாழிபரகாலன் வாழிகலிகன்றி*
வாழிகுறையலூர் வாழ்வேந்தன்-வாழியரோ*
மாயோனைவாள்வலியால் மந்திரங்கொள்* மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல். எம்பெருமானார்)
நெஞ்சுக் கிருள்கடி தீபம், அடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம்*தமிழ்நன்னூல் துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம்* பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறி*பர காலன் பனுவல்களே.
(கூரத்தாழ்வான்)

எங்கள் கதியே! இராமானுசமுனியே! *
சங்கைகெடுத் தாண்ட தவராசா! * – பொங்குபுகழ்
மங்கையர்கோ னீந்த மறையாயிரமனைத்தும்*
தங்குமனம் நீயெனக்குத் தா.

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று*
கோலிப் பதிவிருந்த கொற்றவனே! * – வேலை
அணைத்தருளும் கையால் அடியேன் வினையை*
துணித்தருள வேணும் துணிந்து. (எம்பார்)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

1.1 வாடினேன்

(பெரியதிருமந்திரத்தின் மகிமை)

*வாடினேன்; வாடி, வருந்தினேன் மனத்தால்;
பெருந்துயர் இடும்பையில் பிறந்து *
கூடினேன்; கூடி யிளையவர் தம்மோ
டவர் தரும் கலவியே கருதி*
ஓடினேன் ஓடி யுய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து*
நாடினேன்; நாடி, நான்கண்டு கொண்டேன்–
நாராய ணாவென்னும் நாமம் 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

*ஆவியே! அமுதே! எனநினைந் துருகி,
அவரவர் பணைமுலை துணையா*
பாவியேன் உணரா தெத்தனை பகலும்
பழுதுபோ யொழிந்தன நாள்கள்*
தூவிசேர் அன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுது *என்
நாவினால் உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணாவென்னும் நாமம். 2

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமார் உருவமே மருவி*
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்தஅந் நாள்கள்*
காமனார் தாதை தம்முடை யடிகள்*
தம்மடைந் தார்மனத் திருப்பார்*
நாமம்நா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 3

வென்றியே வேண்டி, வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி*
நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்
என்செய்கேன்? நெடுவிசும் பணவும்*
பன்றியா யன்று பாரகங் கீண்ட
பாழியான் ஆழியா னருளே*
நன்றுநா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 4

கள்வனேன்; ஆனேன் படிறுசெய் திருப்பேன்;
கண்டவா திரிதந்தே னேலும்*
தெள்ளியேன் ஆனேன்; செல்கதிக் கமைந்தேன்;
சிக்கெனத் திருவருள் பெற்றேன்*
உள்ளெலாம் உருகிக் குரல்தழுத் தொழுந்தேன்;
உடம்பெலாம் கண்ணநீர் சோர*
நள்ளிரு ளளவும் பகலும்நா னழைப்பன்
நாராயணா வென்னும் நாமம். 5

*எம்பிரான் எந்தை யென்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வாணாள்*
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி,
அவருயிர் செகுத்தஎம் மண்ணல்*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி*
நம்பிகாள்! உய்ய நான் கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 6

இற்பிறப் பறியீர்; இவரிவ ரென்னீர்,
இன்னதோர் தன்மையென் றுணரீர்*
கற்பகம்! புலவர் களைகண்! என் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்*
சொற்பொரு ளாளீர்! சொல்லுகேன் வம்மின்;
சூழ்புனல் குடந்தையே தொழுமின்;
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்ம்மின்
நாராய்ணா வென்னும் நாமம். 7

கற்றிலேன் கலைகள் ; ஐம்புலன் கருதும்
கருத்துளே திருத்தினேன் மனத்தை*
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை ;
பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்*
செற்றமே வேண்டித் திரிதர்வேன்; தவிர்ந்தேன்;
செல்கதிக் குய்யுமா றெண்ணி*
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்-
நாராயணா வென்னும் நாமம். 8

*குலத்தரும் ; செல்வந் தந்திடும்; அடியார்
படுதுய ராயின வெல்லாம்*
நிலந்தரஞ் செய்யும்; நீள்விசும் பருளும்;
அருளொடு பெருநில மளிக்கும்*
வலந்தரும்; மற்றுந் தந்திடும்; பெற்ற
தாயினு மாயின செய்யும்*
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராயணா வென்னும் நாமம். 9

*மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையர் வாள்கலி கன்றி*
செஞ்சொலா லெடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்*
துஞ்சும்போ தழைமின்; துயர்வரில் நினைமின்;
துயரிலீர்!சொல்லினும் நன்றாம்*
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு-
நாராயணா வென்னும் நாமம். 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

1:3 ... முற்றமூத்து

முற்ற மூத்துக் கோல்துணையாமுன்னடி நோக்கிவளைந்து*
இற்ற கால்போல் தள்ளி மெள்ள இருந்தங் கிளையாமுன்*
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடு* உயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங்குதுமே 1

முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்னொரு கோலூன்றி*
விதிர்வி திர்த்துக் கண்சுழன்று மேற்கிளை கொண்டிருமி*
இதுவென் னப்பர்மூத்த வாறென் றிளையவ ரேசாமுன்*
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே 2

உறிகள் போல்மெய்ந் நரம்பெழுந்தூன் தளர்ந்துள்ளமெள்கி*
நெறியை நோக்கிக் கண்சுழன்று நின்று நடுங்காமுன்*
அறிதி யாகில் நெஞ்சம்!அன்பாய் ஆயிர நாமஞ்சொல்லி*
வெறிகொள் வண்டு பண்கள் பாடும்வதரி வணங்குதுமே. 3

பீளை சோரக் கண் இடுங்கிப் பித்தெழ மூத்திருமி*
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்*
காளை யாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்*
வாளை பாயும் தண்த டஞ்சூழ் வதரி வணங்குதுமே. 4

பண்டு காம ரான வாறும், பாவையர் வாயமுதம்*
உண்ட வாறும், வாழ்ந்த வாறும், ஒக்க வுரைத்திருமி*
தண்டு காலா வூன்றி யூன்றித் தள்ளி நடவாமுன்*
வண்டு பாடும் தண் துழாயான் வதரி வணங்குதுமே. 5

எய்த்த சொல்லோ டீளை யேங்கி யிருமி யிளைத்துடலம்*
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் பேசி அயராமுன்*
அத்தன் எந்தை யாதி மூர்த்தி ஆழ்கட லைக்கடைந்த*
மைத்த சோதி யெம்பெ ருமான் வதரி வணங்குதுமே. 6

பப்ப அப்பர் மூத்த வாறு பாழ்ப்பது சீத்திரளை
ஒப்ப* ஐக்கள் போத வுந்த ; வுன் தமர் காண்மின் என்று*
செப்பு நேர்மென் கொங்கை நல்லார் தாம்சிரி யாதமுன்னம்*
வைப்பும் நங்கள் வாழ்வும் ஆனான் வதரி வணங்குதுமே 7

ஈசி போமின் ஈங்கி ரேன்மின்; இருமி யிளைத்தீர்* உள்ளம்
கூசி யிட்டீர் என்று பேசும் குவளையங் கண்ணியர்பால்*
நாச மான பாசம் விட்டு நன்னெறி நோக்கலுறில்*
வாசம் மல்கு தண்துழாயான் வதரி வணங்குதுமே. 8

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புலன்கள் நைய மெய்யில் மூத்துப் போந்திருந் துள்ளமெள்கி*
கலங்க ஐக்கள் போத வுந்திக் கண்டு பிதற்றாமுன்*
அலங்க லாய தண்துழாய்கொண் டாயிர நாமஞ்சொல்லி*
வலங்கொள் தொண்டர் பாடியாடும் வதரி வணங்குதுமே. 9

வண்டு தண்தே னுண்டு வாழும் வதரி நெடுமாலை
கண்டல் வேலி மங்கை வேந்தன் கலிய னொலிமாலை*
கொண்டு தொண்டர் பாடி யாடக் கூடிடில்* நீள் விசும்பில்
அண்ட மல்லால் மற்றவர்க்கோர் ஆட்சி யறியோமே. 10

1 : 6... வாணிலா முறுவல்

*வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன்* அதனைப் பிழையெனக் கருதிப்
பேதையேன் பிறவிநோ யறுப்பான்*
ஏணிலேன் இருந்தேன்; எண்ணினேன்; எண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன்*வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 1

சிலம்படி யுருவின் கருநெடுங் கண்ணார்
திறத்தனாய் அறத்தையே மறந்து*
புலம்படிந் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா*
அலம்புரி தடக்கை ஆயனே! மாயா!
வானவர்க் கரசனே!* வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடி யடைந்தேன்-
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 2

சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து,
சுரிகுழல் மடந்தையர் திறத்து*
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
தொண்டனேன் நமன்தமர் செய்யும்*
வேதனைக் கொடுங்கி நடுங்கினேன்; வேலை
வெண்டிரை யலமரக் கடைந்த
நாதனே* ! வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து,
பிறர்பொருள், தாரமென் றிவற்றை*
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத்து* எரியெழு கின்ற
செம்பினால் இயன்ற பாவையைப் பாவீ!
தழுவென மொழிவதற் கஞ்சி*
நம்பனே! வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 4

இடும்பையால் அடர்ப்புண்டு, இடுமினோ துற்றென்
றிரந்தவர்க் கில்லையே யென்று*
நெடுஞ்சொலால் மறுத்த நீசனேன், அந்தோ!
நினைக்கிலேன் வினைப்பயன் தன்னை*
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்
படுவதோர் கொடுமிறைக் கஞ்சி*
நடுங்கிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 5

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடும் திளைத்திட்டு*
ஓடியும் உழன்றும் உயிர்களே கொன்றேன்,
உணர்விலேன் ஆதலால்* நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன்,
பரமனே! பாற்கடல் கிடந்தாய்!*
நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 6

நெஞ்சினால் நினைந்தும், வாயினால் மொழிந்தும்
நீதியல் லாதன செய்தும்*
துஞ்சினார் செல்லும் தொன்னெறி கேட்டே
வஞ்சனேன் அடியேன் நெஞ்சினிற் பிரியா
வானவா! தானவர்க் கென்றும்
நஞ்சனே!* வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 7

ஏவினார் கலியார் நலிகவென் றென்மேல்
எங்ஙனே வாழுமாறு?* ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல் வண்ணா!*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பாவின்ஆர் இன்சொல் பன்மலர் கொண்டுன்
பாதமே பரவிநான் பணிந்து* என்
நாவினால் வந்துன் திருவடி யடைந்தேன்!
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 8

ஊனிடைச் சுவர்வைத் தென்புதூண் நாட்டி
உரோமம்மேய்ந்து ஒன்பது வாசல்*
தானுடைக் குரம்பை பிரியும்போ துன்றன்
சரணமே சரணமென் றிருந்தேன்*
தேனுடைக் கமலத் திருவினுக் கரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்!*
நானுடைத் தவத்தால் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்! 9

*ஏதம்வந் தணுகா வண்ணம்நா மெண்ணி
எழுமினோ தொழுதும், என்று* இமையோர்
நாதன்வந் திறைஞ்சும் நைமிசா ரணியத்
தெந்தையைச் சிந்தையுள் வைத்து*
காதலே மிகுத்த கலியன்வாய் ஒலிசெய்
மாலைதான் கற்றுவல் லார்கள்*
ஓதநீர் வையம் ஆண்டுவெண் குடைக்கீழ்
உம்பரு மாகுவர் தாமே 10

1 : 9... தாயே தந்தை

தாயே தந்தையென்றும் , தாரமே,கிளை, மக்களென்றும்
நோயே பட்டொழிந்தேன்; உன்னைக்காண்பதோர் ஆசையினால்*
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்திரு வேங்கடவா!*
நாயேன் வந்தடைந்தேன்;நல்கியாளென்னைக் கொண்டருளே 1

மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு* மாநிலத்து
நானே நானாவித நரகம்புகும் பாவஞ்செய்தேன்*
தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கட மாமலை* என்
ஆனாய்! வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 2

கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால்*
என்றெ னும்இரந்தார்க் கினிதாக வுரைத்தறியேன்*
குன்றேய் மேகமதிள் குளிர்மாமலை வேங்கடவா!*
அன்றே வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

குலந்தான் எத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்*
நலந்தான் ஒன்றுமிலேன்; நல்லதோரறஞ் செய்துமிலேன்*
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார்திரு வேங்கடவா!*
அலந்தேன் வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 4

எப்பா வம்பலவும் இவையேசெய் திளைத்தொழிந்தேன்*
துப்பா! நின்னடியே தொடர்ந்தேத்தவுங் கிற்கின்றிலேன்*
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை* என்
அப்பா! வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 5

மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமா காசமுமாம்*
புண்ணார் ஆக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்*
விண்ணார் நீள்சிகர விரையார்திரு வேங்கடவா!*
அண்ணா! வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 6

தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்*
பெரியேன் ஆயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்*
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா!*
அரியே! வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே7

நோற்றேன் பல்பிறவி நுன்னைக்காண்பதோ ராசையினால்*
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றனன் எம்பெருமான்!*
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா!*
ஆற்றேன் வந்தடைந்தேன்; அடியேனையாட்கொண்டருளே 8

பற்றேல் ஒன்றுமிலேன்; பாவமேசெய்து பாவியானேன்*
மற்றேல் ஒன்றறியேன் மாயனே! எங்கள் மாதவனே!*
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா!*
அற்றேன் வந்தடைந்தேன்; அடியேனையாட் கொண்டருளே 9

கண்ணாய் ஏழுலகுக் குயிராயஎங் கார்வண்ணனை
விண்ணோர் தாம்பரவும் பொழில்வேங்கட வேதியனை*
திண்ணார் மாடங்கள்சூழ் திருமங்கையர் கோன்கலியன்*
பண்ணார் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே10



CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

2 : 3... விற்பெருவிழவும்

*விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழ*
செற்றவன் தன்னைப் புரமெரி செய்த
சிவனுறு துயர்களை தேவை*
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்தன் தேர்முன் நின்றானை*
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 1

*வேதத்தை, வேதத் தின்சுவைப் பயனை,
விழுமிய முனிவர் விழுங்கும்*
கோதிலின் கனியை, நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்*
ஆதியை, யமுதை, என்னை யாளுடை
அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும்* மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 2

வஞ்சனை செய்யத் தாயுரு வாகி
வந்தபேய் அலறிமண் சேர*
நஞ்சமர் முலையூ டுயிர்செக வுண்ட
நாதனைத் தானவர் கூற்றை*
விஞ்சைவா னவர்சா ரணர் சித்தர் வியந்து
துதிசெய்யப் பெண்ணுருவாகி*
அஞ்சுவை யமுதம் அன்றளித் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 3

இந்திர னுக்கென் றாயர்கள் எடுத்த
எழில்விழ வில்பழ நடைசெய்*
மந்திர விதியில் பூசனை பெறாது
மழைபொழிந் திடத்தளர்ந்து* ஆயர்
எந்தம்மோ டினஆநிரைதள ராமல்
எம்பெரு மான்! அருள் என்ன*
அந்தமில் வரையால் மழைதடுத் தானைத்-
திருவல்லிக் கேணிக்கண் டேனே 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

இன்துணைப் பதுமத் தலர்மகள் தனக்கும்
இன்பம், நற் புவிதனக் கிறைவன்*
தன்துணை யாயர் பாவைநப் பின்னை
தனக்கிறை, மற்றையோர்க் கெல்லாம்
வன்துணை* பஞ்ச பாண்டவர்க் காகி
வாயுரை தூதுசென் றியங்கும்
என்துணை* எந்தை தந்தைதம் மானைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே. 5

அந்தகன் சிறுவன் அரசர்தம் அரசற்
கிளையவன் அணியிழை யைச்சென்று*
எந்தமக் குரிமை செய் எனத் தரியாது
எம்பெரு மான்அருள்! என்ன*
சந்தம்அல் குழலாள் அலக்கண்நூற் றுவர்தம்
பெண்டிரும் எய்திநூ லிழப்ப*
இந்திரன் சிறுவன் தேர்முன்நின் றானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 6

*பரதனும் தம்பி சத்துருக் கனனும்
இலக்கும னோடு மை திலியும்*
இரவும்நன் பகலும் துதிசெய்ய நின்ற
இராவணாந் தகனை, எம் மானை*
குரவமே கமழும் குளிர்பொழி லூடு
குயிலொடு மயில் கள்நின் றால*
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 7

*பள்ளியில் ஓதி வந்ததன் சிறுவன்
வாயில்ஓர் ஆயிர நாமம்*
ஒள்ளிய வாகிப் போதஆங் கதனுக்
கொன்றுமோர் பொறுப்பில னாகி*
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்ப,
பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்*
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 8

*மீனமர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென் றிழிந்த*
கானமர் வேழம் கையெடுத் தலறக்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கராஅதன் காலினைக் கதுவ*
ஆனையின் துயரம் தீரப்புள் ளூர்ந்து
சென்றுநின் றாழிதொட் டானை*
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே 9

*மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும்மண் டபமும்*
தென்னன்தொண் டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக் கேணிநின் றானை*
கன்னிநன் மாடமங்கையர் தலைவன்
காமரு சீர்க்கலி கன்றி*
சொன்னசொன் மாலை பத்துடன் வல்லார்
சுகம்இனி தாள்வர்வா னுலகே 10

2 : 10... மஞ்சாடு

*மஞ்சாடு வரையேழும் கடல்கள் ஏழும்
வானகமும் மண்ணகமும் மற்றும் எல்லாம்*
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின் மேலோர்
இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் தன்னை*
துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய*
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூர்அதனுள்கண்டேன் நானே 1

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபங்கொண் டமரர்தொழப் பணங்கொள் பாம்பில்*
சந்தணிமென் முலைமலராள் தரணி மங்கை
தாம்இருவர் அடிவருடும் தன்மை யானை*
வந்தனைசெய்து இசையேழ் ஆறங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்*
சிந்தனைசெய் திருபொழுதும் ஒன்றும் செல்வத்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே. 2

கொழுந்தலரும் மலர்ச்சோலைக் குழாங்கொள் பொய்கைக்
கோள்முதலை வாளெயிற்றுக் கொண்டற் கெள்கி*
அழுந்தியமா களிற்றினுக்கன் றாழி யேந்தி,
அந்தரமே வரத்தோன்றி யருள்செய் தானை*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எழுந்தமலர்க் கருநீலம் இருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட*
செழுந்தடநீர்க் கமலம்தீவிகைபோல் காட்டும்
திருக்கோவ லூர்அதனுள்கண்டேன் நானே. 3

தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை*
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்பு கூரும்
அடியவர்கட் காரமுத மானான் தன்னை*
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு*
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருகோவ லூர்அதனுள் கண்டேன் நானே. 4

கறைவளர்வேல் கரன்முதலாக் கவந்தன்,வாலி
கணையொன்றி னால்மடிய, இலங்கை தன்னுள்*
பிறையெயிற்று வாளரக்கர் சேனை யெல்லாம்
பெருந்தகையோ டுடன்துணித்த பெம்மான் தன்னை
மறைவளரப் புகழ்வளர, மாடந் தோறும்
மண்டபமொண் தொளியனைத்தும் வாரம் ஓத*
சிறையணைந்த பொழிலணைந்த தென்றல் வீசும்
திருக்கோவ லூர்அதனுள்கண்டேன் நானே. 5

உறியார்ந்த நறுவெண்ணெய் ஒளியால் சென்றங்
குண்டானைக் கண்டாய்ச்சி யுரலோ டார்க்க*
தறியார்ந்த கருங்களிறே போல நின்று
தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை*
வெறியார்ந்த மலர்மகள்நா மங்கை யோடு,
வியன்கலையெண் தோளினாள் விளங்கு* செல்வச்
செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன் நானே. 6

இருங்கைமா கரிமுனிந்து, பரியைக் கீறி,
இனவிடைகள் ஏழடர்த்து, மருதம் சாய்த்து*
வரும்சகடம் இறவுதைத்து, மல்லையட்டு,
வஞ்சஞ்செய் கஞ்சனுக்கு நஞ்சா னானை*
கருங்கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று
காயெல்லாம் மரகதமாய்ப் பவளங் காட்ட*
செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
திருக்கோவ லூர் அதனுள் கண்டேன் நானே. 7

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

*பாரேறு பெரும்பாரந் தீரப் பண்டு
பாரதத்துத் தூதியங்கி* பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியாய் எதிர்ந்தார் தேனை
செருக்களத்துத் திறலழியச் செற்றான் தன்னை*
போரேறொன் றுடையானும் அளகைக் கோனும்
புரந்தரனும் நான்முகனும் பொருந்தும் ஊர்போல்*
நீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவ லூர் அதனுள் கண்டேன் நானே. 8

தூவடிவின் பார்மகள்பூ மங்கை யோடு
சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்ற*
காவடிவின் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட் கருள்புரியுங் கருத்தி னானை*
சேவடிகை திருவாய்கண் சிவந்த ஆடை
செம்பொன்செய் திருவுருவம் ஆனான் தன்னை
தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு
திருக்கோவ லூர் அதனுள் கண்டேன் நானே 9

*வாரணங்கொள் இடர்கடிந்த மாலை, நீல
மரகதத்தை, மழைமுகிலே போல்வான் தன்னை*
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவ லூர்அதனுள் கண்டேன், என்று*
வாரணங்கு முலைமடவார் மங்கை வேந்தன்
வாட்கலிய னொலியைந்து மைந்தும் வல்லார்*
காரணங்க ளாலுலகங் கலந்தங் கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே 10

5 : 8... ஏழை ஏதலன்

*ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து*
மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி எம்பி என் றெழிந்திலை* உகந்து
தோழன் நீயெனக் கிங்கொழி, என்ற
சொற்கள் வந்தடி யேன் மனத் திருந்திட*
ஆழி வண்ண! நின் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை* உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய் தகவினுக் கில்லைகைம் மாறென்று*
கோதில் வாய்மையி னாயொடு முடனே
உண்பன் நான் என்ற ஒண்பொருள் * எனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே 2

சுடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்*
முடியும் வண்ணம்ஓர் முழுவலி முதலை
பற்ற, மற்றது நின் சரண் நினைப்ப*
கொடிய வாய்விலங் கின்உயிர் மலங்கக்
கொண்ட சீற்றமொன் றுண்டுள தறிந்து* உன்
அடிய னேனும்வந் தடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 3

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணாய்*
நெஞ்சிற் கொண்டுநின் அஞ்சிறைப் பறவைக்
கடைக்க லம்கொடுத் தருள்செய்த தறிந்து*
வெஞ்சொ லாளர்கள் நமன்தமர் கடியர்
கொடிய செய்வன உள* அதற் கடியேன்
அஞ்சி வந்துநின் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே 4

மாக மாநிலம் முழுதும்வந் திறைஞ்சும்
மலர டிகண்ட மாமறை யாளன்*
தோகை மாமயி லன்னவ ரின்பம்
துற்றி லாமையில் அத்த!இங் கொழிந்து*
போகம் நீயெய்திப் பின்னும் நம் மிடைக்கே
போது வாய், என்ற பொன்னருள் * எனக்கும்
ஆக வெண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 5

மன்னு நான்மறை மாமுனி பெற்ற
மைந்த னைமதி யாதவெங் கூற்றந்
தன்னை யஞ்சி* நின்சரணெனச் சரணாய்த்
தகவில் காலனை யுகமுனிந் தொழியா*

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பின்னை யென்றும்நின் திருவடி பிரியா
வண்ண மெண்ணிய பேரருள்* எனக்கும்
அன்ன தாகுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 6

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்
உனக்கு முன்தந்த அந்தண னொருவன்*
காதல் என்மகன் புகலிடங் காணேன்;
கண்டு நீதரு வாயெனக் கென்று*
கோதில் வாய்மையினான், உனை வேண்டிய
குறைமு டித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்*
ஆத லால் வந்துன் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 7

வேத வாய்மொழி யந்தணன் ஒருவன்
எந்தை! நின்சரண்; என்னுடைய மனைவி*
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்
கடிய தெய்வங்கொண் டொளிக்கும், என்றழைப்ப*
ஏத லார்முன்னே யின்னருள் அவற்குச்
செய்துன் மக்கள்மற் றிவரென்று கொடுத்தாய்*
ஆத லால்வந்துன் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 8

*துளங்கு நீண்முடி அரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்கு*
உளங்கொ ளன்பினோடின்னருள் சுரந்தங்
கோடு நாழிகை யேழுட னிருப்ப*
வளங்கொள் மந்திரம் மற்றவற்கருளிச்
செய்த வாறடி யேன் அறிந்து* உலகம்
அளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 9

*மாட மாளிகை சூழ்திரு மங்கை
மன்னன், ஒன்னலர் தங்களை வெல்லும்*
ஆடல் மாவல வன், கலி கன்றி
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானை*
நீடு தொல்புக ழாழிவல் லானை
எந்தை யைநெடு மாலைநி னைந்த*
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட நும்மிடைப் பாவம் நில் லாவே. 10

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மங்களா சாசனப் பாடல்

*கூந்தல்மலர் மங்கைக்கும் மண்மடந் தைக்கும்
குலவாயர் கொழுந்துக்கும் கேள்வன் றன்னை*
வாய்ந்த வழுதிவள நாடன் மன்னு
குருகூர்ச் சடகோபன் குற்றேவல்செய்து*
ஆய்ந்த தமிழ்மாலை ஆயி ரத்துள்
இவையுமோர் பத்தும்வல்லார்* உலகில்
ஏந்து பெருஞ்செல்வத்த ராய்த் திருமால்
அடியார்களை பூசிக்க நோற்றார்களே!. 2589

*நல்ல கோட்பாட் டுலகங்கள்
மூன்றி னுள்ளும் தான்நிறைந்த*
அல்லிக் கமலக் கண்ணனை
அந்தண் குருகூர்ச் சடகோபன்*
சொல்லப் பட்ட ஆயிரத்துள்
இவையும் பத்தும் வல்லார்கள்*
நல்ல பதத்தால் மனைவாழ்வர்
கொண்ட பெண்டீர் மக்களே. 2963

பொருந்தியதேசும் பொறையும்திறலும்புகழும்* நல்ல
திருந்தியஞானமும் செல்வமும்சேரும்* செறுகலியால்
வருந்தியஞாலத்தைவன்மையனயினால் வந்தெடுத்தளித்த
அருந்தவன்* எங்களி ராமாநுஜனை யடைபவர்க்கே. 3924

வடகலை சாத்துமுறை

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
பலகோடி நூறாயிரம்*
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா* உன்
சேவடி செவ்வி திருக்காப்பு 1

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

ஸர்வ தேஸ தஸாகாலேஷ்வவ்யாஹத பராக்ரமா!
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம்!!
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்ஜ்வலா!
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸாஹி லோக ஹிதைஷிணீ!!

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய!
ஸ்ரீமந்! ஸ்ரீரங்கச்ரிய மநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய!

நமோ ராமாநுஜார்யாய வேதாந்தார்த்த ப்ரதாயிநே!
ஆத்ரேய பத்மநாபார்ய ஸுதாய குணசாலிநே!!

ராமாநுஜ தயா பாத்ரம் ஜ்ஞாந வைராக்ய பூஷணம்
ஸ்ரீமத் வேங்கட நாதார்யம் வந்தே வேதாந்த தேஸிகம்

வாழி யிராமானுசப் பிள்ளான் மாதகவால்
வாழு மணிநிக மாந்தகுரு- வாழியவன்
மாறன் மறையுமிரா மானுசன் பாடியமும்
தேறும் படியுரைக்குஞ் சீர்.

வஞ்சப் பரசமயம் மாற்றவந்தோன் வாழியே
மன்னுபுகழ்ப் பூதூரான் மனமுகப்போன் வாழியே
கஞ்சத் திருமங்கை யுகக்கவந்தோன் வாழியே
கலியனுரை குடிகொண்ட கருத்துடையோன் வாழியே
செஞ்சொல் தமிழ்மறைகள் தெளிந்துரைப்போன் வாழியே
திருமலைமால் திருமணியாய்ச் சிறக்கவந்தோன் வாழியே
தஞ்சப் பரகதியைத் தந்தருள்வோன் வாழியே
தண்டமிழ்த்தூப்புல் திருவேங் கடவன் வாழியே

நானிலமுந் தான்வாழ நான்மறைகள் தாம்வாழ
மாநகரின் மாறன் மறைவாழ- ஞானியர்கள்
சென்னியணி சேர்தூப்புல் வேதாந்த தேசிகனே
இன்னுமொரு நூற்றாண் டிரும்.

வாழியணி தூப்புல் வரும்நிகமாந் தாசிரியன்
வாழியவன் பாதார விந்தமலர்- வாழியவன்
கோதிலாத் தாள்மலரைக் கொண்டாடிக்
கொண்டிருக்கும். தீதிலா நல்லோர் திரள்.

நின்னருளாங் கதியன்றி மற்றொன் றில்லேன்
நெடுங்காலம் பிழைசெய்தே நிலைகழிந்தேன்
உன்னருளுக் கினிதான நிலையுகந்தேன்
உன்சரணே சரணென்னும் துணிவு பூண்டேன்
மன்னிருளாய் நின்றநிலை யெனக்குத் தீர்த்து
வானவர்தம் வாழ்ச்சிதர வரித்தே னுன்னை
இன்னருளா லினியெனக்கோர் பரமேற்றாமல்
என்திருமால் அடைக்கலங்கொ ளென்னை நீயே.

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

தென்கலை சாத்துமுறை

*பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டுபலகோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா உன் சேவடி செவ்வி திருக்காப்பு 1
அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி ஆயிரம் பல்லாண்டு
வடிவாய் நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு*
வடிவார் சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு*
படைபோர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே 2

ஸர்வதேச தசாகாலேஷ்யாஹத பராக்ரமா!

ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா வர்த்ததாமபிவர்த்ததாம் !!
ராமாநுஜார்ய திவ்யாஜ்ஞா ப்ரதிவாஸரமுஜ்வலா !
திகந்தவ்யாபிநீ பூயாத் ஸா ஹி லோகஹிதைஷிணீ!!
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய!
ஸ்ரீமந் ஸ்ரீரங்க ச்ரியமநுபத்ரவா மநுதிநம் ஸம்வர்த்தய!!

நம : ஸ்ரீசைலநாதாய குந்தீநகரஜந்மநே,
ப்ரஸாதலப்தபரமப்ராப்ய கைங்கர்யசாலிநே

ஸ்ரீசைலேசதயாபாத்ரம் தீபக்த்யாதிகுணார்ணவம்
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்

வாழி திருவாய் மொழிப்பிள்ளை மாதகவால்
வாழு மணவாள மாமுனிவன்- வாழியவன்
மாறன் திருவாய் மொழிப்பொருளை மாநிலத்தோர்
தேறும்படி யுரைக்கும் சீர்.

செய்ய தாமரைத் தாளினை வாழியே
சேலைவாழி திருநாபி வாழியே
துய்யமார்பும் புரிநூலும் வாழியே
சுந்தரத்திருத் தோளிணை வாழியே
கையுமேந்திய முக்கோலும் வாழியே
கருணைபொங்கிய கண்ணிணை வாழியே
பொய்யிலாத மணவாள மாமுனி
புந்திவாழி புகழ்வாழி வாழியே

அடியார்கள்வாழ அரங்கநகர்வாழ
சடகோபன் தண்டமிழ் நூல்வாழ - கடல்சூழ்ந்த
மன்னுலகம்வாழ மணவாள மாமுனியே
இன்னுமொரு நூற்றாண்டிரும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஸ்ரீராமகிருஷ்ண நாமாவளி

1ம் பாட்டு (ராமர் துதி)

ரகுபதி ராகவ ராஜாராம்
பதீத பாவன சீத்தாராம்
பக்தர்கள் போற்றிடும் பட்டாபிராம்
பாலகனாய் தாடகயை சம்கரித்தராம் (ரகுபதி) 1

அயகர மங்கள தசரத ராம்
சுப ஜெய மங்கள சுந்தரராம்
சூரியவம்சத்து சுடரொளி ராம்
நாம் கோரிய வரம் தரும் கோமளராம் (ரகுபதி) 2

கோதண்டம் ஏந்திய கோசலை ராம்
முக்தியை வழங்கிடில் மோகனராம்
ஆனந்த அம்ருத அட்சத ராம்
அஞ்சனை மைந்தனின் ஆதஸர்ராம் (ரகுபதி) 3

வைகுந்த நாயகி வைதேகி ராம்
வத்சல குணநல தட்சனராம்
அயோத்தி மாநகர் ஆண்டவராம்
ஆரண்ய வாசக காருண்ய ராம் (ரகுபதி) 4

தசமுக ராவண சம்ஹார ராம்
ஜானகி தேவியின் தாரக ராம்
சீத்தா ராமனாக காட்சிதந்த ராம்
சிறப்புள்ள அடியார்க்கு மோட்சம் தந்தராம் (ரகுபதி) 5

2ம் பாட்டு

ஸ்ரீராமனே பரம் பொருள் ஹரி ராமனே பரம் பொருள்
ராம நாமம் ஜெபித்தவர்க்கு ஏதுமில்லை குறையருள் (ஸ்ரீராமனே) 1

வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய் திகழ்ந்தவன்
விண் முழுதும் உய்யக் கொண்ட வீரனாக நின்றவன்
வந்தெதிர்த்த தாடகையை வதம் செய்து வென்றவன்
மந்திரங்கொள் மறை முனிவன் வேள்வி காத்து தந்தவன் (ஸ்ரீராமனே) 2

அகலிகை சாபம் தன்னை அன்புடனே தீர்த்தவன்
சிவனுடைய வில்வளைத்து சீதையை மணந்தவன்
கைகேயி வார்த்தை தனை களிப்புடனே ஏற்றவன்
கங்கையை குகனால் கடந்து கானகம் சென்றவன் (ஸ்ரீராமனே) 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கருணையோடு பரதனுக்கு பாதுகையை தந்தவன்
தலைவணக்கி நோக்கரக்கி மூக்கை நீக்கி நின்றவன்
கரதூஷன் மாரீசன் தன்னையே வதைத்தவன்
கா்வம் கொண்ட காக்கை தனை கண்ணழிவே செய்தவன் (ஸ்ரீராமனே) 4

மனமிரங்கி சபரிக்கு மோட்ச வீடு தந்தவன்
மராமர மேழதனை ஒருகணையில் சாய்த்தவன்
பாதகன் இராவணனால் சீதையை இழந்தவன்
பறவை சடாயுவுக்கு பரமபதம் தந்தவன் (ஸ்ரீராமனே) 5

பரிவு கொண்டு சுக்ரீவன் அனுமனையும் சேர்த்தவன்
பலம் பெற்ற வாலியினை ஒருகணையால் மாய்த்தவன்
பக்தியுள்ள மாருதியால் இலங்கையை யெரித்தவன்
பாசத்தோடு சீதை வர சேது அணையை கட்டினான் (ஸ்ரீராமனே) 6

கடல் கடந்து இலங்கை சென்று இராவணைஅழித்தவன்
கருணையோடு வீடணற்கு அரசு மீந்த நாயகன்
அருமையான மனைவி யோடு அயோத்திநகர் சேர்ந்தவன்
பெருமையுள்ள தம்பிகளோடு அரசனாக வாழ்ந்தவன்(ஸ்ரீராமனே) 7

வண்ணான் சொன்ன வார்த்தை கேட்டு வனத்தில் தேவியைவிட்டவன்
சொன்னவார்த்தை தவறிய தால் இலக்குவனை இழந்தவன்
தனயர் இருவர் வாயினாலே இராமசரிதை கேட்டவன்
இன்முகத்தோடு எம்பெருமான் பரமபதம் சேர்ந்தவன்(ஸ்ரீராமனே) 8

3ம் பாட்டு

இராம நாமத்தை சொல் மனமே
நமனை வெல்லலாம் அனு தினமே
காமாந்த காரத்தை நீக்கிவிடும்- நம்
கருத்திலுள்ள கோரிக்கை நிறைவேறிடும் (ஸ்ரீராமநாமத்தை) 1

பாமரகுணங்களை போக்கிவிடும் - பொல்லா
பந்த பாசமறுத்து பதம் கிடைக்கும்
விரும்புவதை யெல்லாம் கை கூட்டும்
வினையால் வரும் வேதனையை வீழ்த்திவிடும் (ஸ்ரீராமநாமத்தை) 2

வரும் பிணிகளை அடித்தோட்டும் –பாச
வலையறுத்து முக்தி வழிதனை காட்டும்
பிறவி நோய் தன்னை தீர்க்கும் - மாய
பிரபஞ்சத்தின் மயக்கத்தையறுக்கும் (ஸ்ரீராமநாமத்தை) 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

நல்லோரை நம்மிடமே சேர்க்கும்
பொல்லா பாதகரை நம்மைவிட்டு நீக்கும்
நாரணன் திருவடியில் சேர்க்கும் – அவன்நாமத்தை
சொன்னாலே தந்திடுவான் மோட்சம் (ஸ்ரீராமநாமத்தை) 4

4ம் பாட்டு

ஹரே ராம ஹரே ராம ராமராம ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே
அச்சுதம், கேசவம், ராம நாராயணம்
கிருஷ்ண தாமோதரம், வாசு தேவம், பஜே
ஸ்ரீதரம் மாதவம், கோபிகா, வல்லபம்
சத்குரு நாயகம், சாந்த, இராமம்பஜே (ஹரே)

5ம் பாட்டு

ராம நமோ ராம நமோ
ராம நமோ ஹரி ராம நமோ (ராம)
தசரதநந்தன ராம நமோ, வசு தேவ நந்தன கிருஷ்ண நமோ
தாடகி மர்த்தன ராம நமோ, பூதகி மர்த்தன கிருஷ்ண நமோ
ஜானகிவல்லப ராம நமோ, ருக்மணி வல்லப கிருஷ்ண நமோ
ராவண மர்த்தன ராம நமோ, கம்சன மர்த்தன கிருஷ்ண நமோ

6ம் பாட்டு

ராம ராம ராம ராம ராம நாம தாரகம்
ராமகிருஷ்ண வாசுதேவ பக்தி முக்தி தாயகம்
ஜானகி மனோகரா சர்வ லோக நாயகா
சங்கராதி சேவ்யமான புண்னிய நாம கீர்த்தனா (ராம)

ராம் ராம் ராம் சீத்தா ராம் ராம் ராம் சீத்தா
ராம் ராம் ராம் சீத்தா ராம் ராம் ராம் சீத்தா
ஜெய் சீத்தராமன் சேவடியை சேவிப்போமே– இந்த
ஜென்மம் செய்த கர்மவினையை மாற்றுவோமே
ராமா வென்றே சொல்லு வோம் – நாளும்
நாளும் நமனை வெல்லுவோம்
ராமா என்னும் சொல்லு நமனை வெல்லும் கல்லுகல்லு (ராம்ராம்)

இராமா என்பது என் கடமை
இரட்சித்தால் அது உன் கடமை
கோவிந்தா என்பது என் கடமை
கொண்டருள் புரிவது உன் கடமை ((ராம)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கண்ணா என்பது என் கடமை
காத்தருள்புரிவது உன் கடமை
மாதவா என்பது என் கடமை
மன்னித்தருள்வது உன் கடமை
வரதா என்பது என் கடமை
வந்தருள் புரிவது உன் கடமை
ஸ்ரீரங்கா என்பது என் கடமை
ரட்சித்தருள்வது உன் கடமை (ராம)

7ம் பாட்டு

இராம இராம இராம இராம ராம நாம நேயனே
இராம பக்தனே எங்கள் ஆஞ்சநேயனே
இரகு குலத்தை காக்கவந்த ஆஞ்சநேயனே
அடிபணிந்து வணங்கிநின்றேன் ஆஞ்ச நேயனே(ராம) 1

தென்னிலங்கை உன் வரவால் சாம்பலானதே
தேசமெலாம் உன்பெருமை தினமும் பாடுதே
கோமகனாம் ராமனுக்கு தூது சென்றதால்
கோவில் கட்டி கும்பிடுவோம் உன்னை என்றுமே (ராம) 2

குரங்கு கூட்டம் என்ன செய்யும் என்று சொன்னவன்
குலை நடுங்கி போகச் செய்த ஆஞ்சநேயனே
கும்பிடுவோம் கும்பிடுவோம் உன்னை என்றுமே
கூப்பிடுவோம் ராம நாமம் சொல்லும் போதிலே 3

ஜெய் ஜெய் அனுமான் ஜெயஹரி அனுமான்
ஆஞ்சநேய வீரா அனுமந்த ராயா
வாயு குமாரா வானர வீரா
நித்ய சிரஞ்சீவி நிர்மல யோகி
பக்தர்கள் சகாயா பரப்பிரம்மசாரி (ராம) 4

வீரமாருதி கம்பீர மாருதி
விஜய மாருதி வரம் தருக மாருதி
வருக மாருதி வரம் தருக மாருதி
உருகிபாடுவோம் எமை உயர்த்தும் மாருதி (ராம) 5

பக்த மாருதி பரிவான மாருதி சத்திய மாருதி சங்கீத மாருதி
இராம தூதனே ஸ்ரீராமபாதனே இலங்கை வேந்தனை கலங்க செய்தனை
சரணம் நாதனே சரணம் நாதனே சன்ம மரணமே போக்கும் பாதனே(ராம)6

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

8ம் பாட்டு

ஸ்ரீ கிருஷ்ணனே பரம் பொருள் ஹரிகேசவன் பரம் பொருள்
தேவகி மைந்தனான ஸ்ரீதரன் பரம் பொருள்
திருமலையில் கோயில் கொண்ட சீனிவாசன் பரம் பொருள்
ஸ்ரீரங்கம் கோயில் கொண்ட திருவரங்கன் பரம்பொருள் (கிருஷ்ணனே) 1

ஆயர் குலத்துதித்து ஆனிரையை மேய்த்தவன்
ஆச்சிமனையில் வெண்ணெயுண்டு தாயினால் கட்டுண்டவன்
குன்றெடுத்து கோவுகாத்து கோவிந்தனாய் நின்றவன்
கன்றெடுத்து விளவெறிந்து காளிங்கனை வென்றவன் (கிருஷ்ணனே) 2

மூவடிமண் வேண்டி மாவலியை வென்றவன்
பூதலத்தை ஓரடியாய் அளந்த பாத பங்கயன்
பாதகன் சோமுகனை மீனமாகி கொன்றவன்
பக்த பிரகலாதனுக்காய் இரணியனை யழித்தவன் (கிருஷ்ணனே) 3

மூலமென ஓலமிட்ட யாணைக்கருள் செய்தவன்
சால நான் முகனை உந்தி தன்னிலே படைத்தவன்
ஆலினிலை பாலகனாய் அன்று ஞால முண்டவன்
பாலகனாய் பாலை யுண்டு பூதனையை கொன்றவன் (கிருஷ்ணனே) 4

9ம் பாட்டு

அருள் புரியாயோ வரதா அருள் புரியாயோ
அஞ்சலென ஓடிவந்தென்னை ஆதரிப்பாயோ (அருள்) 1

வாய் திறந்தென் னோடு ஒரு வார்த்தை சொல்லாயோ
வஞ்சமே செய் தேனென்று மன மிரங்காயோ
அன்னையும் நீ தந்தையும் நீ குருதெய்வம் நீயே
ஆபத்து வேளை தன்னில் ஆதரிக்க லாகாதா (அருள்) 2

பாண்டவர்க்கு தூது சென்ற பரம தயாளா
பட்சம் வைத்து என் நிலையை பார்க்கலாகாதா
சங்கு சக்ர தர முகுந்தா தண்டுளமார்பா
சமய மறிந்து உதவி செய்வாய் சாமளரூபா (அருள்) 3

இரண்ய சம்ஹாரா தீரா ஏழுமலை வாசா – இந்த
ஏழை கிரங்கா திருந்தால் உலகம் ஏசாதா
விரை சொரியும் காஞ்சி புரிவாழ்ந்த வரதா
திருவேங்கடந்தனி லமர்ந்த வெங்கடேசனே முகுந்தா (அருள்) 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

10ம் பாட்டு

கண்ணா கண்ணா ஓடிவா கமலக்கண்ணா ஓடிவா
கை நிறைய வெண்ணெய் தாரேன் களிப்புடனே ஓடிவா
அண்ணன் பலராம னோடு ஆடிபாடி மகிழவா
மண்ணையுண்டு விண்ணையுண்டு காத்தளித்த அச்சுதா (கண்ணா)1

கோலினில் துயின்றவா குருத்திலேறி நின்றவா
காலிகன்று மேய்த்தவா முன் கஞ்சனை வதைத்தவா
சால நான் முகனை உந்தி தன்னிலே படைத்தவா
நீல மேக வண்ணனே நீ என்னை காக்க ஓடிவா (கண்ணா) 2

மாமனான கம்சனை வளைத்து கொன்று வென்றவா
நேயமுடன் அர்சுனர்க்கு நின்று தேரையூர்த்தவா
மாயமாக மாது பாஞ்சாலி மானம் காத்தவா
ஆயர்குலம் காக்கவந்து குன்றெடுத்து நின்றவா(கண்ணா) 3

பேதை பருவத்திலே பூதனையை கொன்றவா
மூலமென்ற யாணையை காத்து வந்த கண்ணணே
ஆதிபரஞ்சோதியாகி அகிலம் யாவும் காத்தவா
பாதகன் இரணையனை அழித்த நரசிம்மனே (கண்ணா) 4

11ம் பாட்டு

கொண்டுவா, கொண்டுவாடி– கோபால கண்ணனை
கொண்டுவா, கொண்டுவாடி
கொண்டுவாடி கோபாலனை இரண்டு கையால் தாளம் போட்டு(கொண்டு)1

ஆடுராண்டி ஆடுராண்டி பந்து விளையாடுராண்டி
பாப்பாரவீ தியிலே கோபாலகண்ணன் பந்து விளையாடு ராண்டி
பந்து விளையாடு ராண்டி பரிகாசம் பண்ணுராண்டி
பந்து விளையாடு ராண்டி பாசுரத்தை ஊட்டு ராண்டி (கொண்டுவா) 2

ஆடுராண்டி ஆடுராண்டி சென்றுவிளையாடுராண்டி
சென்று விளையாடு ராண்டி கோபால கண்ணன் சேதிகளைசொல்லுராண்டி
ஆடுராண்டி ஆடுராண்டி குண்டு விளையாடு ராண்டி
குண்டு விளையாடுராண்டி குறும்புகள் செய்யுராண்டி (கொண்டு)3

மேய்க்குராண்டி மேய்க்குராண்டி ஆடுமாடு மேய்க்குராண்டி
ஆடுமாடு மேய்க்குராண்டி கோபால கண்ணன் ஆனந்த கூத்தாடுராண்டி
மாடுகளை ஓட்டுராண்டி ஓடி ஓடி மடக்குராண்டி
தண்ணீரை காட்டு ராண்டி தாகமதை தீர்க்குராண்டி (கொண்டுவா) 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஊதுராண்டி ஊதுராண்டி புல்லாங்குழல் ஊதுராண்டி
புல்லாகுழல்ஊதுராண்டி கோபால கண்ணன் பூதகிபால் உண்ணவண்டி
புன்னை மரத்தின் மேலே கோபாலக்கண்ணன் ஆனந்த கூத்தாடுராண்டி 5

12ம் பாட்டு

பஜனை செய்வோம் ஹரி பஜனை செய்வோம்
பாண்டுரங்கன் நாமத்தை பக்தியுடனே கூடி (பஜனை) 1

ஆசை வலைதனை யறுக்கும் - நம்மை
அண்டும் பிணிகளை ஒதுக்கும்
பாச பந்தங்களை விலக்கும்
பாகவதன் என்ற பேரளிக்கும் (பஜனை) 2

கேட்ட வரந்தனை கொடுக்கும் - நமன்
கிட்ட வராமலே தடுக்கும்
ஒட்டை உடலை போக்கடிக்கும் - நமக்கு
உள்ள கருத்தையே முடிக்கும் (பஜனை) 3

தீராத வினைகளை தீர்க்கும் -நல்ல
திவ்ய பதவியை சேர்க்கும்
கோரிய வரந்தன்னை கொடுக்கும்
ஐயன் கோபாலன் திருவடி கிடைக்கும் (பஜனை) 4

13ம் பாட்டு

ஆதிசேஷா அனந்தசயனா ஸ்ரீனிவாசா ஸ்ரீவெங்கடேசா
மாமறை நான்கும் மீண்டும் பெறவே
பெருமாள் எடுத்தது மச்சாவதாரம்
மந்திர மலையை வாசுகி கொண்டு
கடையும் நேரம் கூர்மாவ தாரம் (ஆதி) 1

புவனம் எடுத்த இரணியாட்சதனை
இரண்டாய் பிளந்தது வராகமாக
இரண்யகசிபு உடலை கிழித்தான்
பிரகலாதன் வணங்கும் நரசிம்மனாக (ஆதி) 2

மாபலிதந்த மூன்றடி மண்ணில்
மூவுள களந்தான் வாமனனாக
தந்தை ஆனையால் தாயை அழித்த
பரசுராமனால் உயிர் பெற செய்தாய் (ஆதி) 3

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சூரியகுலத்து திலகத்தை போலே
அரசு புரிந்தது இராமாவதாரம்
சுந்தரவடிவில் லீலைகள் செய்து
கீதை தந்தது கிருஷ்ணாவதாரம் (ஆதி) 4

உலகினை துறந்து துறவினை ஏற்று
உண்மையறிந்தது புத்தாவதாரம்
கலியுக முடிவில் கொடுமையை வெல்ல
குதிரையில் வருவான் கல்கி எனவே (ஆதிசேஷா) 5

தசாவதாரம் திவ்யாவதாரம்
ஜெகதோ தாரம் கருணையை பாரும்
உன் நினைவோடு திருமலை ஏறும்
அடியவர் பாரம் அடியோடு தீரும் (ஆதிசேஷா) 6

14ம் பாட்டு

கண்ணா என்று சொன்னாலே நம் கவலை தீரும் தன்னாலே
கிருஷ்ணா என்று சொன்னாலே கிருஷ்ணன் கிருபை கிடைக்கும் தன்னாலே (கண்ணா) 1

ஸ்ரீராமா என்று சொன்னாலே – நம்
நாவு மினிக்கும் தன்னாலே
நாராயணா என்று சொன்னாலே இந்த
நாடும் தழைக்கும் தன்னாலே (கண்ணா) 2

கோவிந்தா என்று சொன்னாலே –நம்
நாவு மினிக்கும் தன்னாலே
நாராயணா என்று சொன்னாலே இந்த
நாடும் தழைக்கும் தன்னாலே (கண்ணா) 3

மாதவா என்று சொன்னாலே மன நிம்மதி கிடைக்கும் தன்னாலே
கேசவா என்று சொன்னாலே ஹரி தேடி வருவான் தன்னாலே
ஸ்ரீரங்கா என்று சொன்னாலே செல்வம் தழைக்கும் தன்னாலே
ஸ்ரீராம நாமம் சொன்னாலே மோட்சம் கிடைக்கும் தன்னாலே (கண்ணா) 4

15ம் பாட்டு

பரமபதம் அது வைகுந்தம் பாகவதாளுக்கே சொந்தம்
பத்து கோடி பணமிருந்தாலும் பரபதம் அது கிட்டாது
பரந்தாமனின் பஜனைகள் செய்தால் பரமபதம்அது தேடி வரும் (பரமபதம்)1

பட்டம் பதவி பல இருந்தாலும் பரம பதம் அது கிட்டாது
பக்தியுடனே பஜனைகள் செய்தால்பரம பதம் அது கிட்டிவிடும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

எத்தனை கோடி பணம் இருந்தாலும் பரம பதம் அது கிட்டாது
எம்பெருமானின் பஜனைகள் செய்தால்பரம பதம் அது தேடிவரும்
யானைகள் போல பலம் இருந்தாலும் பரம பதம் அது கிட்டாது
கஜகிரி வரதன் கழலடி பணிந்தால் பரம பதம் அது தேடிவரும்.

16ம் பாட்டு

கண்ணா நான் பாடுகிறேன் - உன்னை
கனிவோடு வணங்குகிறேன்
மலர்பாதம் தனைகான நான் மலர்மாலை சூடுகிறேன்
ஒருத்தியின் மகனாக ஒளித்துமே நீவளர்ந்தாய்
யசோதையின் மகனாக நீ யது குலம் காக்க வந்தாய் (கண்ணா) 1

பூதகியின் பால் குடித்தாய் புல்லாங்குழல் கை பிடித்தாய்
காளிங்கன் மேல் நடனம் செய்தாய் கம்சனை சம்ஹாரம் செய்தாய்
பாற்கடலில் பள்ளி கொண்ட பரந்தாமன் நீ அல்லவா
பத்தாவதாரம் செய்தாய் பரம் பொருளாக நின்றாய் 2

17ம் பாட்டு

ஓம் நமோ நாராயணா, ஓம் நமோ நாராயணா
உலகமெங்கும் முழங்கவேண்டும் ஓம் நமோ நாராயணா
மனதில் என்றும் இருக்க வேண்டும் ஓம் நமோ நாராயணா
பிறவி தோறு வினை மிகுத்து பெருகுகின்ற இருளினை
அகலவைக்கும் அருண தீபம் ஓம் நமோ நாராயணா 1

ஜனன மரண பயந்த ரங்கம் சாகரம் கடத்தியே
உடனே வந்து காக்கும் ஓடம் ஓம் நமோ நாராயணா
மச்ச, கூர்ம அவதாரா ஓம் நமோ நாராயணா
வராக நரசிம்மா ஓம் நமோ நாராயணா 2

வாமனா, பரசுராமா ஓம் நமோ நாராயணா
ஸ்ரீராமா, பலராமா ஓம் நாராயணா
கண்ணணாகி கல்கியாவாய் ஓம் நமோ நாராயணா
கருணை உள்ளம் கொண்டவனே ஓம் நமோ நாராயணா 3

18ம் பாட்டு

நாராயணம் என்னும் பாராயணம்
நலம் யாவும் தருகின்ற தேவாமிர்தம்
கோவிந்த நாம சங்கீர்த்தனம்
குடி கொண்ட நெஞ்சம் தான் பெரும் ஆலயம் (நாராயணம்) 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

படியேறி வருவோர்க்கு பயமில்லையே
பாவங்கள் தீர ஒரு வழியில்லையே
துணையாவது அவன் சங்கு சக்ராயுதம்
தொழுவோர்க்கு அருள்கின்ற திருவேங்கடம் (நாராயணம்) 2

திருமலை கோயில் கொண்ட ஸ்ரீனிவாசா
தீராத வினையனைத்தும் தீர்க்கும் நேசா
தெய்வத்துள் தெய்வமாய் விளங்கும் ஐயா
திருவரங்கம் கோயில் கொண்ட ரங்கநாதய்யா (நாராயணம்) 3

19ம் பாட்டு

ஸ்ரீரங்க ராஜா ஹரி ரங்க ராஜா
தென்னரங்க ராஜா திருவரங்க ராஜா 1

பூதலத்தை ஓரடியாய் அளந்தரங்க ராஜா
மாபலியின் ஆணவத்தை அடக்க வந்த ராஜா
தூது சென்று பாண்டவர்க்கு அரசளித்த ராஜா
பாதகன் இரணியனை அழிக்க வந்த ராஜா (ஸ்ரீரங்க) 2

உந்தியிலே நான்முகனை உற்பவித்த ராஜா
பந்தமற்ற ஞானவானை காத்தளித்த ராஜா
சிந்தையினால் சிந்திப்போர்க்கு காட்சி தந்த ராஜா
சிறப்புள்ள அடியவர்க்கு மோட்சம் தந்த ராஜா 3

தேவர்களை காப்பாற்ற ஆமையான ராஜா
திருப்பாற்கடல் கடைந்து அமிர்தம் தந்த ராஜா
பெண்ணாகி இன்னமுதம் வஞ்சித்த ராஜா
பெருமையுடன் ஸ்ரீரங்கம் கோயில் கொண்ட ராஜா 4

20ம் பாட்டு

நாராயணம் பஜநாராயணம் திரு நாராயணம் ஹரி நாராயணம்
தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்
தூமணி வண்ணன், ஹரி நாராயணன்
ஆணிலும் இருப்பான் பெண்ணிலும் இருப்பான்
ஆனந்த சோதி ஹரி நாராயணன் (நாராயணம்) 1

விண்ணிலும் இருப்பான் மண்ணிலும் இருப்பான்
வேங்கடவன் ஹரி நாராயணன்
என்னிலும் இருப்பான் உன்னிலும் இருப்பான்
எம்பெருமான் ஹரி நாராயணன் (நாராணயம்) 2

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

உள்ளிலும் இருப்பான் வெளியிலும் இருப்பான்
உளகளந்தான் ஹரி நாராயணன்
இரவிலும் இருப்பான் பகலிலும் இருப்பான்
ஏழுமலையான் ஹரி நாராயணன் (நாராயணம்) 3

21ம் பாட்டு

இராமாநுஜா, இராமாநுஜா என்றே சொல்லி பாடனும்
நாவிலே வராது போனால், நல்லவரோடே சேரனும் (ராமாநுஜா)

ஆண்டாள் திருப்பாவை ஆர்த்தியுடனே பாடனும்
அடியார் குழாங்களுடன் கோஷ்டியாக கூடனும்
கெஞ்சி கெஞ்சி கேட்கனும் தஞ்சம் என்று பணியனும்
அஞ்சன வண்ணன் பாதத்திலே அடிமையாக புகுரனும் (ராமாநுஜா)

ஆழ்வார்கள் அவதரித்த நாட்களை கொண்டாடனும்
அவர் அருளிச் செய்த பிரபந்தத்தை அனுஷ்டானத்துடன் படிக்கனும்

பொய்கையார் பூதத்தார் பேயார் பதின்மர் புகழைப் பாடனும்
பாகவதர் தங்களுக்குப் பணிவிடைகள் செய்யனும்
பல்லாண்டு திருப்பாவையைப் பாடிப் பாடி பார்க்கனும்
பாசுரம் வராது போனால் பாகவதருடனே கூடனும்
ஆழ்வார் பாசுரங்களை அனுஷ்டிக்காமல் போனாலும் (ராமாநுஜா)

கோயில் திருமலையில் குடியாக இருக்கனும்
கோவிந்தன் நாமங்களை கோஷ்டியாக பாடனும்
தினந்தோறும் ராமநாமம் ஆர்வமுடன் சொல்லனும்
திருவரங்கம் திருப்பதியில் இருப்பில்லாமல் போனாலும் (ராமாநுஜா)

அடியார் குழாங்களுடன் யாத்திரையாய் செல்லனும்
ஹரிநாம கீர்த்தனைகள் ஆடிப்பாடிப் படிக்கனும்
பாண்டுரெங்கன் பஜனை நாமம் பாடியாடாமல் போனாலும் (ராமாநுஜா)

கொண்ட பெண்டிர் மக்கள் சுற்றம்என்பதை விடவேனும்
கோவிந்த நாமங்களை பாடி ஆடவேணும்
ஹரிநாம கீர்த்தனைகள் ஆடிப்பாடாமல் போனாலும் (ராமாநுஜா)

ஊரிலேன் காணியில்லை உறவில்லை என்பதை உணரனும்
உற்றார் பெற்றார் சதமில்லை என்று உறுதியாகவே கொள்ளனும்
தந்தை நற்றாய் தாரம் தனயர் பெருஞ் செல்வம்
எந்தனுக்கு நீயே எதிராசா என்றே வாழனும்

ஹரியல்லால் தெய்வமில்லை என்பதனை அறியனும்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆழ்வா ரருளிய பாசுரத்தால் ஆராய்ந்தேநாம் தெளியணும்
ராமானுஜர் நாமங்களை பாராயணம் செய்யணும்
ரட்சிக்கும் தெய்வமென்று பட்சம் வைத்து வாழணும்

இப்பிறவி தீர்ப்பதற்கு எதிராசன் நாமமே
ஏற்றி பணிந்தவர்க்கு மாற்றிடும் இச் சென்மமே (ராமாநுஜா)

22ம் பாட்டு

இதோ எந்தன் கண்ணன் சிரிக்கிறான் சிரிக்கிறான்
இடுப்பில் கையை வைத்துக்கொண்டு சிரிக்கிறான் சிரிக்கிறான்
கலகல வென கலகலவென சிரிக்கிறான் சிரிக்கிறான்
காலில் சலங்கை தாளம் போட சிரிக்கிறான் சிரிக்கிறான்(இதோ) 1

கையை தட்டி கையை தட்டி சிரிக்கிறான் சிரிக்கிறான்
கமலமலர்கள் விரிய விரிய சிரிக்கிறான் சிரிக்கிறான்
மயில்பீலி அசைய அசைய சிரிக்கிறான் சிரிக்கிறான்
மன்மதன் போல் குறும்பு கண்ணன் சிரிக்கிறான் சிரிக்கிறான் (இதோ) 2

புல்லாங்குழலை யாட்டி யாட்டி சிரிக்கிறான் சிரிக்கிறான்
பூவாய் மலர்ந்து புன்னகை காட்டி சிரிக்கிறான் சிரிக்கிறான்
என்னைவிட்டு எப்படி போவாய் என்று சொல்லி சிரிக்கிறான்
எனக்கு நீயே உனக்கு நானே என்று சொல்லி சிரிக்கிறான் (இதோ)
அப்பனை போல நடை நடந்து அழகு காட்டி சிரிக்கிறான்
ஐயோ பாவம் என்னும் படி அழுது விட்டு சிரிக்கிறான் (இதோ) 3

23ம் பாட்டு

வேங்கடாஜல நிலையம் வைகுண்ட புரவாசம்
பங்கஜ நேத்ரம் பரமபவித்ரம் சங்கு சக்கர சுந்தரரூபம் (வெங்கடா)
அம்புஜோத்பவ வினுதம் அகணித குண நாமம்
தும்புரு நாரத காண விலோலம்
மகர குண்டலதரம் மதன கோபாலம்
பக்த போஷகஸ்ரீ புரந்தர விட்டலம் (வெங்கடா)

24ம் பாட்டு

கண்ணா கண்ணா ஓடிவா
கமலக்கண்ணா ஓடிவா
என்னும் போதே இனிக்கிறாய்
எடுத்துரைத்தால் மணக்கிறாய்
கண்ணா கண்ணா என்றிடில்
கற்கண்டாவாய் நாவிலே (கண்ணா) 1

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சொல்ல சொல்ல இனித்திடும்
சுந்தரவடிவம் முன்வரும்
அள்ளி கொள்ள துடித்திடும்
ஆராவமுதம் அல்லவோ *(கண்ணா)* 2

வெண்ணெய்யுண்ட மாதவா
வேய்ங் குழல் கொண்ட யாதவா
நப்பின்னை பின்னால் சென்றவா
என்னை காக்க ஓடிவா *(கண்ணா)* 3

என்னை உனக்கு தெரியுமே- என்
ஏக்க மெல்லாம் புரியுமே
மண்ணை கூட சுவைத்திடும்
மண்ணன் நீயே அல்லவோ *(கண்ணா)* 4

ராதா உனக்கு சொந்தமா
இனியவள் இதயம் மஞ்சமா
எனக்கும் இடம் கொடு கொஞ்சமா
இடத்திற்கு உன்னிடம் பஞ்சமா *(கண்ணா)* 5

25ம் பாட்டு

கேசவா என்முன்னே பேசவா-ஆதி
கேசவா என்முன்னே பேசவா
ஆடி ஆடி வா நீ ஓடி ஓடி வா *(கேசவா)* 1

விண்ணளந்தவா மண்ணளந்தவா
வெண்ணையுன்டவா, நீ என்னையாளவா
பச்சை மேனியா பவளவாயனே
அச்சுதா வாவா, ஓஅழகனே வா வா *(கேசவா)* 2

நின்றருள்கிறாய் திருவேங்கடத்திலே
இருந்தருள்கிறாய் திருபாடகத்திலே
கிடந்தருள்கிறாய் காவிரிக்கரை-என்றும்
இருந்தருள்கவே எந்தன் நெஞ்சிலே *(கேசவா)* 3

26ம் பாட்டு

மேகங்கள் சூழ்ந்தமலை ஏழுமலை
மோகங்கள் தீர்க்கும் மலைஏழுமலை
சோகங்களே நிறைந்த வாழ்கையிலே
சொர்க்கத்தை போன்றது ஏழுமலை *(மேகங்கள்)* 1

மாமலை போன்ற உடல்பச்சை மலை-அங்கே
மயக்கும் உதடுகளோ பவளமலை

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏழுமலை மேலே ஏழுமலை அங்கே
எம்பெருமான் தனியே வாழுமலை (மேகங்கள்) 2

பக்தர்கள் பல்லோர் நாடும் மலை
பக்தர்களின் பிணி தீர்க்கும் மலை
சித்தர்கள் பலபேர் வாழுமலை-இது
சத்தியம் நம் கவலை தீர்க்கும் மலை (மேகங்கள்) 3

27ம் பாட்டு

படுத்துக் கொண்டே படுத்து கின்றாயே- அரங்கா
பாம்பனையை உடுத்துக்கொண்டாயே
அடித்துக்கொண்டே அனைத்துக் கொள்கிறாய்
உன்னை பிடித்துக்கொண்டேன் பிரித்து விடாதே (படுத்து)1

நடிக்கவைத்தே படிக்க வைத்தாயே -உந்தன்
நாடகத்தில் நடிக்க வைத்தாயே
பகலும் இரவும் படைத்தவன் நீயே- அந்த
பாவ புண்ணியம் ஆனவன் நீயே (படுத்து) 2

இகமும் பரமும் இனித்திடவேண்டும்-இறைவா
இணையடியில் இணைந்திட வேண்டும்
இறக்கும் வரை நினைத்திட வேண்டும்-இனியும்
பிறப்பில்லாத பேரின்பம் வேண்டும் (படுத்து) 3

28ம் பாட்டு

ஆயர்பாடி மாளிகையில் தாய் மடியில்கன்றினைபோல்
மாயக்கண்ணன் தூங்குகிறான் தாலேலோ- அவன்
வாய் நிறைய மண்ணையுண்டு மண்டலத்தை காட்டியபின்
ஓய்வெடுத்து தூங்குகிறான் ஆராரோ (ஆயர்பாடி) 1

பின்னலிட்ட கோபியரின் கண்ணத்திலே கண்ணமிட்டு
மன்னவன் போல் லீலை செய்தான் தாலேலோ
மந்திரத்தில் அவன் உறங்க மயக்கத்திலே அவன் உறங்க
மண்டலமே உறங்குதம்மா ஆராரோ (ஆயர்பாடி) 2

நாகபடம் மீதினிலே நர்த்தனங்கள் ஆடிய பின்
தாகமெல்லாம் தீர்த்து கொண்டான் தாலேலோ -அவன்
மோக நிலை கூட ஒரு யோக நிலை போலிருக்கும்
யார் அவனை தூங்க விட்டார் ஆராரோ (ஆயர்பாடி)3

கண்ணன்அவன் தூங்கிவிட்டால்காசினியே தூங்கிவிடும்
அன்னையரே துயிலெழுப்ப வாரிரோ-அவன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பொன்னழகை பார்ப்பதற்கும் போதை முத்தம் பெறுவதற்கும்
கன்னியரே கோபியரே வாரீரோ 4

29ம் பாட்டு

கண்ணனை நாம் பணிந்தால் சுகம் எல்லாமே ஓடிவரும்
அந்த வல்லவனை நினைத்திருந்தால்
நல்ல வாழ்க்கை தேடிவரும்
எம்பெருமான் ஆணைகளை இதயத்தில் ஏற்றிடுவோம்
பரந்தாமன் பெருமைகளை பார் முழுதும் பரப்பிடுவோம் (கண்ணனை) 1

பாண்டுரங்கன் ஆலயத்தில் பஜனைகள் செய்திடுவோம்
கண்ணன் திரு நாமங்களை கற்பனையில் வளர்த்திடுவோம்
பாற்கடல் வாச னவன் பண்ணக சயனைவன்
வேதாந்த வித்தகனாம் நல்ல விளையாட்டு பாலகனாம் (கண்ணன்) 2

30ம் பாட்டு

கண்ணா கமலக்கண்ணா– உன்னை
காணாத கண் எதற்கோ– உன்
திருவடியை தினமும் தஞ்சம் என்றே நானும்
நினைக்காத நெஞ்செதற்கோ – கண்ணா 1

அழைத்தவுடன் அபயம் தர வருவாய் கண்ணா
அபலைக்கும் துயில் தந்து காத்தாய் கண்ணா
ஆபத்தில் ஆணையை நீ மீட்டாய் கண்ணா
அடியவரை முகம்பார்க்க மறந்தாய் கண்ணா (கண்ணா)2

ஓடி வந்து உள்ளத்தில் அமர்ந்தாய் கண்ணா
பாண்டவர்க்கு தூதனாக வந்தாய் கண்ணா
பாவி உன்னை சேவிக்க வெறுத்தாய் கண்ணா
உன்பத மலரை வணங்கிட அருள்வாய் கண்ணா 3

31ம் பாட்டு

என் அப்பன் எப்போ வருவாரோ
அருள் ஆனந்தத்தை தருவாரோ
சக்குபாயை காத்த ருக்குமணி நாதன் எப்போவருவாரோ
மீராபாயை காத்த ராதா ரமணன் எப்போ வருவாரோ
கோரா கும்பர்க்கு காட்சி தந்த கோவிந்தன் எப்போ வருவாரோ 1

ராமதாசரை காத்த ஹரி ராமன் எப்போ வருவாரோ
கபீர் தாசரை காத்த கணி கண்ணன் எப்போ வருவாரோ
துளசி தாசரை காத்த தூமணி வண்ணன் எப்போ வருவாரோ

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

பிரகலாதாழ்வானை காத்த பெருமான் எப்போ வருவாரோ 2

வரதா, வரதா வரவேணும் வந்து தரிசனம் தரவேணும்
காஞ்சிவரதா கரிவரதா-உன் கடாட்சம் தன்னை தாவரதா

32ம் பாட்டு

குறைதீர்க்க வேண்டுமே கோவிந்தா
குறை ஒன்றும் இல்லாத கோவிந்தா
அறி வொன்றும் இல்லாத எங்களை
அணைத்து கொள்ள வேண்டுமையா கோவிந்தா (குறை) 1

உனையன்றி உறவில்லை கோவிந்தா
உன்பதமே கதி எனக்கு கோவிந்தா
துணையானாய் என்றும் நீ கோவிந்தா
தூயவனே மாயவனே கோவிந்தா (குறை) 2

தனியேநான் தவிக்கின்றேன் கோவிந்தா
தணலதிலே புழுவானேன் கோவிந்தா
தவழ்கின்ற மழைமேகம் கோவிந்தா
தன்னருளே தந்தருள்வாய் கோவிந்தா (குறை) 3

அழைக்கின்றேன் அனுதினமும் கோவிந்தா
ஆணைக்கன்று ஓடிச்சென்றாய் கோவிந்தா
எமை காக்க எழுந்தருள்கவாய் கோவிந்தா
எமக்கென்றும் கதிநீயே கோவிந்தா (குறை) 4

33ம் பாட்டு

எண்ணும் போதே இனிக்கிறாய்
எடுத்துரைத்தால் மணக்கிறாய்
கண்ணா கண்ணா என்றிடில்
கற்கண்டா வாய் நாவிலே (எண்ணும்) 1

சொல்ல சொல்ல இனித்திடும்
சுந்தரவடிவம் முன்வரும்
அள்ளி கொள்ள துடித்திடும்
ஆராவமுதம் அல்லவோ (எண்ணும்) 2

வெண்ணெய் உண்ட மாதவா
வேய்ங்குழல் கொண்ட யாதவா
நப்பின்னை பின்னால் சென்றவா
என்னை காக்க ஓடிவா (எண்ணும்) 3

என்னை உனக்கு தெரியுமே- என்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஏக்கமெல்லாம் புரியுமே
மண்ணை கூட சுவைத்திடும்
மன்னன் நீயே அல்லவோ (எண்ணும்) 4

ராதா உனக்கு சொந்தமா
இனியவள் இதயம் மஞ்சமா
எனக்கும் இடம் கொடு கொஞ்சமா
இடத்திற்கு உன்னிடம் பஞ்சமா (எண்ணும்) 5

34ம் பாட்டு

ஆட்டுவித்தால் நான் ஆடுகிறேன்
பாட்டுவித்தால் நான் பாடுகிறேன்
கூட்டு வித்தால் நான் கூடுகிறேன்
குறை வில்லையே கண்ணன் ஆட்சியிலே (ஆட்டுவித்தால்) 1

கேட்கவில்லை என்னை படைத்து விட்டாய்
கேட்டிருந்தால் நான் மறுத்திருப்பேன்
கேட்டதெல்லாம் கொடுப்பவனே-என்
கேட்டை யெல்லாம் நீ போக்கிடுவாய்(ஆட்டுவித்தால்) 2

கண்கொடுத்தாய் உன்னை கான்பதற்கு
இருகால் கொடுத்தாய் உன்னை வலம் வரவே
மொழி கொடுத்தாய் உன்னை வாழ்த்திடவே
முழுவதுமே என்னை ஆட்கொள்ளுவாய் (ஆட்டுவித்தால்) 3

35ம் பாட்டு

குழந்தையாக கண்ணன் மீண்டும் பிறக்கமாட்டானா
புல்லாங்குழலை எடுத்து மீண்டும் இசைக்க மாட்டானா (குழந்தையாக) 1

காட்டினிலே மாடுகன்று மேய்க்க மாட்டானா
என்னை அவன் தோழனாக ஏற்க மாட்டானா
நந்த கோபன் பிள்ளையாக பிறக்க மாட்டானா
அவன் நவநீத கண்ணனாக இருக்க மாட்டனா (குழந்தையாக) 2

பாண்டவர்க்கு தூதனாக செல்ல மாட்டானா
பார்த்தனுக்கு சாரதியாய் இருக்க மாட்டானா
சின்ன சின்ன வாயதனை திறக்க மாட்டானா – அந்த
கீதையைத்தான் மறுபடியும் இசைக்கமாட்டானா (குழந்தையாக) 3

அன்புடனே எங்களிடம் பேச மாட்டானா
அரவனைத்து எங்களையும் ஆள மாட்டானா
ராதைக்கேற்ற கண்ணனாக இருக்க மாட்டானா
காட்சி தந்து எங்களையும் காக்கமாட்டானா (குழந்தையாக) 4

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

36ம் பாட்டு

கண்ணங் கருத்தக்கண்ணன்
கட்டழகு மேனி கண்ணன்
அன்ன நடைபோட்டானடி - அவன்
அன்னநடை போட்டானடி (கண்ணன்) 1

பாம்பில் படுத்த கண்ணன்
பசாங்கு செய்யும் கண்ணன்
பால் தயிர் குடிக்கும் கண்ணன்- அவன்
குறும்புக்கார பால கண்டி (கண்ணன்) 2

புல்லாங் குழல் ஊதுங்கண்ணன்
பூமியிலே நின்ற கண்ணன்
புடவை திருடி போனானடி அவன்
புன்னை மரம் ஏறினானடி (கண்ணன்) 3

கனிவுடனே கண்ணா என்றால்
ஓடிவந்து காத்திடுவான்
வஞ்ச மில்லா நெஞ்சம் கொண்ட
வசுதேவர் பிள்ளையடி (கண்ணன்) 4

37ம் பாட்டு

ஏழுமலை ஏறி வந்தோம் கோவிந்தா
எங்கள் குறை தீர்த்திடுவாய் கோவிந்தா (ஏழுமலை) 1

பக்தர்களின் காவலனே கோவிந்தா எங்கள்
பாபங்களை போக்கிடுவாய் கோவிந்தா
திருமலையில் அமர்ந்தவனே கோவிந்தா
தீராத வினையதனை தீர்த்திடுவாய் கோவிந்தா (ஏழுமலை) 2

அண்டி வந்த எங்களையே கோவிந்தா
அன்புடனே ஆதரிப்பாய் கோவிந்தா
முத்தி பெற வழி எனக்கு கோவிந்தா
முன்னின்று காத்திடுவாய் கோவிந்தா (ஏழுமலை) 3

ஏழைகளின் இரட்சகனே கோவிந்தா
எங்கள் குறை தீர்த்திடுவாய் கோவிந்தா
பட்ட துன்பம் போது மிங்கே கோவிந்தா
பரமபதம் கண்டவுடன் தந்தருள்வாய் கோவிந்தா (ஏழுமலை) 4

38ம் பாட்டு

அம்மா! அந்தப் பஞ்சாயுதம் ராமானுஜர்தான்!–நம்ம

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ஆதிசேஷன் அவதாரம் ராமாநுஜர்தான்!
எம்மான் அல்லிக்கேணிப் பெருமாள் ராமாநுஜர்தான்–நம்ம
எல்லோருக்கும் கதி,யதி ராமாநுஜர்தான்! –(அம்மா)

உடையவர் என்னும்மஹான் ராமாநுஜர்தான்!–நம்மை
உய்விக்கும் ஆச்சார்யனும் ராமாநுஜர்தான்!
சடகோபன் பொன்னடியும் ராமாநுஜர்தான்!–நம்மை
சாமி கிட்டச் சேர்ப்பவரும் ராமாநுஜர்தான்! –(அம்மா)

மறைவாழ வந்தவரும் ராமாநுஜர்தான்!–அந்த
மாயன் மன சறிஞ்சவர் ராமாநுஜர்தான்!
குறையெல்லாம் தீர்ப்பவரும் ராமாநுஜர்தான்!–நம்ம
குற்றங்களைப் பொறுப்பவரும் ராமாநுஜர்தான்!–(அம்மா)

இளையாழ்வார் என்னும் சுடர் ராமாநுஜர்தான்!
இலட்சுமண முனியவர் ராமாநுஜர்தான்
விளைநிலம் ஆயிட்டவர் ராமாநுஜர்தான்–வேத
வித்துக்களைத் தந்தவரும் ராமாநுஜர்தான். –(அம்மா)

எதிராஜர் என்றே வந்தவர் ராமாநுஜர்தான்!
எம்பெருமானாரும் நம்ம ராமாநுஜர்தான்!
சாதிகளை ஒழிச்சுவரும் ராமாநுஜர்தான்!–விஷ்ணு
சாம்ராஜ்ய அதிபதியும் ராமாநுஜர்தான்! –(அம்மா)

திருப்பாவை ஜீயர்நம்ம ராமானுஜர்தான்!–நெஞ்சில்
தித்திக்கின்ற அமுதமே ராமானுஜர்தான்!
அருட்பார்வை கொண்டவரும் ராமானுஜர்தான்!–நம்ம
ஆளவந்தார் ஆம்முதல்வன் ராமானுஜர்தான்! –(அம்மா)

ஸ்ரீபூத புரீசர் நம்ம ராமானுஜர்தான்!– நல்ல
சீர்திருத்த வாதிநம்ம ராமானுஜர்தான்!
ஸ்ரீபாஷ்யக் காரர்நம்ம ராமானுஜர்தான்!–நம்ம
சிந்தையிலே நிற்பவரும் ராமானுஜர்தான்! –(அம்மா)

தேசிகேந் திரன்நம்ம ராமானுஜர்தான்!–நம்மைத்
தேடித்தேடி அருள்பவர் ராமானுஜர்தான்!
மாசில்லா மாணிக்கமே ராமானுஜர்தான்!– நம்ம
மனசெல்லாம் நெறஞ்சவர் ராமானுஜர்தான்! –(அம்மா)

கோயிலண்ணன் ஆனவரும் ராமானுஜர்தான்!–நெஞ்சைக்
கொள்ளைகொண்ட புண்ணியரும் ராமானுஜர்தான்!
தாயினுள்ளம் கொண்டவரும் ராமானுஜர்தான்!–தம்மைத்
தஞ்சமெனத் தந்தவரும் ராமானுஜர்தான்! –(அம்மா)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

39ம் பாட்டு

தேவகி மகனாய் பிறந்தவனாம்
யசோதை மகனாய் வளர்ந்தவனாம்
மக்கள் மனதில் நிறைந்தவனாம்
மாயன் கண்ணன் அவன் பெயராம் (தேவகி)

ஆயர்பாடியில் வளர்ந்தவனாம்
ஆநிரை மேய்த்து மகிழ்ந்தவனாம்
கோபியர் மனதை கவர்ந்தவனாம்
குறும்புகள் பலவும் செய்தவனாம் (தேவகி)

வெண்ணை தின்பதில் வல்லவனாம்-அதை
விரும்பி திருடி உண்பவனாம்
பொய்கள் உரைப்பதில் சீமானாம்
போக்கிரி தனங்கள் செய்வானாம் (தேவகி)

உறியில் வைக்கும் வெண்ணைதனை
ஊர் பிள்ளைகளுடன் திருடிடுவான்
அண்டப் புளுகு உரைத்திடுவான்
அகிலத்தை வாய்க்குள் காட்டிடுவான் (தேவகி)

40ம் பாட்டு

சலங்கை கட்டி ஓடி ஓடி வா வா
எங்கள் தாமரைக் கண்ணா ஆடி ஆடி வா வா
உந்தன் பிஞ்சுபாதம் தேடிநாடி நாங்கள்
உந்தன் திவ்ய நாமம் பாடி ஆடி வந்தோம் (சலங்கை)

தேவகி நந்தன ராதா ஜீவன கேசவா ஹரே மாதவா
பூதன மர்த்தன பாப வினாசன கேசவா ஹரே மாதவா
கோகுல பாலனே ஓடி வா வா
கோபால பாலனே ஆடி வா வா (சலங்கை)

கம்ச விமர்த்தன காளிய நர்த்தன கேசவா ஹரே மாதவா
ஆச்ரித வத்சல ஆபத்பாந்தவ கேசவா ஹரே மாதவா
ஓங்கார நாதனே ஓடி வா வா
ஆனந்த கீதனே ஆடி வா வா (சலங்கை)
பாண்டவ ரக்ஷக பாப வினாசக கேசவா ஹரே மாதவா
ஆர்ஜுன ரக்ஷக அஞ்ஞான நாசக கேசவா ஹரே மாதவா
கீதாம்ருதனே ஓடி வாவா ஹ்ருதயானந்தனே ஆடி வா வா (சலங்கை)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

41ம் பாட்டு

ராதே ராதே ராதே ராதே ராதே கோவிந்தா
பிருந்தாவன சந்த்ரா
அநாத நாதா தீனபந்தோ ராதே கோவிந்தா (ராதே)

நந்தகுமாரா நவநீத சோரா ராதே கோவிந்தா
தசரத நந்தன தசமுக மர்தன ராதே கோவிந்தா
பக்தவத்சலா பாகவதப்ரியா ராதே கோவிந்தா
பட்சிவாகனா பாண்டவ ப்ரிய ராதே கோவிந்தா (ராதே)

வேணுவிலோலா விஜய கோபாலா ராதே கோவிந்தா
லக்ஷ்மிவல்லப சேஷாத்ரி நிலயா ராதே கோவிந்தா
புராண புருஷா புண்டரீகாக்ஷா ராதே கோவிந்தா
பசு பாலகஸ்ரீ பாபவிமோசன ராதே கோவிந்தா (ராதே)

பாப விநாசா பாஹிமுராரே ராதே கோவிந்தா
பத்மாவதி ப்ரிய ப்ரசன்னமூர்த்தி ராதே கோவிந்தா
ரகு குல நந்தன ராமாநுஜஹரி ராதே கோவிந்தா
நித்ய நிர்மலா நீலமேக ஷ்யாமா ராதே கோவிந்தா (ராதே)

42ம் பாட்டு

செங்கல் மேலே நின்றிருக்கும் பாண்டுரங்கா
எங்கள் குறைகளை தீர்த்து வைப்பாய் பாண்டுரங்கா
அன்னை போலே அருளைப் பொழியும் பாண்டுரங்கா
உன்திங்கள் முகத்தைக் காணவந்தோம் பாண்டுரங்கா
ஜெய் ஜெய் விட்டலா பாண்டுரங்கா ஜெய ஹரி விட்டலா பாண்டுரங்கா

பட்டம் பதவி வேண்டவில்லை பாண்டுரங்கா
எங்கள் கஷ்டம் யாவும் தீரவேண்டும் பாண்டுரங்கா
இஷ்டம் போலே ஆடிப்பாடி பாண்டுரங்கா
உன்னை விட்டல் விட்டல் என்றழைப்போம் பாண்டுரங்கா
விட்டல விட்டல பாண்டுரங்கா விட்டல விட்டல பாண்டுரங்கா

ஆடிமாதம் கார்த்திகை மாதம் பாண்டுரங்கா
ஓடிவருவோம் பண்டரிபுரமே பாண்டுரங்கா
கூடி நின்று பக்தர்கள் எல்லாம் பாண்டுரங்கா
உனைப் பாடி வருவோம் விட்டலா என்றே பாண்டுரங்கா
விட்டல விட்டல பாண்டுரங்கா விட்டல விட்டல பாண்டுரங்கா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

சந்தனம் பூசிய மார்புதன்னில் பாண்டுரங்கா
துளசி மாலை அணிந்துவந்தோம் பாண்டுரங்கா
சிந்தை குளிர ஆடிப்பாடி பாண்டுரங்கா
உன்தன் திருவடி சரணமடைந்தோம் பாண்டுரங்கா
விட்டல விட்டல பாண்டுரங்கா விட்டல விட்டல பாண்டுரங்கா

43ம் பாட்டு

என்ன தவம் செய்தனை யசோதா
எங்கும் நிறை பரப்ரம்மம் அம்மா என்றழைக்க (என்ன)

ஈரேழு புவனங்கள் படைத்தவனை
கையில் ஏந்தி சீராட்டி பாலூட்டி தாலாட்ட நீ (என்ன)

பிரமனும் இந்திரனும் மனதில் பொறாமை கொள்ள
உரலில் கட்டி வாய்பொத்தி கெஞ்ச வைத்தாய் தாயே (என்ன)

சனகாதி முனிவர்கள் தவம் செய்து சாதித்ததை
புனிதமாதே எளிதில் பெற - (என்ன)

44ம் பாட்டு

ராமா ராமா ராமா என்று நாமம் சொல்லிப் பாடனும்
நாவிலே வராது போனால் நல்லவரோடு சேரனும்
எண்ணி எண்ணிப் பார்க்கனும் ஏகாந்தமாய் இருக்கணும்
என்றும் அவன் சொரூபத்தில் ஈடுபட்டிருக்கணும் (ராமா)

கிருஷ்ணா கிருஷ்ணா கிருஷ்ணா என்று பஜனை செய்து பாடனும்
பஜனை செய்ய வாராவிட்டால் பக்தரோடு சேரனும்
விட்டல விட்டல விட்டல என்று கையைத் தட்டிப் பாடனும்
கையைத் தட்ட வாராவிட்டால் கூட்டத்தோடு சேரனும்(ராமா)

கெஞ்சிக் கெஞ்சி அவன்பாதம் தஞ்சமாய் இருக்கணும்
வஞ்சமின்றி அவன் நாமம் வாயாரப் பாடனும்
கோவிந்தாவும் போடனும் கோபாலாவும் கூவணும்
விட்டலனின் சரணங்களை கெட்டியாய் பிடிக்கணும் (ராமா)

45ம் பாட்டு

பக்தர் போற்றும் பத்ராஜலனே நாராயணா
ஹரி ஓம் நாராயணா
பாருலாவும் பத்தவதாரா பரமதயாளா
தாருலாவும் தத்துவ தீரா தரும குணாளா (பக்தர்)

கேசவா ஹரி கிருதாரி கெருடவாகனா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

மாசில்லாத இதய விஹாரி ஜெகன்மோகனா
தேசுலாவும் ராதா ரமணா நாராயணா (பக்தர்)

மறைவில் தோன்றும் மாயவன் நீயே மாதவ கிருஷ்ணா
குறைவிலாத கோபியர் மகிழும் கோகுலகிருஷ்ணா
முரளிகான இன்பமுலாவும் மோஹன கிருஷ்ணா
முரளி மோஹன கிருஷ்ணா, முரளிமோகன கிருஷ்ணா (பக்தர்)

உலகம் போற்றும் பிருந்தாவனமே உலவிடுந்தீரா
கலையுலாவும் கண்ணா மனம் கனிந்திட வாராய்
நளினமேவும் வணிதையர் புகழும் நந்தகுமாரா (பக்தர்)

46ம் பாட்டு

கோபாலா கோபாலா கோகுல நந்தன கோபாலா
நந்தநந்தனா கோபாலா நவநீதசோரா கோபாலா
ராதாருக்மணி கோபாலா ரமணிகலோலா கோபாலா

ஆபத் பாந்தவா கோபாலா அனாத ரட்சக கோபாலா
தீனதயாளா கோபாலா தீனபந்துலு கோபாலா
கம்சமர்த்தனா கோபாலா கருடவாகனா கோபாலா
காண்டிபன் மைத்துனா கோபாலா காளிங்க நர்த்தனா கோபாலா

பட்சி வாகனா கோபாலா பாண்டவர் தூதா கோபாலா
கோதண்டராமா கோபாலா கோபியர் கண்ணா கோபாலா
பக்தவச்சலா கோபாலா பரமதயாளா கோபாலா
கோவர்த்தனகிரி கோபாலா குடைபிடித்தவா கோபாலா

47ம் பாட்டு

ஸ்ரீராமச்சந்திரா ஸ்ரீகோகுலகிருஷ்ணா ஸ்ரீராமச்சந்திராஸ்ரீகோகுல கிருஷ்ணா
கௌசலையின் திருக்குமாரா ஸ்ரீராமச்சந்திரா
தேவகியின் திருக்குமாரா கோகுல கிருஷ்ணா

வில்லும் அம்பும் கொண்டவனே ஸ்ரீராமச்சந்திரா
புல்லாங்குழல் கொண்டவனே ஸ்ரீ கோகுலகிருஷ்ணா
விசுவாமித்தரர் வேள்விகாத்த ஸ்ரீராமச்சந்திரா
பாண்டவர்க்கு தூது சென்ற ஸ்ரீகோகுல கிருஷ்ணா
தாடகை சம்மாரம் செய்தாய் ஸ்ரீராமச்சந்திரா
பூதகி சம்மாரம் செய்தாய் ஸ்ரீகோகுலகிருஷ்ணா (ஸ்ரீராமச்சந்திரா)

சீதாதேவியை மணந்தவனே ஸ்ரீராமச்சந்திரா

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

ராதாருக்மணி மணந்தவனே ஸ்ரீகோகுலகிருஷ்ணா
ஒருவனுக்கு ஒருத்தி என்றாய் ஸ்ரீராமச்சந்திரா
உலகம் வாழ கீதை சொன்னாய் கோகுலகிருஷ்ணா (ஸ்ரீராமச்சந்திரா)

அகலிகையின் சாபம் தீர்த்தாய் ஸ்ரீராமச்சந்திரா
நளகுபேர சாபம் தீர்த்தாய் கோகுலகிருஷ்ணா
வாலிமோட்சம் தந்தவனே ஸ்ரீராமச்சந்திரா
கர்ணமோட்சம் தந்தவனே கோகுலகிருஷ்ணா(ஸ்ரீராமச்சந்திரா)

48ம் பாட்டு

தசரதன் தனையா –ஜானகிரமணா (வைதேகிரமணா)
தரிசனம் தந்தருள் ஹரி பரந்தாமா
கௌசிகன் வேண்டிய வேள்வியை காத்தாய்
தாடகை தன்னை சாய்த்து மடித்தாய் (தசரதன்)

ஜனகர் வில்லை ஏந்தி ஒடித்தாய்
ஜானகி தன்னை திருமணம் புரிந்தாய்
அனுமன் துணை கொண்டு அரக்கரை அழித்தாய்
அன்னை ஜானகியுடன் ஆட்சி புரிந்தாய் (தசரதன்)

49ம் பாட்டு

ஸ்ரீரங்கா...... திருவரங்கா.......
காவிரியின் நடுவினிலே கண்துயிலும் மாயோனே (ஸ்ரீரங்கா)

புள்ளின் வாயை கீண்டவனே பொல்லா அரக்கனை அழித்தவனே
நள்ளிருளலவும் பகலும் நாம் சொல்வோம்
நாராயணணின் திருநாமம் (ஸ்ரீரங்கா)
பச்சை மாமலை போல் மேனி பவளவாய் கமலச் செங்கன்
அச்சுதனே ஆயர் கொழுந்தே அரங்கத்தரவனை பள்ளியானே (ஸ்ரீரங்கா)

50ம் பாட்டு

பராங்குச தாசர் கீர்த்தனை:

எத்தனை தூரமோ அறியேன் பண்டரிபுரம்
அறியேன் பண்டரிபுரம் தெரியேன் பண்டரிநாதா
நடக்க நடக்க எந்தன் நாவும் உலருதே
நாமதேவா உன்னைக் காண்பதுதான் எந்நாள் ஐயா
எத்தனை தூரம் அறியேன் பண்டரிபுரம்
எம்பெருமானை நான் காணேன்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

கால்களும் நோகுதே கடும் பசியாகுதே
காட்டில் வாழ்விலங்குகள் கண்டென்னை சீறுதே
பாவ தோஷங்களெல்லாம் பஞ்சு போல் பறந்திட
பண்டரிநாதா உன்னை பணிவதெந்நாளோ ஐயா (எத்தனை)

கோவிலும் மறையுதே கோபுரம் தெரியுதே
கோஷ்டிகள் இடும் சப்தம் கோவிந்தம் புரியுதே
இந்த ஜென்மம் விட்டால் எந்த ஜென்மம் வருமோ
இணையடி தன்னைக் காண எக்காலம் ஆகுமோ

அந்தகனைப் போல அலைவது தர்மமோ
அய்யா திருவேங்கிடதாசன் மேல் வன்மமோ
மாலே உந்தன் மேல் மனம் , மறவாமல் சோருதே
வாசுதேவனே இப்போ வழிதப்பி போகுதே (எத்தனை)

51ம் பாட்டு

(பார்த்தாபசுமரம் மெட்டு)

நாராயணனே தான் இராமனாக வந்தவன்
நம்பும் அடியவர்க்கெல்லாம்- என்றுமே
நன்மையெல்லாம் ஓங்கிடச்செய்வான் (நாராயணனே)

தசரதற்கு மைந்தனாக அவதரித்தானே –அவன்
தாடகையை வதம்புரிந்து தவம் முடித்தானே
ஜனகன்வில்லை எளிதினில் முறித்து வென்ற பின்
ஜானகியை மணம் புரிந்து திரும்பி வந்தானே (நாராயணனே)

பரசுராமன் தவமிழந்து நானிடச் செய்தான்
பாவியன்னை கட்டளையால் கானகம் சென்றான்
பரத்து வாசராதி முனிவர் பாதம் போற்றியே
படகு ஓட்டும் குகனை கண்டு உறவளித்தானே (நாராயணனே)
தேடிவந்தபரதனுக்கு திருவடிதந்தான்
சீதையை கவர்ந்தவனை தேடியே சென்றான்
கழுகினோடு சபரிதனக்கு காட்சியேதந்தான்
கவியரசன் நட்பு கொண்டு வாலியை கொன்றான் (நாரர்யணனே)

அனுமன் தன்னை தூது போக்கி அரக்கரை கொன்றான்
அங்கே அன்புகொண்ட வீடனற்கு அரசுநல்கினான்
அன்னை தன்னை மீட்டு வந்து அயோத்தி நகரிலே
ஆட்சிசெய்து அவனிவாழ அருள்புரிந்தானே (நாராயணனே)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

52ம் பாட்டு

தீராத வினை தீர்க்கும் சீனிவாசா
திருப்பதி மலைவாழும் வெங்கடேசா
ஏறாத மலைமீது ஏறியே வந்தேன்
ஏழுமலை உனைக்கான ஓடோடி வந்தேன்

ஹரிகோவிந்தம் சுவாமி பஜகோவிந்தம்
பஜகோவிந்தம் சுவாமி ஹரிகோவிந்தம் *(தீராத)*

ஆராதனப் பொருளே ஆராதனை செய்தேன்
நாவாரப் பாடியே நானுன்னை தொழுதேன்
பாதார விந்தமே பணிந்தும் நின்றேன்
ஆதாரம் நீ எனவே ஓடோடி வந்தேன்
ஹரீ கோவிந்தம் .... *(தீராத)*

உன்னைவிட தெய்வமும் உலகினில் உண்டோ
உத்தமனே உனை நானும் மறந்ததும் உண்டோ
எத்தர்களை போலநீ ஏமாற்றினாலும்
சத்தியமாய் உன்பாதம் விட்டடிவே மாட்டேன்
ஹரி கோவிந்தம் *(தீராத)*

53ம் பாட்டு

ராமச்சந்திர ரகுவீரா ராமச்சந்த்ர ரணதீரா
ராமச்சந்திர ரகுராமா ராமச்சந்திர பரந்தாமா
ராமச்சந்திர ரகுநாதா ராமச்சந்திர ஜெகன்னாதா
ராமச்சந்திர மமபந்தோ ராமச்சந்திர தயாஸிந்தோ
ராமச்சந்திர மமதைவம் ராமச்சந்திர குலதைவம்

54ம் பாட்டு

அயோத்ய வாஸீகராம் தசரத நந்தன ராம்
பதிதபாவன ஜானகிஜீவன ஸீதாமோகனராம்
தசரத நந்தன ராம் தசமுக மர்த்தன ராம்
பசுபதிரட்சக ராம் பாபவிமோசன ராம்
மணிமய பூஷணராம் மரகத ஸ்யர்மள ராம்
பாகவதப்ரிய ராம் மரகத ஸ்யாமள ராம்
கருணாசாகர ராம் கம்ச விலோசன ராம்
தாடகை ஸம்ஹார ராம் தாரக ப்ரம்மமே ராம்

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

55ம் பாட்டு

கண்ணா கண்ணா ஓடிவா சின்னக் கண்ணா ஓடிவா
புல்லாங்குழலை ஊதியே, கோகுலகண்ணா ஓடிவா (கண்ணா)

தேவகி வயிற்றில் பிறந்தவா தேவிருக்மணி நாயகா
தேவர்க்கெல்லாம் தேவனே துவாரகைபாலா ஓடிவா
குருவாயூரில் நான் தொழும் குன்றையெடுத்த பாலனாய்
கோலமளிக்கும் நாதனே கோகுல பாலா ஓடிவா (கண்ணா)

ஆடும் மயிலின் தோகையை அழகுக்கொண்டையில் சூடியே
ஆனந்தமாக கோபியர் உன்னை காணும் கோலமாய்
உலகம் அளந்த தேவனாய், உத்தமிராதா சமேதனாய்
உரலில் கட்டிய பாலனாய் யசோதைபாலா ஓடிவா (கண்ணா)

56ம் பாட்டு

கொண்டுவந்ததென்ன நீ கொண்டுபோவதென்ன
கண்டுவிட்டதென்ன இனி காணப்போவதென்ன
உண்டு உண்டு உறங்கி நீ தொண்டு கிழவனானாய்
தொண்டு செய்ததுண்டா பிறரை தூண்டி விட்ட துண்டா

57ம் பாட்டு

அன்பில் வழியில் யார் நடந்தாலும் அவனும் ராமனுன் ஒன்று
அழுபவர் கண்களை யார் துடைத்தாலும் அவனும் ராமனும் ஒன்று

மற்றவர்கெல்லாம் நல்வழிகாட்டும் மனிதனும் ராமனும் ஒன்று
பெற்றவர் உள்ளம் பெருமிதம் கொள்ளும் பிள்ளையும் ராமனும் ஒன்று
ஒருமணம் புரிந்து நிறைவுடன் வாழும் ஒருவனும் ராமனும் ஒன்று
அறநெறி கருணை நிறைந்தவன் எவனோ அவனும் ராமனும் ஒன்று
(அன்பின்)

தருமத்தை காத்திட உயிரையும் வழங்கும் தலைவனும் ராமனும் ஒன்று
தன்னலம் துறந்து மண்ணுயிர் காக்கும் வள்ளலும் ராமனும் ஒன்று
மண்வளம் பெருகிட மழைநீர் பொழியும் மேகமும் ராமனும் ஒன்று
பொன்னொளித் திகழும் கதிரவன் என்னும் கீதையும் ராமனும் ஒன்று

58ம் பாட்டு

(என்ன என்ன நினைக்கிது)

சின்ன சின்ன கால்களால் சிங்காரமாய் நடந்து
வான் வண்ணக் கண்ணன் இங்கு வருகின்றான் –தன்
வட்டமுகம் காட்டியிங்கே சிரிக்கின்றான் (சின்ன)

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

புல்லாங்குழல் எடுத்து ஊதிடுவான் –அவன்
பொல்லாகுறும்புகள் புரிந்திடுவான்
வெண்ணெய் உறியினில் இருந்தாலும்– அவன்
விளையாட்டாய் சென்று திருடிடுவான் (சின்ன)

கோபியர்கள் மடிமீது அமர்ந்திடுவான் –அங்கு
கொஞ்சும் மொழி பேசி மகிழ்வளிப்பான்
கண்ணம் கிள்ளி முத்தமிட்டால் களித்திடுவான்–தன்
காலில் சலங்கை கொஞ்ச நடமிடுவான் (சின்ன)

கோகுலத்தில் கண்ணன் ஒரு செல்லப்பிள்ளை–அவன்
கோபியர்கள் மணம் கவர்ந்த சின்னக்குழந்தை
அன்னமென நடந்தே அவன் வருவான்
ஆனந்தத்தை எங்கும் அள்ளி தெளித்திடுவான் (சின்ன)

59ம் பாட்டு

ஏழுமலைவாசனுக்கு கோவிந்தம் போடுவோம்
ஏழைப்பங்காளனுக்கு கோவிந்தம் போடுவோம்
வேங்கட ரமணனுக்கு கோவிந்தம் போடுவோம்
சங்கட ஹரணனுக்கு கோவிந்தம் போடுவோம்

பங்கஜ நயனனுக்கு கோவிந்தம் போடுவோம்
பங்கஜ வதனனுக்கு கோவிந்தம் போடுவோம்
திருப்பதி ராஜனுக்கு கோவிந்தம் போடுவோம்
தினமும் ராஜனுக்கு கோவிந்தம் போடுவோம்(கோவிந்தா)

அலமேலு நாதனுக்கு கோவிந்தம் போடுவோம்
அசலோடு வட்டிகட்டி கோவிந்தம் போடுவோம்
எங்கள் மலை மன்னருக்கு கோவிந்தம் போடுவோம்
எங்கள் குல தெய்வத்திற்கு கோவிந்தம் போடுவோம் (கோவிந்தா)
மலைமேலே ஏறி சென்று கோவிந்தம் போடுவோம்
மனமுருகி நாமெல்லோரும் கோவிந்தம் போடுவோம்
புரட்டாசி சனி தோறும் கோவிந்தம் போடுவோம்
புண்ணிய ஸ்வரூபனுக்கு கோவிந்தம் போடுவோம் (கோவிந்தா)

கருடாத்திரி நாதனுக்கு கோவிந்தம் போடுவோம்
கண் கண்ட தெய்வத்திற்கு கோவிந்தம் போடுவோம்
கோவிந்தா! கோவிந்தா! கோவிந்தா!

கம்ப்யூட்டர் அச்சு
கார்த்திக் கம்ப்யூட்டர்ஸ், செஞ்சி.போன் 04145-222401

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.

Digitization by eGangotri-South Center



Karthick Computers, 9443878038

CC-0. In Public Domain. Cuddalore Collection. TN.